Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 24 ரூபா 16/50
දිනමුරසු වාරමලර් ஒக். 21-27, 2004

# வாரமலர் தினமுரசு

THINAMURASU முரசு 585



## குளு குளு சினிமா

## கருணாவின் புதிய கட்சியின் பின்னணி என்ன?


அலைவது - மதிபூதி

## சமாதான முயற்சிகள் அடுத்த நகர்வு என்ன?

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## பெண்களைக் கவர்ந்த பனி மனிதன்

# ஆன்மீகம்



## உண்மையை உணர்த்தும் குரு

உண்மையான சற்குருவானவர் சீடனது பாசத்தை நீக்கி அவனுக்கு ஞானத்தை அருளுவார். சீடனின் வினைகளைக் களைந்து பிறவித் துன்பத்தை நீக்குவார். சிவானுபவம் ஏதும் இல்லாது வாய்வாதம் பண்ணுவோர் உண்மையான குருவாக மாட்டார்கள். சீடனது குணத்தை அறிந்து மெய்ப்பொருளை உணர்த்த வல்லவனே உண்மையான குருவாவான். சற்குருவினுடைய திருவடித் தீட்சையைப் பெற்றவர்கள் மும்மலங்களும் நீங்கிச் சிவகதி அடைவர்.

சத்தாகிய சிவத்தையும், அசத்தாகிய மாயையையும், சத்தசத்தாகிய ஆன்மாவினதும் இயல்புகளை உயர்த்தி ஆன்மாவையும் முப்பத்தாறு தத்துவங்களையும் சிவத்தோடு சேர்த்து இன்ப வடிவான பிரணவ உபதேசம் செய்யும் தலைவனே அருட்குரு என்று போற்றப்படுகிறான்.

-திருமந்திர நூலிலிருந்து.

## ஆபத்துக் காலத்தின் இரட்சகர்

"ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு. நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமைப்படுத்துவாய்" - சங்கீதம் 50:15. "இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே அடிமையாக இருந்தபோது கொடுமைகளைத் தாங்க முடியாமல் தேவனை நோக்கிக் கூப்பிட்டார்கள். தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டார்" என்று வேதம் சொல்லுகிறது. ஆம், சகோதரனே! சகோதரியே! நம்முடைய தேவன் எம்முடைய பெருமூச்சையும் கேட்கிற தேவனாயிருக்கிறார். ஆபத்துக் காலத்திலே அவரை நோக்கிக் கூப்பிடுகிறபோது, எம்மை விடுவிப்பதற்காக அவர் எதையும் செய்வார். யாத்திராகமம் புத்தகத்தை வாசிக்கிறபோது தேவன் இஸ்ரவேல் ஜனங்களை மீட்டுக்கொள்ள எத்தனையே அற்புதங்களைச் செய்கிறார். மீட்டுக்கொள்கிறார். அதே கர்த்தர்தான் இன்றைக்கும் இருக்கிறார். ஜீவனுள்ள தேவனாக என்றைக்கும் இருக்கிறவராகவே இருக்கிறார். அற்புதங்களின் தேவன். அவர் எம்மை எந்த ஆபத்திலிருந்தும் விடுவிக்க வல்லவராயிருக்கிறார். "நான் உம்முடையவன். என்னை இரட்சியும்" சங்.1 19:94. ஆம் சகோதரனே! நாம் கர்த்தருடையவர்கள். உரிமையோடு கூப்பிடுவோம், உன்னதமானவர் ஆபத்திலிருந்து விடுவிப்பார். ஆமென்.

-சகோ. போல் ஜோன், தெல்தெனிய.

## சிருஷ்டிப்பவன் அல்லாஹ்

நாம் எவ்வாறு அல்லாஹ்வால் படைக்கப்பட்டோம் என்ற வினாவுக்கு விடை, "அவன் உங்களைக் கருப்பைக்குள் தான் நாடுவது போல உருப்படுத்துகிறான்."

அல் குர் ஆன் 3:5

ஆம். அல்லாஹ் தன் திருமறையில் அவ்வாறு கூறுகின்றான். அந்தக் கர்ப்ப காலத்திலிருந்தே அவன் அருள் நம் மீது பொழிய ஆரம்பிக்கின்றது.

சிசுவை தாய் வயிற்றில் தரிக்கத் தளம் தந்தான். அக் கருவறையில் திடுக்கிடாதிருக்க சிசுவின் முகத்திற்கு ஓர் முகமூடியிட்டான்.

இன்னும் செவ்வையாக சாய்ந்துகொள்ள வலப்புறமும், இடப்புறமும் தாய்ச் வயிற்றினுள்ளே சாய்மானங்கள் தந்தான். தாயின் உண்ணும் உணவின் வாடை வீசாமல் இருப்பதற்காக, சிசுவின் முகத்தை தாயின் முதுகுப் புறம் பார்த்திருக்க வைத்தான். இயல்புக்கு ஏற்ற உணவை தாயிடமிருந்து சிசுவுக்கு வெளிப்படச் செய்தான். இவ்வாறு தன் சிருஷ்டியை சிருஷ்டிப்பவன் அல்லாஹ்!

-எம்.சி.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல.582



பரிசுக்குரிய கவிதை

### மனிதா!

கொத்துகின்ற
பாம்பதனை
கொஞ்சியணைத்துக்
கொள்ளுகிறாய்!
உன்னினத்து
உறவினனை
வஞ்சம் வைத்துக்
கொல்லுகிறாய்!

*–ரேணுகா றிபாய்தீன், ஏறாவூர் – 02.*

### நன்றி

என்னினத்தினால் பல
வேளை
வயிறு
காய்ந்திருக்கிறேன்.
உன்னாலே
ஒருவேளை
உணவேனும்
உண்ணுகிறேன்.

*–பூ.சுரேஸ்குமார், கல்முனை.*

### கூட்டாட்சி

பகை கொண்ட
கட்சியெல்லாம்
அமைக்கிறது
கூட்டாட்சி
அதனால் நாமும்
அமைப்போம்
கூட்டாட்சி
என வந்தனரோ
இவர்கள் இருவரும்.

*–ஆர்.சதீஸ், மட்டக்களப்பு.*

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### வெட்கம்

விசப் பாம்புகளையும்
விரோத விலங்குகளையும்
விரும்பி அணைக்கும்
மனிதன்,
வெட்கம் - சொந்தச்
சகோதரங்களை
சுட்டுக் கொல்லுகிறான்!


*–நா.ஜெயபாலன், பிபிலை.*

### நம்பிக்கை

கொள்கை மாறினாலே
கொலை செய்யும்
கொலைகார,
கொள்கை வாதிகளிடையே
கொடூரம் காட்டாமல்
கொஞ்சி விளையாடும்
நச்சுப் பாம்பு
நம்பிக்கைக்குரியதுதான்.

*–சங்கம ஹிஷாம், திருகோணமலை.*

## கவிதைப் போட்டி இல.585



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 27.10.2004

கவிதைப் போட்டி இல.585
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### மனிதனுக்கு உடலெல்லாம் விஷம்

காட்டினிலும் புற்றினிலும் இருந்த
காலம் போதும்
மகிழ்வோடு மனிதர்களோடு
மகிழ்ந்து உறவாடுவோம்.
எம் இனத்தில் உள்ள விஷம்
கொடியதா?
மனித இனத்தில் உள்ள விஷம்
கொடியதா?
என விஷப் பரீட்சை வைப்போம்.
எமக்கு பல்லில் தான் விஷம்
இவர்களுக்கு உடலெல்லாம் விஷம்.

*–லிங்கேஸ்வரன் பவானி, புங்குடுதீவு.*

### நம்பாதே.....!

கடிக்கும் பாம்பை நம்பு
கண்டவுடன் சிரிக்கும்
பெண்ணை நம்பு
தேர்தல் காலத்தில் -
எம்மை
தேடிவரும்
அரசியல்வாதியை
நம்பு - ஆனால்
கூட்டாக இருந்து
குழிபறிக்கும்
மனிதர்களை
நம்பாதே......!

*–லோ.டர்ஷன், ஆரையம்பதி.*

### சாதனை!

கொத்தும் விஷப்
பாம்புகளும்
கொடிய
விலங்குகளும்
மனிதனுக்கு
அன்பை
போதிக்க....
மனிதனோ...
தன் இனத்தை
தானே அழித்து
சாதனை
படைத்துக்
கொண்டிருக்கிறான்.

*–சசிதா நாகேந்திரன், ஆரையம்பதி – 03.*

### தெரிந்து கொள்!

யானையுடன்
உறவும் வேண்டாம்
நாகத்துடன் நட்பும்
வேண்டாம்
புலியிடம் புகலிடமும்
வேண்டாம்
ஒரு அடி சறுக்கின்,
உன்
உயிர் மறு உலகில்
தெரிந்துகொள்.

*–சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.*

### எப்படி தோணுகிறது.....?

மனிதன்
பாம்பை - விட
வில்லங்கமானவன்
அதுதான் - நான்
நச்சுப் பாம்போடு
கொஞ்சி விளையாடுகிறேன்.
என் முத்தம் - பார்க்க
சுயநலமாகவா
தோணுகிறது?

*–காமீம் செய்னுலாப்தீன், கிண்ணியா – 05.*

### நானும் நீயும்!

ஆட்டுவித்தான்,
ஆடுகிறேன்!
சீண்டிப் பார்த்தால்,
தீண்டுகிறேன்!
பயந்து பார்த்ததால்......
பாம்பானேன்!
பழக்கிப் பாரு,
தோஸ்த்தாவேன்!

*-மு.முகைல், திருகோணமலை.*




# உங்கள் பக்கம்

## கோட்டைக்கல்லாறின் குறைகள் நீங்குமா?

கிழக்கு மாகாணத்திலேயுள்ள கோட்டைக்கல்லாறு கிராமத்தின் அவலநிலையைச் சீர்படுத்த அரச அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள் யாருமே முன்வரமாட்டார்களா? என இக் கிராம மக்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

கிராமத்தில் கர்ப்பிணித் தாய்மாருக்கான வைத்திய பரிசோதனை நிலையம் இல்லாததால் வெகுதூரத்துக்கு செல்ல வேண்டியிருக்கிறது.

சவக்காலைக்குச் செல்லும் பாதையிலுள்ள பாலம் சீரற்றிருப்பதால் சவக்காலைக்குச் செல்வதற்கு மக்கள் திகவும் கஷ்டப்படுகிறார்கள்.

கிராமத்திலுள்ள உள் வீதிகள் குண்டும் குழியுமாக இருப்பதன் போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக இருக்கின்றன.

போர் அனர்த்தங்களால் இக் கிராமத்தின் ஆலயங்கள் பலவும் சேதமடைந்துள்ளன. இந்த ஆலயங்கள் புனரமைக்கப்பட வேண்டியிருக்கின்றன.

போதிய வருமானமற்ற ஏழை மக்கள் அன்றாட உணவுக்கே கஷ்டப்படுகிறார்கள்.

இக் கிராமத்து மக்களின் அத்தியாவசியத் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றித் தருவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்யும்படி கிராமத்தை அபிவிருத்தி செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

**எஸ். கிருபாகரன், கோட்டைக்கல்லாறு -02**

# வாசக[ர்] சாலை

## சூப்பர் ஓ சூப்பர்!

ஹாய் முரசே! உனக்காக
ஆசையில் ஓர் கடிதம்.
முள்ளில் மலர்வது ரோஜா
கொடியில் மலர்வது
மல்லிகை
நீரில் மலர்வது தாமரை
என் இதயத்தில் மலர்வது
முரசு
எல்லா நாடுகளிலும் வாழும்
தமிழ்
நெஞ்சங்களில் இடம் பிடித்த
முரசே! உன்னை
வெல்வதற்கு யாருக்கும்
'தில்' இல்லையடி! நீ
எல்லோருடைய
இதயத்திலும் நீங்கா
இடத்தைப் பிடித்துவிட்டாய்.
சிப்பிக்குள் முத்து எடுப்பது
போல் உன்னிலிருந்து
எவ்வளவோ விஷயங்களை நான்
எடுத்துக்கொண்டேன். உன்னில்
அடங்கி உள்ள விலைமதிக்க
முடியாத முத்துக்கள் பல.
தேன் கிண்ணம், சிந்தியா
பதில்கள், கவிதைப் போட்டி,
சிறுகதைகள், சினிமா, பாப்பா
முரசு, பேனா நண்பர் பகுதி என
எத்தனை எத்தனை முத்துக்கள்.
உன்னை வர்ணிக்க
வார்த்தைகளே இல்லை. என்
பிரியமான முரசே! நீ
உலகெங்கும் இன்னுமின்னும்
புகழ் பெற வேண்டும் என
வாழ்த்தி விடை பெறும் இவள் -
முரசின் வாசகி.

*–தேவராஜா – ராசாத்தி, லெபனான்.*

## தேவை உன் சேவை!

அன்பின் முரசே,
நீ சுமந்து வரும் அத்தனை
தகவல்களும் இனியவை.
வாரத்தில் உன்னை
எதிர்பார்த்துக்
கொண்டிருக்கும்
என் போன்ற இளைய
நெஞ்சங்களை என்றும்
மகிழ வைக்கிறாய் - நீ!
உன் சேவை என்றும்
மக்களுக்குத்
தேவையென்று
கூறும் உன் வாசகக்
காதலன்
முல்லை கலை மகன்
நான்.

*-றஸீன் றஸ்மின், ரஹ்மத்புரம்.*

## எதற்கும் அசையாத முரசு!

எதற்கும் அசையாத வண்ண முரசே!
நீ சுமந்து வரும் அத்தனையும்
முத்தான செய்திகளே! வெறுப்பதற்கு
ஏதுமே இல்லை. மாறாக விருப்பத்துக்கே
இன்னும் போதாது. இன,மத, வேறுபாடின்றி
நிமிர்ந்தவனாக தைரியமுடன்
வழங்கும் அரசியல் பக்கம், அதிரடி அய்யாதுரை,
இன்னொருவர் பார்வையில், சிந்தியா பதில், காதிலபூ
கந்தசாமி மற்றும் அனைத்தும் சூப்பரிலும்
சூப்பர். எனவே அன்றாட
அரசியல் நிலைவரம், சுடச்சுடச் செய்தி,
நேயர்களின் ஆக்கம், அனைத்து மத
போதனைகளும்
நிறையவே சுமந்து வந்து
நேயர்களை இன்னும் மகிழ்வூட்ட
தினமுரசை மனதார வாழ்த்துகிறேன்.

*–எஸ்.எல்.எம்.சூர்யா, சவுதி.*


மடல்கள் மற்றும் ஆக்கங்கள்– உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

## சூசை, ரமேஷ், சொர்ணம் குடும்பங்களுடன் இலங்கையை விட்டு வெளிநாடு பயணம்

புலி இயக்கத் தலைவரோடு அண்மைக் காலமாக முரண்பட்டுக்கொண்ட கடற்புலிகளின் தலைவர் சூசை கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் மேற்கொண்ட அவசர முயற்சிகளையடுத்து இலங்கையை விட்டு வெளிநாடொன்றுக்குச் சென்றுள்ளார். அவசர சிகிச்சைக்காக மருத்துவக் குழுவொன்றுடன் சூசை வெளிநாடு சென்றிருப்பதாக இலங்கையின் ஊடகங்கள் தெரிவித்திருந்தன. இது குறித்து நோர்வே தூதரகப் பேச்சாளரிடம் கேட்டபோது, கருத்துக் கூற மறுத்துவிட்டார். மருத்துவக் குழுவோடு சூசையின் மைத்துனரான ரமேஷ், புலி இயக்கத் தலைமையோடு முரண்பட்டுக் கொண்ட சொர்ணம் ஆகியோரும் சென்றுள்ளனராவெனக் கேட்டபோதே அவர் 'நோ கொமன்ற்' (கருத்து எதுவுமில்லை) என்றார். தில்லையம்பலம் சிவநேசன் என்ற இயற்பெயர் கொண்ட சூசையின் சொந்தச் சகோதரியையே மட்டு. - அம்பாறை சிறப்புத் தளபதியாகப் பணியாற்றிய ரமேஷ் திருமணம் புரிந்திருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. கருணாவை மெத்தனமாகக் கையாண்டாரெனவும், புலி இயக்கத் தலைமையின் குற்றச்சாட்டை யடுத்து வன்னிக்கு வரவழைக்கப்பட்ட ரமேஷ் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தார். ரமேஷ் விவகாரத்தை புலித் தலைமை கையாண்ட விதம் குறித்து அதிருப்தியுற்ற சூசையும் சொர்ணமும் உடனடியாக ரமேஷ் விடுவிக்கப்பட்ட வேண்டுமென்றும் இல்லையேல் பாரதூரமான விளைவுகள் ஏற்படுமென்றும் எச்சரித்திருந்தனரென்று வன்னித் தகவல்கள் தெரிவித்தன. புலிகளின் தலைமை நோர்வேயோடு தொடர்பு கொண்டதையடுத்து இலங்கை அரசின் உதவியோடு சூசை, ரமேஷ், இவர்களின் குடும்பத்தினரும் வெளிநாடு சென்றுள்ளனரென்று விமான நிலைய அதிகாரியொருவர் கூறினார்.

இந்த நிலையில் இப் பூசலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சியில் லண்டன் வாழ் தொழில்சார் நிபுணர்களான தமிழர்கள் சிலர் அன்ரன் பாலசிங்கத்தோடு பேசியுள்ளனரென லண்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை ஜெனீவாவிலும் தமிழ்ச்செல்வனைச் சந்தித்து நெருக்கடியைத் தணிக்கும் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது. சூசை - சொர்ணம் விவகாரம் பொய்ப் பிரசாரமென்று புலி இயக்கமும் புலிச் சார்பு ஊடகங்களும் தெரிவித்து வருகின்றபோதிலும், இது வழமையான புலிகளின் பிரசார உத்தி என்கிறார் மாற்றுக் கருத்துக் கொண்ட ஞானசேகரன் என்பவர். கருணா, தான் புலித் தலைமையோடு முரண்பட்டுக்கொண்டதாக கடந்த மார்ச் மாதம் வெளிநாட்டுப் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்திருந்தார். ஆனால், இது அரசாங்கத்தின் பொய்ப் பிரசாரமென தமிழ்ச்செல்வன் மறுத்திருந்தார். கருணாவின் அறிவிப்பு வெளிவந்து ஒரு வாரத்தின் பின்னரே கருணா பிரதேசவாதத்தைக் கிளப்பினார் என்று தமிழ்ச்செல்வன் கூறியிருந்தார் என்றும் ஞானசேகரன் தெரிவிக்கிறார்.

### ஐந்து வருடங்களுக்கு பேச்சுவார்த்தை நீடிக்கும்!

ரணிலின் அரசாங்கத்தோடு புலிகள் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னர் இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையில் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் வெளிநாடுகளில் நடைபெற்றன. இவற்றில் புலி இயக்கத்திலிருந்து பிரிந்துசென்ற கருணா அம்மானும் கலந்து கொண்டார். ஆறாவது சுற்றுப் பேச்சின் பின்னர், "இந்தப் பேச்சுவார்த்தைக்கு என்னதான் முடிவு? என்ன பேசுகிறோமெனத் தெரியவில்லையே" என்று கருணா அம்மான், அன்ரன் பாலசிங்கத்தைக் கேட்டாராம். "கருணா! எங்கட தலைவன், என்னட்ட என்ன சொல்லியிருக்கிறானென்று உனக்குத் தெரியுமே? அவன் அஞ்சு வருசத்துக்குப் பேச்சுவார்த்தையை இழுக்கச் சொல்லியிருக்கிறானடா. இதுக்குள்ள நீ வந்து எப்ப பேச்சுவார்த்தை முடியுமென்று கேட்கிறாய்" என்றாராம் பாலசிங்கம். இவ்வாறு 'ஒன்றுபட்ட போராட்டம்' என்ற தலைப்பில் கருணா வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## "வடக்கு - கிழக்கைப் பிரிப்பதற்கான முன்னோடி நடவடிக்கை"

"இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையில் புலிகளுக்குப் பெரும்பான்மைப் பிரதிநிதித்துவத்தைக் கொடுக்க எந்த அரசு சம்மதிக்கும்? நாம் கேட்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் கொடுக்கக்கூடிய நிலையில் உள்ளார்களா என்று பார்க்க வேண்டாமா? புலிகளின் இந்தக் கோரிக்கை வடக்கையும் - கிழக்கையும் பிரிக்க எடுக்கப்படும் முதல் நடவடிக்கையாக அமையும்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி, பிரபாகரனுக்கு கடந்த 12ஆம் திகதி அனுப்பியுள்ள பகிரங்கக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். 'கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் ஏறக்குறைய சம எண்ணிக்கையில் வாழும்போது இவ்வாறான கோரிக்கை, இணைந்த வடக்கையும், கிழக்கையும் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெறவே வழிசெய்யும். இடைக்கால சபையில் புலிகளுக்குப் பெரும்பான்மை வேண்டுமெனில் இருக்கக் கூடிய ஒரே வழி, சிறுபான்மை இனப் பிரதிநிதிகளை வென்றெடுப்பதே. இடைக்காலத் தீர்வு யோசனை பிரச்சினையைக் கூட்டியுள்ளது மட்டுமன்றி, எமது பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியையும் முடங்கச் செய்துள்ளது" என்றும் அந்த நீண்ட கடிதத்தில் சங்கரி குறிப்பிட்டுள்ளார்.

### வீரப்பன் சுட்டுக் கொலை!

தமிழ்நாடு தர்மபுரி மாவட்டத்தின் எல்லையிலுள்ள பாப்பாரக்கட்டு என்ற கிராமத்தில் கடந்த 18ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். தாக்குதலுக்குத் தலைமை வகித்த டி.ஜி.பி.விஜயகுமார் தெரிவிக்கும் போது சிகிச்சை பெறுவதற்காக அம்புலன்ஸ் வண்டி யொன்றில் வீரப்பன், சேத்துக்குழி கோவிந்தன் மற்றும் ஏனைய மூன்று சகபாடிகளுடன் பயணம் செய்துகொண்டிருந்தபோது, தகவல் கிடைத்து விரைந்த அதிரடிப் படையினர் வீரப்பன் இருப்பதை தீர்மானித்துக் கொள்ள முடியாத நிலையில் அனைவரையும் சரணடையுமாறு கேட்டதாகவும் சில நிமிடங்கள் நிலவிய அமைதியைக் கிழித்துக் கொண்டு வந்த துப்பாக்கிச் சத்தத்தை தொடர்ந்து பதிலுக்கு தாமும் திடீர்த் தாக்குதலை நடத்தியதாக தெரிவித்தார். ஏற்கெனவே மூன்று தடவைகள் சிகிச்சைக்காக அப் பகுதிக்குச் சென்ற வீரப்பன் நான்காவது தடவையாகச் சென்றபோதே சுட்டுக் கொல்லப்பட்டார். சுமார் 30 வருடங்களாக கர்நாடக - தமிழக மாநிலங்களை வீரப்பன் கலக்கி வந்தமை குறிப்பிடத் தக்கது.

# உலக நாடுகளின் அழுத்தம் வெற்றியளிக்கிறது! 20 மாதங்களின் பின் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் சாத்தியம்!!

கடந்த இருபது மாதங்களுக்கு மேலாகத் தடைப்பட்டிருக்கும் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்காக தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய முயற்சிகள் வெற்றியளிக்குமென நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இவ்வேளை ஐரோப்பிய மற்றும் ஸ்கண்டிநேவிய நாடுகளுக்கான மூன்று வார கால சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவிடம் புலிகள் பேச்சுவார்த்தைக்கு மீளத் திரும்ப வேண்டுமென்ற அழுத்தம் பல நாடுகளாலும், சர்வதேச அமைப்புகளாலும் கொடுக்கப்பட்டிருப்பதாக லண்டன் செய்திகள் தெரிவிக்கின்றன. புலிகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மதித்து நடக்க வேண்டுமென்றும் பேச்சுவார்த்தைக்கு மீளத் திரும்ப வேண்டுமென்றும் ஸ்கண்டிநேவிய நாடுகளும் கனடா, அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகளும் அழுத்தம் கொடுத்து வருகின்றன. அமெரிக்கா, பிரிட்டன், கனடா, இந்தியா ஆகிய நாடுகளில் புலி இயக்கம் தடை செய்யப்பட்டிருப்பதால் புலிகளின் அரசியல் விவகாரக் குழுக்கள் அங்கு செல்ல முடியாதென்பது குறிப்பிடத்தக்கது. லண்டன் சென்று அன்ரன் பாலசிங்கத்தையும் புதுடில்லிக்குச் சென்று இந்தியத் தலைவர்களையும் சந்தித்துப் பேசிய நோர்வே அனுசரணையாளர்கள் இந்த நாட்டுத் தலைவர்களின் விருப்புகளைப் புலி இயக்கத் தூதுக் கோஷ்டியினரிடம் தெரிவித்துள்ளனர். சுவிற்ஸர்லாந்து, பின்லாந்து போன்ற நாடுகளிலும் மனித உரிமை அமைப்புகளும் அரசாங்க நிறுவனங்களும் விட்டுக்கொடுப்போடு பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்புமாறு வலியுறுத்தியுள்ளனர். இலங்கை அரசாங்கம் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைக்குப் பதிலான மாற்று யோசனைகளைத் தயாரித்திருக்கும் இந்த நிலையில் அரசின் யோசனைகளையும் புலிகளின் யோசனைகளையும் அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கலாமென்றும் இரு தரப்புகளுக்கும் அழுத்தம் கொடுக்கப்படுகிறது. இடைக்காலச் சபை பற்றியே பேசுவோமென்று தமிழ்ச்செல்வன் ஜெனீவாவில் அடித்துக் கூறியிருக்கும் அதேவேளை, புலிகளின் பிரதி அரசியல்துறைப் பொறுப்பாளர் தியா மாஸ்டர், "பேச்சை ஆரம்பித்த பின்னர் அரசின் யோசனைகள் பற்றிப் பரிசீலிக்கலாம்" எனக் கூறியிருப்பது பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதிலுள்ள முட்டுக்கட்டையை நீக்குவதற்கு உதவலாமென அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

## சேது திட்டத்தால் முல்லைக் கடலுக்கும் வசதியாம்

இந்தியா முன்வைத்திருக்கும் சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்தால் இலங்கை பெரும் சமூக, பொருளாதார சூழல் மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியேற்படுமென்று எமது நாட்டில் விசனம் தெரிவிக்கப்படும் இவ்வேளையில், இலங்கையின் வட பகுதிக்கும் தமிழகத்துக்குமிடையிலான புராதன கடற்போக்குவரத்துக்குப் புத்துயிரளிக்க இத் திட்டம் உதவுமென்கிறார். கலாநிதி எஸ்.பத்மநாதன். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகப் பணிபுரிபவர் இவரென்பது குறிப்பிடத் தக்கது. சேது சமுத்திரத் திட்டத்தால் இலங்கையின் பல துறைமுகப் பகுதிகள் பாதிக்கப்படுமென்றும், இலங்கைக்குக் கப்பல் போக்குவரத்தினால் கிடைக்கும் வருமானம் வீழ்ச்சியடையுமென்றும் எமது நாட்டில் விமர்சனம் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் வடக்கிலும், வட மேற்கிலுமுள்ள எமது புராதன துறைமுகங்களுக்கு மீண்டும் புத்துயிரளிக்கப்படுவதோடு வருமானமும் அதிகரிக்குமென்கிறார் கலாநிதி பத்மநாதன்.

தலைமன்னார், காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களிலுள்ள புராதன துறைமுகங்களின் பயன்பாட்டை சேது சமுத்திரத் திட்டம் அதிகரிக்கச் செய்யும் என்கிறார் பத்மநாதன். வன்னியிலுள்ள முல்லைத்தீவுக் கடற்பகுதியும் பொலிவு பெறலாம் என்கிறார் அவர். இதேவேளை பாக்கு நீரிணை கடற்பரப்பில் பந்தோபஸ்து நடவடிக்கைகளை இரு நாடுகளும் அதிகரிக்கக்கூடிய சாத்தியம் உண்டென்றும் வன்னியிலுள்ள ஊடகவியலாளரொருவர் கூறுகிறார்.

## ஜேர்மன் அதிபருக்கு ஆனந்தசங்கரி கடிதம்

"அரசுக்கும் புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஓர் ஆயுதக் குழு தன்னை பலப்படுத்திக் கொள்ள வாய்ப்பாக அமைந்தது. இந்த ஒப்பந்தத்தின்படி ஏனைய ஆயுதக் குழுக்கள் நிராயுதபாணிகளாக்கப்பட்டன. இதனால் இக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் உயிராபத்துக் களை எதிர்நோக்கியுள்ளனர். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் இதுவரை 250க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். எனவே, ஜேர்மனியில் தஞ்சம் புகுந்துள்ள தமிழ் மக்களை இலங்கைக்குத் திருப்பினுப்ப வேண்டாம்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கோரியுள்ளார். ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் அதிபருக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற தேர்தல் மோசடிகள் குறித்தும் அவர் விளக்கியுள்ளார்.

### கிங்ஸ்லி இராசநாயகம் சுடப்பட்டார்

இலங்கையின் 13ஆவது பாராளுமன்றத் பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட கிங்ஸ்லி இராசநாயகம் 19.10.2004 அன்று மாலை மட்டக்களப்பிலுள்ள அரசடி எனும் இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். தமிழரசுக் கட்சியில் போட்டியிட்ட அவர் பிரபா - கருணா விரிசலைத் தொடர்ந்து போட்டியிடாது ஒதுங்கிக்கொண்டார். கருணா ஆதரவாளரான இவரது கொலைக்கு வன்னிப் புலிகளே காரணமென்று அவரது உறவினர் ஒருவர் தெரிவித்தார்.

### சிங்கள வாலிபர் சரண்

முல்லைத்தீவில் தான் தடுத்துவைக்கப்பட்டதாகவும் அங்கிருந்து தப்பியோடி வந்துவிட்டதாகவும் கூறி ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடியில் சரணடைந்த சிங்கள வாலிபர், அவரது சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். முல்லைத்தீவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளின் உதவியுடனேயே தான் ஓமந்தைக்கு வந்து சேர்ந்ததாகவும் அவர் அக கடிதத்தில் தெரிவித்தார். தொழில் நிமித்தம் முல்லைத் தீவுக்குச் சென்ற தன்னை உளவாளியென்ற சந்தேகத்தில் கைது செய்தனரென்றும் அந்த வாலிபர் தெரிவித்தார். கடந்த 12ஆம் திகதி இவர் சோதனைச் சாவடியில் சரணடைந்தமை குறிப்பிடத் தக்கது.

## இந்திய ஆயுதங்கள் விரைவில் கொழும்புக்கு

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் இன்னும் சில தினங்களில் கைச்சாத்திடப்படுவதற்கான இறுதி வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாக இந்திய பாதுகாப்புத்துறை அதிகாரியொருவர் தெரிவித்தார். இந்த ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கென இந்திய பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த மூன்று உயரதிகாரிகள் இலங்கை வந்திருந்தனர். கடந்த 19ஆம் திகதியிலிருந்து 21ஆம் திகதி வரை கொழும்பில் பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் இவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். இலங்கை - இந்திய கூட்டுப் புலனாய்வு மற்றும் கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கைகள் பற்றி இரு நாட்டு அதிகாரிகளும் நீண்ட நேரம் ஆராய்ந்தனரென்று பெயர் குறிப்பிட விரும்பாத இந்திய அதிகாரி தெரிவித்தார். கடற்படைத் தளபதியும் கூட்டுப்படைத் தளபதியுமான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கோட்டேகொட ஆகியோருடனும் இந்திய அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். பலாலி விமானத் தளத்தை முன்னுரிமை அடிப்படையில் நவீனமயப்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது. கொழும்பிலிருந்தும் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் துருப்புகளை விரைவாகப் பலாலிக்குக் கொண்டுசெல்லக் கூடிய நவீன ரக விமானங்களை இந்தியாவிடமிருந்து கடனடிப்படையில் கொள்வனவு செய்வது குறித்தும் ஆராயப்பட்டது. இந்தியாவிடமிருந்து கடலோர ரோந்துப் படகுகள், செடாக் ஹெலிகொப்டர்கள், வான் பரப்புப் பாதுகாப்பு ஆட்டிலரிகள், ரொக்கட் ஏவுகணைகள், ரி-62 ரக ஆயுதங்கள், இராணுவ ட்ரக்குகள், ஜீப்புகள் ஆகியவற்றைப் பெறுவதற்கான பேச்சுகள் வெற்றிகரமாகப் பூர்த்தியடைந்திருப்பதாக இலங்கைப் பாதுகாப்புப் படை அதிகாரியொருவர் தெரிவித்தார். முன்னாள் இலங்கை - இந்தியப் பிரதமர்கள் ரணில் விக்கிரமசிங்கவும் ஏ.பி.வாஜ்பாயும் கடந்த வருடம் இக் கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கான ஆரம்பப் பேச்சுவார்த்தைகளை நடத்தியமை குறிப்பிடத் தக்கது.

### தொடரும் கொலைகள்

மட்டக்களப்பு, பாரதிபுரம் ஐயங்கேணி என்ற இடத்தில் கடந்த 16ஆம் திகதி இரவு வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த கிருஷ்ணராஜா என்ற 35 வயது இளைஞர் இனந் தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார். ஒரு பிள்ளைக்குத் தந்தை யான இவர், முன்னர் புலி இயக்கத்தில் இணைந்து செயற்பட்டவரென்றும் பின்னர் திருமணம் புரிந்து இயக்கத்தை விட்டு விலகியிருந்தவரெனவும் கூறப்படுகிறது. குடும்பப் பிரச்சினை காரணமாக மனைவியை விட்டுப் பிரிந்த இவர், மீண்டும் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து அதன் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றி வந்தவரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மட்டக்களப்பு, இருதயபுரத்திலுள்ள தனது வீட்டிலிருந்து இரு நாட்களுக்கு முன்னர் அழைத்துச் செல்லப்பட்ட தம்பிப் பிள்ளை பாக்கியநாதன் என்ற 24 வயது இளைஞரின் சடலம் கால்கள் சங்கிலியால் கட்டப்பட்ட நிலையில் கடந்த 18ஆம் திகதி கண்டுபிடிக்கப் பட்டது.

### இலங்கைக்கு முதலிடம்

உலகிலுள்ள நாடுகளோடு ஒப்பிடுகையில் இலங்கையில் தற்கொலை செய்துகொள்ளும் பெண்களின் விகிதாசாரம் மிக அதிகமாக இருப்பதாகவும் இலங்கைப் பெண்களே தற்கொலையில் முதலிடம் வகிப்பதாகவும் தென்னிலங்கையின் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் பத்யெநாயக்கா தெரிவிக்கிறார். இலங்கையில் அதிகமாகத் தற்கொலை செய்யும் பெண்களின் எண்ணிக்கையில் புத்தளத்திலுள்ள தனமல்வில என்ற இடமே முதலிடம் வகிப்பதாகவும் இதற்கு அடுத்தபடியாக அங்குணுகொலபெலச இரண்டாவது இடத்தை வகிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### இலங்கை மக்களுக்கு அரசியல் தெரியாதாம்

இலங்கையிலுள்ள பெரும்பாலான மக்களுக்குப் போதிய அரசியல் அறிவு கிடையாது. அதனால் இந்த நாட்டில் அரசியல் பிரச்சினைகள் தொடர்ந்தும் தீர்வின்றி இழுபட்டுச் செல்கின்றன என்று ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கலாநிதி கறோலா ஸ்ரீன் தெரிவித்தார். யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் ஜேர்மன் அரசின் உதவியுடன் நடத்தப்படவுள்ள அரசியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான அங்குரார்ப்பண விழா கடந்த வாரம் நடைபெற்றபோதே அவர் இக் கருத்தைத் தெரிவித்தார்.

**தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரி புலி இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதம் அடுத்த வார தினமுரசில் பிரசுரமாகும்**

# முரசம்

## சிறுவர் தினமும் சிறுவர்களின் நிலையும்

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

**சிறுவர் தினத்தை முன்னிட்டு இம் முறை நாட்டில் அரசாங்கம் பல கொண்டாட்டங்களை நடத்தியது. இத்தகைய கொண்டாட்டங்கள் சிறுவர்களை அக் கொண்டாட்டங்களின்போது மட்டும் மகிழ்ச்சிப்படுத்துவதுடன் நின்றுவிடுமேயானால் அது பயனுடையதல்ல. மாறாக, சிறுவர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் திட்டங்களையும், சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்களையும், அவற்றை உடனடியாகவும் முறையாகவும் அமுலாக்கும் நடைமுறைகளையும் ஏற்படுத்துவதொன்றே பயனுள்ளதாகும். இன்று சிறுவர்களின் உரிமைகள் பற்றி சிறுவர்களுக்கு மட்டுமன்றி, வளர்ந்தோருக்கும் தெரியாத நிலையே உள்ளது. பல தொலைக்காட்சி விளம்பரங்களிலும் சிறுவர் உரிமைகள் மீறப்படும் வகையிலான அம்சங்கள் உள்ளதை எமது ஊடகங்களும் கூடக் கண்டு கொள்வதாக இல்லை. சிறுவர்களைப் பாரிய அளவு உளவியல் ரீதியாகப் பாதிக்கும் பல தொலைக்காட்சி ஒளிபரப்புகள் தாராளமாக நிகழ்ந்தபடியிருக்கின்றன. எமது பாடசாலைகளில் கூட சிறுவர்களை நடத்தும் முறை நடைமுறையில் செம்மையாக்கப்படவில்லை. இன்னமும் அச்சுறுத்துவது, அடிப்பது, கடுமையான உடல் உபாதைக்குட்படும் தண்டனைகளை வழங்குவது, அவர்களின் உள்ளம் பாதிக்கப்படக்கூடியவாறு ஏசுவது போன்ற சிறுவர் உரிமை மீறல்கள் கல்விக் கூடங்களிலே தாராளமாக நடந்தபடியிருக்கின்றன. எமது பெற்றோரும் கூடச் சிறுவர் பராமரிப்புப் பற்றி அறிவுறுத்தப்படுவதில்லை. பெற்றோரின் நடவடிக்கைகளால் சிறுவர்களுக்கு ஏற்படும் மனப் பாதிப்புகள் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. உண்மையில் சிறுவர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதை விட அவர்களின் பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும்தான் பிரதானமாக விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும். வறிய குடும்பத்துச் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் நிலைமை காணப்படுகிறது. இங்கு வேலை வழங்குபவர்களை மட்டும் சட்டங்களால் தடுப்பதில் எவ்வித பயனும் இல்லை. இச் சிறுவர்கள் ஏன் வேலைக்குச் செல்ல வேண்டியுள்ளதென்பதை ஆராய்ந்து அத்தகைய குடும்ப நிலைமையை மாற்றியமைப்பதற்கான வழி வகைகளைக் கண்டு நடைமுறைப்படுத்துவதே உண்மையில் இதற்குத் தீர்வு. ஆனால், வறுமையான மக்களைப் பெருவாரியாகக் கொண்ட இலங்கை போன்ற நாடுகளில் இதை எப்படிச் சாத்தியப்படுத்தலாமென்பதுதான் கேள்வி. சிறுவர் உரிமை மீறல்களில் இன்றுள்ள மிகப் பாரதூரமான விடயம் என்னவென்றால் சிறுவர்களை யுத்த நடவடிக்கைகளில் பயன்படுத்துவது, சிறுவர்களைப் படையணிகளில் திரட்டுவது, அவர்களது சிந்தனையை மூளைச் சலவைகளின் மூலம் சில அமைப்புகளின் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக மாற்றியமைப்பது என்பனவாகும். இது குறித்து ஐக்கிய நாடுகள் சபை மிகவும் பாரதூரமான விடயமாகக் கருதிச் செயலாற்றி வருகிறது. இலங்கை இத்தகைய போக்குகள் மிகவும் மலிந்த ஒரு நாடாகிவிட்டது. குறிப்பாக, இலங்கையில் நிகழும் பிரிவினைப் போராட்டத்தில் சிறுவர்கள் மிக வசதியான பகடைக்காய்களாக மாறியுள்ளார்கள். பல தாக்குதல்களிலும் சிறுவர்களே பலியாகியும் உள்ளார்கள். இத்தகைய அமைப்புகளில் சிறுவர்களாகச் சேர்ந்தவர்களின் மனவளர்ச்சி - அவர்கள் நாளடைவில் உடல் ரீதியாக வயதுவந்தவர்களாக ஆகியபோதிலும் - இயல்பானதாக இருக்க மாட்டாது என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். இங்கு உணர்ந்துகொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் சிறுவர்களது உரிமைகளை ஏனையவர்கள் தமது கையில் எடுத்துக்கொள்வதென்பது எவ்விதத்திலும் நியாயமில்லை என்பதுதான். உணர்வோமா?**

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

நரன்

# சமாதான முயற்சிகள் அடுத்த நகர்வு என்ன?

சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பற்றிய அக்கறை இப்போது மீண்டும் முனைப்புப் பெற்றுள்ளது. அமெரிக்காவில் நிகழ்ந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாட்டில் புலிகளுக்கு அழைப்பு விடாததையடுத்து நிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தை இன்னும் முடங்கிய நிலையிலேயே இருந்து வருகிறது. புலிகள் இடைக்கால சுயாட்சி அதிகாரசபை என்ற வரைபை முன்வைத்து தமக்கென ஒரு இடைக்கால நிர்வாகத்தை வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், அந்த இடைக்கால சுயாட்சி அதிகார சபை இலங்கையின் தற்போதைய யாப்பினுள் வழங்க முடியாத ஒன்றாக உள்ளதுடன், அதன் சில பகுதிகள் இலங்கையின் இறைமைக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும் மறுதரப்பில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிலையில்தான் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கான வழிவகைகள் எதுவுமில்லாத முட்டுக்கட்டை நிலை தொடர்கிறது. இப்படியான நிலையை இன்னும் மோசமாக்கும் வகையில் யுத்த நிறுத்த மீறல்கள் நிகழ்ந்து வருகின்றன. அதிலும் அண்மைக்காலமாக மிக அதிகரித்த அளவில் நிகழ்ந்தேறி வருகின்ற அரசியற் படுகொலைகள் இலங்கைச் சமூகத்தை மோசமாக அச்சுறுத்தியுள்ளதுடன் சர்வதேச சமூகத்தையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

பேச்சுவார்த்தையற்ற நிலையில், கட்டுப்பாடற்ற அளவில் படுகொலைகள் மட்டுமே அதிகரித்துச் செல்கின்றமையானது எத்தகைய அபாய நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதை அரசியல் அவதானிகள் உணர்ந்துள்ளனர். அது மீண்டும் ஒரு யுத்தத்துக்கு வழி வகுத்துவிடுமென்ற அபாயம் அதிகரித்த அளவில் எழுந்திருந்தது. அதேவேளை, இத்தகைய படுகொலைகளால் ஈட்ட முனையும் விளைவு சமூகத்தை மௌனமாக்கிவிடும் நிலைக்கு இட்டு வந்திருந்தது.

மறுபுறத்தில் சமாதானத்தை விடப் படுகொலைகள் ஒன்றும் பெரிய விடயமில்லை என்ற வகையிலான ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் போக்கும் வளரலாயிற்று. யுத்தம் இல்லாதிருப்பதென்பது படுகொலைகளைச் சகித்துக்கொள்வதற்குப் பரிகாரமாக உணர்த்தப் பட்டது. மேலும் படுகொலைகளை பேச்சுவார்த்தைகளுக்கு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் சாதனமாக எடுத்துக் காட்டவும் இவர்கள் முனைந்தார்கள். இதேவேளை, இன்னும் சிலர் பத்திரிகைகளில் இத்தகைய படுகொலைகளை ஒரு களையெடுப்பு யுத்தமென வர்ணித்து அதன் மூலம் இவை யாவும் இச் சமூகம் விடுதலை பெறுவதற்கான செயற்பாடுகளே என்பதாக எடுத்துரைக்க விழைந்தனர்.

எவ்வாறெனினும், இத்தகைய நிலைமையை அனுமதிக்க முடியாதென சர்வதேச சமூகம் கண்டுகொண்டது. இதனை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவருவதற்கான புதிய அழுத்தங்களை அவை மேற்கொள்ள முன்வந்துள்ளன. புலிகளின் உயர்மட்டக் குழுவொன்று பிரசாரங்களுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கும் வேளை இவர்களைச் சந்தித்த வெளிநாட்டு இராஜதந்திரிகளாலும், மனித உரிமை அமைப்புகளாலும் அவர்களுக்குக் கடுமையாக எடுத்துரைக்கப்பட்டது.

புலிகள் தமக்கு இப் படுகொலைகளுடன் தொடர்பில்லையெனத் தொடர்ந்து சாதித்து வருவதுடன், இக் கொலைகளை மாற்றுக் கட்சிகளே தமது உள் முரண்பாடுகளின் நிமித்தம் செய்கின்றனவெனத் தெரிவித்தும் வருகின்றனர். ஆனால், அத்தகைய பாரிய அளவிலான தொடர் கொலைகளுக்கு வழிசமைக்கும் உள் முரண்பாடுகளெதுவும் மாற்றுக் கட்சிகளுக்குள் தோன்றியிருப்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை, புலிகள் மத்தியிலேயே அத்தகைய பாரிய உள் முரண்பாடுகள் அண்மைக்காலத்தில் மிக வெளிப்படையாக ஏற்பட்டிருந்தன. அவற்றின் தொடர்ச்சியாகவும், அவற்றுக்குப் புறம்பாகவும் மேலும் முரண்பாடுகள் அவ் அமைப்புக்குள் ஏற்பட்டு வருவதாகவும் செய்திகள் வெளிவருகின்றன.

இவற்றை விட சில படுகொலைச் சம்பவங்கள், படுகொலை முயற்சிகள் தொடர்பாக அவற்றின் கொலையாளிகள், சூத்திரதாரிகள், அவற்றுக்கு உதவியவர்கள் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுமுள்ளன. அவற்றில் சிலர் ஒப்புதல் வாக்குமூலங்களையும் கொடுத்துள்ளார்கள். அண்மையில் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கொல்ல முயன்று தோல்வியில் முடிந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக, அதில் உடனிருந்து செயற்பட்ட பெண்ணொருத்தி ஸ்தலத்திலேயே கைதுசெய்யப்பட்டு, அவரிடமிருந்து அக் கொலை முயற்சி பற்றிய பூரணமான தகவல்கள் ஒப்புதல் வாக்குமூலங்களாகப் பெறப்பட்டிருந்ததை இவ் வகையில் குறிப்பிடலாம். சில மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் கருணா அணி முக்கியஸ்தரான சச்சி மாஸ்டர் என்பவரைக் கொன்ற கொலையாளியும் அங்கு வைத்துக் கைதுசெய்யப்பட்டிருந்தார். இது போலவே சில காலத்துக்கு முன்னர் தெஹிவளை பொலிஸ் நிலையத்தினுள்ளே சென்று உளவுத்துறை அதிகாரியொருவரைக் கொன்ற கொலையாளியும் அங்கு கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டிருந்தார்.

இவர்களின் வாக்குமூலங்கள் மற்றும் ஆதாரங்கள் மூலம் அறியப்பட்ட நம்பகரமான பல தகவல்கள் சர்வதேச நாடுகளின் உளவுத் துறை மற்றும் வெளிவிவகாரத் துறையினருக்கு நன்கு தெரிந்தே இருந்தன. இதனால் அவர்கள் புலிகளின் மறுப்பை அப்படியே ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருக்கவில்லை. அத்துடன் புலிகள் கடந்த காலங்களில் மேற்கொண்ட அரசியற் படுகொலைகளில் பெரும்பாலானவற்றை உரிமை கோரியிருக்கவில்லை. மாறாக மறுத்து அல்லது மௌனம் சாதித்தே வந்துள்ளார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேச்சுவார்த்தைக்கெனச் சென்ற புலிகள், அங்கு மேற்கொண்ட கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் மீதான படுகொலைகளைக் கூட வெளிப்படையாகத் தெரிந்த நிலையிலும் மறுத்தே வந்துள்ளனர். இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால், பாதிக்கப்பட்ட கூட்டணியினர் கூட நெடுங்காலமாக இக் கொலைகளின் சூத்திரதாரிகள் யாரெனக் கூறப் பயந்து மௌனம் சாதித்து வந்ததுதான். அச் சம்பவத்தில் சூடு பட்டு உயிர் தப்பிய மறைந்த தலைவர் சிவசிதம்பரம் கூட உண்மையைச் சொல்லாமலே உயிர்நீங்கும் வரை மௌனித்திருந்து இறந்தார். அண்மைக் காலமாகத்தான் திருமதி அமிர்தலிங்கம், ஆனந்தசங்கரி போன்றோர் இக் கொலைகளுக்குப் புலிகளைக் கண்டிக்க முன்வந்துள்ளார்கள்.

எது எவ்வாறாயினும் இவை எடுத்துக் காட்டுவது என்னவென்றால், புலிகள் தமது இராணுவத் தாக்குதல்களை உரிமை கோருவது போல அரசியற் படுகொலைகளை உரிமை கோருவதில்லை. மாறாக அவற்றை மறுப்பதுதான் வழமை என்பதையே. இந் நிலையில் தற்போதைய அவர்களின் மறுப்புக் கூட வழமையான ஒன்றாகவே புலப்படுவதால் சர்வதேச சமூகத்தினரால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை.

அதனால் அவர்கள், இவ்வாறான படுகொலைகளை நிறுத்திவிட்டதாகவும், சிறுவர் ஆட்சேர்ப்பைக் கைவிட்டுவிட்டதாகவும் புலிகள் தமக்கு நடைமுறையில் நிரூபிக்க வேண்டுமெனவும் வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள புலிகளின் உயர்மட்டக் குழுவினரிடம் நேரிடையாகவே தெரிவித்துள்ளார்கள். தெரிவித்தது மட்டுமன்றி தமது அதிருப்தியை வெளிப்படுத்தும் சில இராஜதந்திர நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்கள்.

டென்மார்க் நாடு புலிகளைப் பயங்கரவாத இயக்கமெனக் கூறித் தடைசெய்யப் போவதாக அறிவித்து, தான் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய யூனியனும் அவ்வாறே தடைசெய்ய வேண்டுமெனக் கோரிக்கை விடுத்திருந்தது. டென்மார்க்கின் தடை அறிவிப்பை தனிப்பட்ட ஒரு நாட்டின் நடவடிக்கையாகக் கொள்ள முடியாது. சர்வதேச நாடுகளின் இராஜதந்திர அழுத்தம் டென்மார்க் மூலமாக மேற்கொள்ளப்படுவதாகவே உணரக்கூடியதாக உள்ளது. அதனால் டென்மார்க்கின் நடவடிக்கைகள் புலிகளிடம் எதிர்பார்த்த திருப்திகர மாற்றங்களை ஏற்படுத்தவில்லையானால் அவை டென்மார்க்குடன் நின்றுவிடாமல் வெவ்வேறு நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்படலா மென்பதும் எதிர்பார்க்கக்கூடிய ஒன்று.

இந் நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குப் பாரிய அச்சுறுத்தலாக எழுந்த அரசியற் படுகொலைகள் சர்வதேச நாடுகளின் அக்கறைக்கு உரியதாகியுள்ள நிலையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான வேறு சில புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதில் இதுவரை இருந்த பாரிய சிக்கல் என்னவென்றால், இப் பேச்சுவார்த்தைகளில் புலிகள், அரசாங்கம் என்ற இரு தரப்பினர் மட்டுமே சம்பந்தப்பட்டிருந்ததுதான். நாட்டின் இனப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட ஏனைய தரப்பினர்கள் எவருக்கும் இதில் இடமிருக்கவில்லை. வடக்கு - கிழக்கில் மற்றொரு சிறுபான்மை இனக் குழுவாக அமைந்துள்ள முஸ்லிம்களது அரசியல் அடையாளமும் அதற்கான பிரதிநிதித்துவமும் கூட இங்கு மறுக்கப்பட்டுள்ளது. இதற்கான எதிர்ப்புக் குரல் முஸ்லிம் சமூகத்தினர் மத்தியில் உரத்து எழுந்து மற்றொரு தலையிடியாக மாறியுள்ளது. அண்மையில் நிகழ்ந்த தனியார் தொலைக்காட்சி விவாத அரங்கொன்றில் கலந்துகொண்ட முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் தனித் தரப்பை உறுதிப்படுத்தும்படி தாம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளதுடன், பேச்சுவார்த்தையை வலியுறுத்தும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தனது வலியுறுத்தலில் முஸ்லிம் தனித் தரப்பை வலியுறுத்தத் தவறியுள்ளதாகச் சுட்டிக்காட்டி அதனை வலியுறுத்தும்படி ரணிலுக்கு மறுநாள் கடிதம் எழுதப்போவதாகவும் தெரிவித்திருந்தார். இதனை அவர் தமிழர் கூட்டமைப்பின் முக்கிய பிரதிநிதியொருவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு முன்னாலேயே தெரிவித்தபோதும் அங்கு கஜேந்திரகுமாரால் அதை மறுத்துரைக்க முடியவில்லை. அவர் அது குறித்து எதுவும் பேசாமல் ஜனாதிபதியைக் குற்றங்காணும் திசையில் மட்டும் பதிலளித்துவிட்டு இருந்துவிட்டார்.

இது எதனை வெளிப்படுத்துகிறதென்றால் இப் பிரச்சினையில் பல்வேறு தரப்பு ஆதங்கங்கள் வெளியே இருக்கின்றன, அவை சரிவரப் பிதிநிதித்துவப்படுத்தப்படாவிட்டால் பிரச்சினைக்கு முறையான தீர்வொன்றைக் காண முடியாது போய்விடலாம் என்பதையே.

முஸ்லிம்கள் மட்டுமன்றி, மலையகத் தமிழர்களின் பிரச்சினைகளும் இனப் பிரச்சினைத் தீர்வில் பிரதானமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். அதற்கு மலையகப் பிரதிநிதிகளே மலையக மக்களின் பிரச்சினைகளை முன்வைக்கக்கூடிய அங்கீகாரங் கொண்டவர்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களின் பிரதிநிதித்துவம் மறுக்கப்பட வேண்டிய அவசியம் என்ன என்பதே இங்கு கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டிய விடயமாகும். அத்துடன் வடக்கு - கிழக்கில் மாற்றுத் தமிழ்க் கட்சிகளின் கருத்துக்களும் அவர்களுக்குள்ள இடங்களும் மறுதலிக்கப்படலாகாது.

இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது தனித்து வடக்கு - கிழக்கு மக்களது பிரச்சினை பற்றியதுதான், அதுவும் தமிழர்கள் பற்றியதுதான், அதுவும் புலிகளுக்கே மட்டும் உரிய விடயந்தான் என்று குறுகிய வரையறைகளை வைத்துக்கொண்டு இவ் விடயத்தில் பரந்த நியாயமொன்றை எதிர்பார்க்க முடியாது. அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டிய அல்லது மீள் வரைவு செய்ய வேண்டிய அளவு பாரிய ஒரு அரசியல் தீர்வையிட்டு ஆராயும்போது அந்த அரசியலமைப்பு மாற்றம் இனப் பிரச்சினையின் சகல தரப்பினரையும், திருப்திப்படுத்தக்கூடியதாகவும், நாட்டில் இனிமேல் இத்தகைய பிரச்சினையேதும் இல்லாதிருப்பதற்கு வழி காணக்கூடியதாகவும் அமைய வேண்டும். ஏனெனில், நாட்டின் அரசியலமைப்பைத் திரும்பத் திரும்ப மாற்றிக்கொண்டிருக்க முடியாது. வடக்கு கிழக்குத் தமிழருக்காக ஒருதடவை, முஸ்லிம்களுக்காக இன்னொருமுறை, மலையகத் தமிழருக்காக மற்றொரு தடவையென அரசியலமைப்பை மாற்ற முடியாது. ஒருமுறை மாற்றும்போதே சகலவற்றையும் தீர்த்துக்கொள்ள விழைய வேண்டும். இதில் நாங்கள்தான் யுத்தம் புரிந்தோம், ஆகவே மற்றவர்கள் கலந்துகொள்ளக் கூடாதென்ற ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது தவறு. ஏனெனில் தீர்வு யுத்தம் புரிந்தவர்களுக்கு மட்டுமல்ல. அது முழு மக்களுக்குமானது. யுத்த மார்க்கத்தைத் தேர்ந்தெடுக்காதவர்கள் அல்லது ஜனநாயக மார்க்கத்தைத் தேர்ந்தெடுத்தவர்கள் அருகதையற்றவர்களென ஒட்டுமொத்தமாக நிராகரிக்க முடியாது.

**நாட்டின் அரசியலமைப்பைத் திரும்பத் திரும்ப மாற்றிக்கொண்டிருக்க முடியாது. வடக்கு கிழக்குத் தமிழருக்காக ஒருதடவை, முஸ்லிம்களுக்காக இன்னொருமுறை, மலையகத் தமிழருக்காக மற்றொரு தடவையென அரசியலமைப்பை மாற்ற முடியாது. ஒருமுறை மாற்றும்போதே சகலவற்றையும் தீர்த்துக்கொள்ள விழைய வேண்டும். இதில் நாங்கள்தான் யுத்தம் புரிந்தோம், ஆகவே மற்றவர்கள் கலந்துகொள்ளக் கூடாதென்ற ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது தவறு. ஏனெனில் தீர்வு யுத்தம் புரிந்தவர்களுக்கு மட்டுமல்ல. அது முழு மக்களுக்குமானது. யுத்த மார்க்கத்தைத் தேர்ந்தெடுக்காதவர்கள் அல்லது ஜனநாயக மார்க்கத்தைத் தேர்ந்தெடுத்தவர்கள் அருகதையற்றவர்களென ஒட்டுமொத்தமாக நிராகரிக்க முடியாது.**

இந் நிலையிலேயே ஜனாதிபதி கூட்டியுள்ள அரசியல் ஆலோசனைச் சபை முக்கியத்துவம் பெறுகிறது. இது இப் பேச்சுவார்த்தை ஒழுங்கமைப்பிலிருந்த குறைபாட்டுக்கு மாற்று வழியில் தீர்வு காண ஓரளவு துணைபுரிவதாக உள்ளது. அதாவது, பேச்சுவார்த்தையை இரு தரப்பினருக்கிடையிலானதாக மேற்கொண்டாலும் அப் பேச்சுவார்த்தையில் ஏனைய தரப்பினர்களது கருத்துக்களையும் எடுத்துச் செல்வதற்கான வழிவகையாக அது உள்ளது.

ஆனால், இதனைத் தமிழ்க் கூட்டமைப்பினர் எதிர்க்கின்றனர். அவர்கள் புலிகள் தவிர்ந்த எவரையும் இனப் பிரச்சினை குறித்துப் பேச்சுவார்த்தையில் கலந்தாலோசிக்கக் கூடாது என்ற வறட்டுத்தனமான கருத்தினடிப்படையிலேயே எதிர்க்கின்றனர். ஆனால், முஸ்லிம், மலையகத்தமிழ், மாற்றுத் தமிழ்த் தரப்புகளின் கருத்துக்கள் என்ன என்று ஆராய்வதில், அதுவும் மற்றொரு களத்தில் ஆராய்வதில் என்ன குறைந்துவிடப்போகிறது என்று அவர்கள் எதிர்க்கிறார்கள் என்பதுதான் புரியவில்லை. பேச்சுவார்த்தைகள் தாமதமாகிவிடுமென்று பொருத்தமற்ற இன்னொரு காரணத்தைக் கூறுகிறார்கள். உண்மையில் இதுவரையிலிருந்த முட்டுக்கட்டை நிலையாலேதான் பேச்சுவார்த்தை தாமதமாகி வருகிறது. அதை நீக்காமல் இந்த அரங்கைக் குற்றம் சாட்டுவது எவ்வித பொருத்தமுமற்றது.

ஐ.தே.க. இவ்வரங்கில் பங்கேற்க மறுப்பதற்கு அதன் அரசியல் நோக்கங்கள் காரணமாக இருக்கலாம். அது ஆட்சியைக் கைப்பற்றுவதை நோக்கமாகக் கொண்டது. அதனால் ஆட்சியிலிருப்பவர்களுக்கு நற்பெயர் ஏற்படுத்திக் கொடுக்கும் முயற்சிகளை எதிர்க்கவே முயலும். அது எதிர்க்கட்சி அரசியலின் இயல்பு. ஆனால் இங்கு தமிழ் பேசும் மக்களின் நிலைமை வேறு. யார் குத்தியாவது அரிசியானால் சரி என்ற நிலைமை. நல்லது யார் மூலம் நடந்தாலும் வரவேற்க வேண்டியவர்கள் நாங்கள்.

கூட்டமைப்பினருக்குச் சந்தேகமேதுமிருந்தால் இந்த அரசியல் ஆலோசனைச் சபையில் பங்குகொள்ளாது இருக்கலாம். ஆனால் அது செயற்பட்டு ஏதாவது நல்ல விளைவைத் தருகிறதா என்று பார்க்கும் வரை மௌனமாக இருந்திருக்கலாம். அதை விடுத்து அவசரக் குடுக்கைத்தனமாக எடுத்த எடுப்பில் நிராகரிப்பது அரசியல் குழப்பவாதிகளின் செயலே.

இதேவேளை ஜனாதிபதி புலிகளின் ஆலோசனைகளுக்குத் தாம் மாற்றுத் திட்டம் ஒன்றைத் தயாரித்திருப்பதாக அறிவித்துள்ளார். அதனையிட்டுப் பேச்சுவார்த்தை நடத்த நடுவர்களை அனுப்பிவைக்கும்மாறு நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சனுக்கும் அவசரத் தகவல் அனுப்பியுள்ளார். இத்தகைய மாற்றுத் திட்டம் குறித்துப் புலிகளிடமிருந்து இரு வகையான பிரதிபலிப்புகள் வந்துள்ளன. தற்போது வன்னியிலுள்ள புலிகளின் அரசியல்துறை முக்கியஸ்தரான தயா மாஸ்டர் என்பவரிடமிருந்து இதற்குச் சாதகமான கருத்து வெளிவந்திருந்தது. அவர் இதனைப் பரிசீலிக்கலாமென்ற கருத்துப்பட சர்வதேச செய்தியூடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

ஆனால், வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனிடமிருந்து, தாம் முன்வைத்த இடைக்கால சுயாட்சி அதிகாரசபை யோசனைகளைத் தவிர வேறெவற்றை முன்வைத்தும் தாம் பேச்சுவார்த்தை நடத்தத் தயாரில்லை என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஜனாதிபதியின் மாற்று யோசனைகளில் என்ன உள்ளடக்கம் உள்ளதென்பது இன்னும் வெளிவரவில்லை. அந்த உள்ளடக்கங்களைப் பரிசீலிக்காமலே நிராகரிப்பது உகந்த அரசியல் அணுகுமுறையாக அமையாது.

இவ்வாறு பார்க்காமலே நிராகரித்தால் சர்வதேச சமூகம் அதன் உள்ளடக்கங்களை ஆராய்ந்து அவற்றை ஏன் புலிகள் ஆராயக் கூடாதென்ற கேள்வியை எழுப்பும். அந் நிலையில் புலிகளோ தாம் முன்வைத்தவற்றையிட்டு மட்டும்தான் பேச வேண்டுமென்று அழுத்தம் தெரிவிப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக அமையாது. ஏனெனில், இரு தரப்புகள் பேச்சுவார்த்தை நடத்துகையில் அதில் இரு தரப்புமே தமது ஆலோசனைகளை முன்வைக்க இடமுண்டு என்பதையே சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளும்.

எனவே, தற்போது சற்றுத் தலைகாட்டும் சில சாதகமான வாய்ப்புகளையாவது நாம் பயன்படுத்திக்கொள்ளப் போகிறோமா அல்லது தவறவிட்டுப் போகிறோமா என்பதே இப்போதுள்ள கேள்வி.

# கருணாவின் புதிய கட்சியின் பின்னணி என்ன?

அலசுவது
**- மதியூகி -**

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் விமோசனத்துக்கான விடுதலைப் பயணத்தில் பல முனைகளிலிருந்து பல விதமான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை தெரிந்ததே. இப் பயணத்தின் ஒரு அங்கமாக எல்லோரும் ஒரு கூட்டுக்குள் ஒழுங்குபடுத்தப்படுவதும், பின்னர் தனித்தனி வழியில் பயணிக்க விரும்புவதும் புதுமையானதில்லை. அந்த வகையில் போராட்ட வரலாற்றில் புலிகள் அமைப்புக்குள் ஏற்பட்ட பிரிவுகளையும் அதன் பின்னர் ஏற்பட்ட விளைவுகளையும் சற்றுத் திரும்பிப் பார்ப்பது நல்லது. இப்படி ஒரு மீளாய்வைச் செய்ய வேண்டிய கட்டாயத்தை தற்சமயம் புலிகள் அமைப்புக்குள் ஏற்பட்டுள்ள விரிசல்கள் ஏற்படுத்தியுள்ளன. புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து தனியான கட்சியொன்றை அமைத்திருக்கும் கருணா, தன் எதிர்காலச் செயற்பாடுகளை எந்த அடித்தளத்திலிருந்து ஆரம்பித்திருக்கிறார்? இந்த ஆரம்பம் எந்தெந்த முனைகளில் செயல் வடிவம் பெறப்போகிறது என்பதைப் பார்ப்பதற்கு முன்னர் ஆராய வேண்டிய சில விடயங்கள் உள்ளன.

புலிகள் அமைப்பிலிருந்து முதன்முதலில் பிரிந்தவர் உமா மகேஸ்வரன். அச் சமயம் அவருக்குப் பெரும் படையும் ஆயுத பலமும் இருந்தது. அதாவது பிரபாகரனால் விரும்பியோ விரும்பாமலோ உடனடியாகக் கட்டுப்படுத்த முடியாமல் போகும் அளவுக்குப் பலமான நிலையில் அப்போது உமா மகேஸ்வரன் இருந்தார். புளொட் அமைப்பாகத் தனியாகப் பிரிந்து சென்றபோது பிளவு குறித்து இரு விதமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இப் பிளவைச் சமரசப் பேச்சுக்கள் மூலம் தீர்த்துக்கொண்டு மீண்டும் இணைந்துகொள்ள வேண்டுமென ஒரு கருத்தும், பலம் பொருந்திய அமைப்புக்கள் தனித்துச் செயற்பட்டாலும் பரவாயில்லை என்று இன்னொரு கருத்தும் பேசப்பட்டன. ஆனால், புலிகள் அமைப்பைத் தவிர, வேறு எவரும் தனியாக இருக்கக் கூடாது என்று புலிகளின் எழுதப்படாத அகராதியில் இருக்கும்போது, புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து சென்று தனியாக இயங்குவதா; இதை வேரோடு அழித்துவிட வேண்டும் என உடனடியாகவே திட்டம் தீட்டப்பட்டது. ஆனாலும் அது உடனடியாகச் சாத்தியப்படவில்லை. இருந்தும் கொலை முயற்சிகள் தொடர்ந்தன.

இந்தியாவின் பாண்டிபஜாரில் புளொட் தலைவர் உமா மகேஸ்வரனையும் கண்ணனையும் தீர்த்துக்கட்டும் திட்டம் தீட்டப்பட்டது. ஒரு பக்கம் உமா மகேஸ்வரனும் கண்ணனும், மறுபக்கம் புலிகளின் தலைவர் பிரபாகரனும், ராகவனும் பரஸ்பரம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டனர். உமா மகேஸ்வரன் இதில் கொல்லப்படவில்லை. பிரபாகரனும் இந்திய அரசால் கைதானார். இதுவே பிரபாகரன் முதன்முதலாகக் கைதுசெய்யப்பட்ட சம்பவமாகும். இச் செய்தி அப்போது தீயாகப் பரவியது.

தமிழர்களின் அபிலாசைகளுக்காக அப்போது மூர்க்கத்தனமாகப் போராடியவரும் போராடுபவர்களுக்குத் தன்னாலான உதவியையும் ஆலோசனையையும் வழங்கி வந்தவருமான தமிழ் மக்களின் தளபதி அமரர் அ.அமிர்தலிங்கம் இந்தியா சென்று பிரபாகரனுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தார். இப்படி ஆரம்பத்திலேயே உறுதுணையாக இருந்த தளபதி அமிர்தலிங்கம் புலிகளாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது கசப்பான வரலாறு. பின்னர் புலிகள் அமைப்புக்கு நிகரான பலமான அமைப்பாக புளொட் இயக்கம் இருந்தது. நீண்டகாலத் திட்டத்தில் புளொட் அமைப்பின் தலைமைகள் கொல்லப்பட்ட நிலையில் புலிகளுக்கு சவால் விடுக்கின்ற நிலை இல்லாவிட்டாலும் அரசியல் ரீதியாகத் தனித்துவத்தோடு புளொட் அமைப்பு இன்றும் இருந்து வருகிறது. இதுவும் ஒரு வகையில் சவால்தான்.

இதற்குப் பிறகு புலிகள் அமைப்பிலிருந்து பிரியாவிட்டாலும் வன்முறைப் பாதையை விட்டு சாத்தியமான வழிகளைப் பரிசீலிக்கத் துணிந்தவர் புலிகள் அமைப்பின் பிரதித் தலைவராக மதிக்கப்பட்ட மாத்தையா.

இவர் புலிகள் அமைப்பின் இந்தியாவுடனான முரண்பாட்டை அடியோடு வெறுத்தார். இந்தியாவைப் பகைத்துக்கொள்ளாமல் தமிழ் மக்களுக்கான தீர்வை நோக்கிப் போராட முடியுமென்ற தனது கருத்தைப் புலிகள் அமைப்புக்குள் வலிமையாக வலியுறுத்தினார். மாத்தையாவின் இந்த யதார்த்தச் சிந்தனை குறித்துப் பிரபாகரனுக்குச் சந்தேகம் ஏற்பட்டதை அடுத்து மாத்தையா மீது குறிவைத்தார். இந்திய அரசின் கைக்கூலியாகச் சித்திரிக்கப்பட்டு அப்போது கைதுசெய்யப்பட்டார். அப்போதே அவர் கொல்லப்பட்டுவிட்டார்.

மாத்தையா மிகவும் நேசித்த புலிகளாலேயே மாத்தையா கொல்லப்பட்ட சம்பவம், மாத்தையாவின் நேச சக்திகளாக இருந்த போராளிகளுக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது. இப் போராளிகளும் பிரபாகரனின் கட்டளைக்கு அமைவாக இரவோடிரவாகக் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் கொல்லப்பட்டனர். இப்படியாக மாற்றுக் கருத்துக் கொண்டவர்களைக் கொல்லும் கலாசாரம் தன் கோரக் கைகளை அகல விரித்துக்கொண்டது. இன்னும் இதுதான் நிலைமை.

இதன் தொடர்ச்சியாக இப்போது கருணா, இலங்கை அரசுடனான போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் மாற்றமும், தலைமை மீது கொண்ட அதிருப்தியும், சாத்தியமான வழிமுறை குறித்த சிந்தனையும் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து செல்ல வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியதாகக் கூறுகிறார். இருந்தும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் போர் நிறுத்த புரிந்துணர்வு காலத்தில் இடம்பெற்று வந்த படுகொலைகள், வரி வசூலிப்புகள், அச்சுறுத்தல் என்பவை வன்னியிலிருந்து கிடைக்கும் உத்தரவுகளுக்கமைய நடைபெறுவதால் அவற்றை நிறுத்த வேண்டும் எனவும், பொட்டு அம்மானின் திட்டத்திற்கமைய படுகொலைகளைச் செய்வதால் தாமே பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதாகவும் தலைமைக்குச் தெரியப்படுத்தினார். அதற்கு சாதகமான பதில் இல்லாதபோதும், தானே விடயங்களைச் செய்ய விரும்புவதாகவும், ஆனாலும் தலைமையின் நேரடி வழிகாட்டலில் தொடர்ந்து இயங்க விரும்புவதாகவும் இரண்டாவது தடவையாகவும் தெரியப்படுத்தினார். அதற்கும் சாதகமான பதில் வராததால் இனி தாமே தனித்து முடிவுகளை எடுக்கும் நிலையை எட்டினார்.

இதனால் புலிகளின் தலைமையிடமிருந்து கருணா பிரிந்து போனதாகக் கருதப்பட்டு கருணா மீது பல பழிச்சொற்கள் பிரசாரப்படுத்தப்பட்டன. அப்போது தனது நியாயங்களை முன்வைப்பதற்காக கருணாவும் சில கருத்துக்களைச் சொல்ல நேரிட்டது. இதுவே பாரிய பிளவுக்கு வழி வகுத்தது.

> **தளத்திலிருந்து மக்கள் அநுபவிக்கும் கொடுமைகளை உணராத எவரும் மக்களின் பேரால் அரசியல் நடத்துவதைச் சரியானது என்று கூற முடியாது. அதேவேளை, மாற்றுக் கருத்துக்களை தமிழ் மக்கள் விரும்பவில்லை; இதனைத் தமிழ் மக்கள் நிராகரிக்கிறார்கள் என்று கருத்துக் கூறும் சிலரின் மூடத்தனத்தையும் மக்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. மக்களுக்கான போராட்டம் மக்களுக்குள்ளிருந்தே முன்னெடுக்கப்பட வேண்டும். அது சொந்த மக்களையே அடக்கி, அச்சுறுத்துவதாகவும் அமைந்துவிடக் கூடாது என்பதையும் எல்லோரும் புரிந்துகொள்வது இங்கு அவசியம்.**

இதே காலப் பகுதியில் கருணாவின் நிலைப்பாட்டை ஆதரித்து வந்தவரும் திருமலைக்குப் பொறுப்பாக இருந்த வருமான பதுமன், கருணாவுடன் இணைந்து கிழக்கு மாகாணத்தை இருவருமாகத் தலைமையேற்றுச் செயற்பட விரும்பினார். எனினும் நேரடியாகத் தலைமையை எதிர்க்கும் எண்ணத்தை பதுமன் விரும்பியிருக்கவில்லை. பின்னர் பதுமன் வன்னிக்கு விசாரணைக்கென அழைக்கப்பட்டார். விசாரணை முடிந்து அவர் திருமலை திரும்பவும் இல்லை. உயிரோடுதான் இருக்கிறாரா என்பதற்கும் எந்த உத்தரவாதமுமில்லை. இவருக்கும் மாத்தையாவின் முடிவுதான். கருணாவுடன் அப்போது சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமான புலி உறுப்பினர்கள் இருந்தனர். இந்தக் கட்டமைப்பைத் தகர்க்கும் திட்டத்தில் பிரபாகரன் கவனம் செலுத்தினார். நேற்றைக்கு வரையும் தனக்கு விசுவாசமாக உழைத்தவர்களையே கொன்றொழிக்க மற்றொரு படையைக் கிழக்கு மாகாணத்துக்கு அனுப்பிவைத்தார். அப் படை வேறுயாருமல்ல. கருணாவின் வழிகாட்டலில் கட்டப்பட்ட பெரும் பலம் பொருந்திய ஜெயந்தன் படையணிதான். ஜெயந்தன் படையணியில் இருப்பவர்களும் வேறு யாருமல்ல. மட்டு. - அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

தன்னால் உருவாக்கப்பட்ட படைக்கு எதிராகப் போர் ஒன்றை நடத்துவதால் எப்படி அழிவு நடந்தாலும் மட்டு. - அம்பாறை மாவட்டப் பிள்ளைகளே கொல்லப்படுவார்கள் என்பதால், அம் மோதலைத் தான் தவிர்த்ததாகக் கருணா கூறியிருந்தார். ஆனாலும் கருணாவின் ஆதரவாளர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

கருணாவின் பிளவுக்குப் பிறகு அப் பொறுப்பில் அமர்த்தப்பட்ட ரமேஷ் மற்றும் அவருக்கு உதவியாளர்களாக இருந்தவர்கள் மீது கோடிக்கணக்கான ரூபா பணமோசடிக் குற்றஞ் சாட்டப்பட்டு வன்னியில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். புலிகளின் கடற்படைப் பிரிவுத் தளபதியான சூசை இப்போது தலைமையுடன் முரண்பட்டிருப்பதாக வன்னித் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு சூசையின் சகோதரியை ரமேஷ் திருமணம் முடித்திருப்பது பிரதான காரணம், குற்றச்சாட்டின் பேரில் வன்னிக்கு அழைக்கப்படும் போராளிகள் கொல்லப்படுவது ஏற்க முடியாதது எனத் தெரிவித்தது அடுத்த காரணம். புலிகள் அமைப்புக்குள் நெருக்கடிகள் அதிகரித்துக்கொண்டிருக்கும் இக் காலகட்டத்தில்தான் கருணா புதிய கட்சியை அமைத்திருப்பதாக அறிவித்துள்ளார். 'தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள்' எனப் பெயர் கொண்ட இப் புதிய கட்சியானது தேர்தல் ஆணையகத்தில் இன்னும் பதிவு செய்யப்படவில்லை. இப் புதிய கட்சியின் உருவாக்கத்திற்குப் பின்னால் பல புதிய பிரச்சினைகள் உள்ளன. புளொட் அமைப்பிலிருந்து ஒரு காலத்தில் பிரிந்து சென்று தனியாக இயங்கிய ஈ.என்.டி.எல்.எப். அமைப்பின் தலைவர்கள் சிலர், கருணாவின் புதிய கட்சியின் தோற்றத்துக்குக் காரணமாக இருப்பதாகக் கருதப்படுகிறது. இதன் மூலமாக ஈ.பி.டி.பி. தான் கருணாவின் புதிய கட்சியின் தோற்றத்துக்குக் காரணமானவர்கள் என்ற புலிகளின் நிலைப்பாடு உண்மைக்குப் புறம்பானதாக ஆகியுள்ளது. ஈ.என்.டி.எல்.எப்.பின் தலையீடு இருப்பதால் இந்திய அரசின் தலையீடு இருக்கும் எனக் கூட்டமைப்பு மேதாவிகள் கருதுவதும் தவறு. இந்தியாவைப் பொறுத்தவரை புதிய கட்சி ஒன்றை உருவாக்கி அதன் வாயிலாக எதையும் செய்ய வேண்டிய தேவை இருப்பதாகத் தெரியவில்லை. கருணாவின் பிளவால் திக்குத் திக்காகிப் போன புலி உறுப்பினர்களில் பலருக்கு இப் புதிய கட்சியின் நோக்கம், செயற்பாடு குறித்து இதுவரை எவ்வித விளக்கமும் தெரிவிக்கப்படவில்லை என்பதும் கவனிக்கத் தக்கது. ஆனாலும், அவர்கள் புலிகளால் குறிவைக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மை.

இதற்கிடையே தளத்திலிருந்து மக்கள் அநுபவிக்கும் கொடுமைகளை உணராத எவரும் மக்களின் பேரால் அரசியல் நடத்துவதைச் சரியானது என்று கூற முடியாது. அதேவேளை, மாற்றுக் கருத்துக்களை தமிழ் மக்கள் விரும்பவில்லை; இதனைத் தமிழ் மக்கள் நிராகரிக்கிறார்கள் என்று கருத்துக் கூறும் சிலரின் மூடத்தனத்தையும் மக்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. மக்களுக்கான போராட்டம் மக்களுக்குள்ளிருந்தே முன்னெடுக்கப்பட வேண்டும். அது சொந்த மக்களையே அடக்கி, அச்சுறுத்துவதாக அமைந்துவிடக் கூடாது என்பதையும் எல்லோரும் புரிந்துகொள்வது இங்கு அவசியம்.

## அதிரடி அய்யாத்துரை



**விவாதமெண்ட** பேரில கருத்துப் பரிமாற்றம் செய்கிற நிகழ்ச்சியில, சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்படும்போது அதில முஸ்லிம் தரப்பு தனியாக பங்குகொள்ள வேணும் எண்டதை இதுவரை அரசாங்கத்துக்கு வலியுறுத்தினாராம். இப்ப எதிர்க் கட்சித் தலைவருக்கும் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறாராம். இதிலயிருந்து அவர் நழுவிவிட முடியாதெண்டும் சொன்னார். இதே கெட்டித்தனத்தை வன்னிக்கும் காட்டுவாராவெண்டதுதான் சனத்தின்ர கேள்வி. ஒத்த விரலைத் தூக்கி உவர் உப்பிடிச் சொல்லேக்க, தன்னிட்ட கேட்டுப் போடுவினமெண்டு எதிரில இருந்த பென்ஸ் பிரியரின்ர வாரிசு பேந்தப் பேந்த முழிச்சதைப் பாக்கணுமே...

அதே நிகழ்ச்சியில பென்ஸ் வாரிசு தெரிவிச்ச மற்றொரு கருத்தைக் கேக்கேக்க புல்லரிச்சுப் போச்சுதுங்கோ.... அரசாங்கம் வச்ச மனித உரிமை கொமிசனில ரிட்டையர்ட் ஆமிக்காரங்களைத்தான் நியமிச்சுதாம் ஆகையால ரெண்டெழுத்தார் தங்கட சிபார்சிலயும் ஆக்களைப் போட்டு ஒரு கொமிசனை நியமிக்கப் போகினமாம். ரெண்டெழுத்தாரை ஆதரிக்கிற பொலிசியில இருக்கிறதால அவையள் பிழை செய்யேக்க விமர்சிக்க ஏலாதாம்.... சளப்பல் மளுப்பலில நல்லாத் தேறிவிட்டார். வெறி குட் கெண்டினியூ இட்.

**எங்கட** அறளை வேந்தனார் வடக்குத் தமிழ் அமைச்சர் ஒருவரைக் கண்டபடி திட்டித் தீர்க்கிறாராம். "ஏன் இப்பிடி மாறிப்போட்டீர்" எண்டு நெருக்கமான ஒருவர் கேட்டாராம். "நான் என்ன விருப்பத்திலேயே இப்பிடியெல்லாம் பேசுறன். எம்.பி.ப்பதவி பறிபோகிற நிலையில இருக்கு. அதை தக்க வைக்க வேணுமெண்டால் அவையளுக்குப் பிடிக்காத யாரையெண்டாலும் கடுமையாத் திட்டுமாப் போல திட்டத்தானே வேணும்" எண்டு சத்தமில்லாமச் சொன்னாராம்... ம்.... இந்த வயசில சும்மா கிடைச்ச சொகுசு வாழ்க்கையையும் பறிகொடுத்துப் போட்டு மனிசன் என்னதான் செய்யும். அதுக்காக தன்ர அரசியல் வித்துவத்தக் காட்டுறதும் சரியெண்டு படயில்லை.

இந்தியாவில சிறையில இருந்த அந்த அமைச்சர் எப்பிடி ரெண்டெழுத்தாற்ர தலைவரை பேச்சுக்குக் கூப்பிட ஏலும் எண்டு கேட்டவராம். அந்தத் தலைவரும் அங்க சிறைவாசம் இருந்தது மட்டுமில்லை, இப்பவும் தேடப்படுகிறவர் எண்டதை அறளை வேந்தன் எப்பிடி மறந்தார் எண்டதுதான் புரியவில்லை.

**ரெண்டெழுத்தார்** கூட்டான எம்.பி.மாருக்கு நூறு விதமான வேலையைக் குடுத்து நாலு குழுவாகவும் பிரிச்சு விட்டிருக்கினமெண்டது தெரிஞ்ச சங்கதிதான்.... அதில இம்போட்டனான விசயம் ஒண்டு இருக்கு. அது இராசதந்திரிகளைச் சந்திக்கிற கொமிற்றியில சம்பந்தமானவர் இல்லை எண்டதுதான். அவருக்குப் பதிலா ஜோசப்பை நியமிச்சிருக்கினமாம். தனக்கும் இராசதந்திரத்துக்கும் தொடர்பில்லை எண்டு ஆக்கிப் போட்டினம். தன்னைப் பின்னுக்குத் தள்ளி ஜோசப்பை முன்னுக்குத் தள்ளினம் எண்டு தெரிஞ்சவயளிட்ட கருவுறாராம். எம்பசிகளுக்குப் போய் வந்தால் கொஞ்சம் கௌரவமா இருக்குமெண்டு நினைச்சவற்ர கனவு கனவாகவே போயிட்டுதுங்கோ. வட்டு...டு.

**அதிகார** அம்மணி ரெண்டெழுத்தாரோடு பேசத் தயார் எண்டு மாற்றுத் திட்டமொண்டை முன்வச்சிருக்கிறா..... இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையைத் தவிர வேறு எதைப் பற்றியும் பேசத் தயாரில்லையெண்டு வெளிநாட்டு சுற்றுலாவுக்குப் போயிருக்கிற செல்வனார் கூறியிருந்தார். அடுத்த நாள் காலையில வன்னியில இருந்து "இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பற்றிப் பேச்சு ஆரம்பித்தால் அரசாங்கத்தின்ர மாற்று யோசனையை பரிசீலிக்கலாம்" எண்டு தலைமை சொல்லுதெண்டு தயா வாத்தியார் சொல்லுறார். உப்பிடி மாறி மாறி அறிக்கை விடுகிறதைப் பாத்தா... வெளிநாட்டுக்கு ஒண்டும் உள்நாட்டுக்கு ஒண்டுமா ரெண்டெழுத்தார் பேசிறவையள் எண்டது தெரியுதுதானே!

**சங்கரியார்** ரெண்டெழுத்தாற்ர தலைவருக்கு உருக்கமான கடிதம் ஒண்டை எழுதினவரெல்லோ.... அதுக்கு எங்கட பத்திரிகைகள் தெரிவிச்ச கருத்துகளப் பாத்தால் சிரிப்புத்தான் வருகுது. அப்பிடியெல்லாம் எழுதியிருக்கிறார் எண்டு சொல்லிப்போட்டு கூடவே சங்கரியாரைக் கடிகடியெண்டு கடிச்சும் விட்டிருக்கினம். இது எப்பிடி இருக்கெண்டால் இந்தியாவில புகழ்பெற்ற சஞ்சிகை ஒண்டு தனக்குப் புகழ் சேர்க்க விரும்பி, தடைசெய்யப்பட்ட நிர்வாணப் புகைப்படங்களை இப்பிடியெல்லாம் வெளியிடுறாங்கள் எண்டு சொல்லுறதுக்கெண்டே தானும் அந்தப் படங்களைப் பாவிச்சு தன்ர விற்பனையைக் கூட்டிச்சுது. அதுமாதிரித்தான் கிடக்கு இதுவும். எல்லாம் ஒரு பிஸினஸ் ரிக்ஸ்தான்...

**கருணா** அம்மான் புதிய கட்சியொன்றை ஆரம்பிச்சிருக்கிறார் எண்டு பரவலாப் பேசினம். ஆனா கருணா இன்னும் இதை உறுதிப்படுத்தாமல் இருக்கிறார். அவரோட இருந்த பெடியளைக் கேட்டால் பேந்தப் பேந்த முழிக்கிறாங்கள், தங்களுக்கு ஒண்டும் தெரியாதெண்டு... இதுக்கிடையில நாட்டில ஒற்றைக் கதவு வச்ச ஒரு கடப்புக் கூட இல்லாத முன்னாள் அமைப்பொண்டின்ர பேரும் சேர்ந்து அடிபடுகுது. யார் யாரில தடுக்கி விழுந்து போச்சினமெண்டு தெரியேல்லை; வெளிநாட்டில இருந்துகொண்டு வெறும் அறிக்கை விட்டு பொலிற்றிக்ஸ் நடத்தலாம் எண்டு நினைக்கினமாக்கும். உது வேகாதிங்க... தான் போக வழியில்லை; மூஞ்சூறு எதையோ தூக்கிக்கொண்டு போன கதையாக் கிடக்கு. கூட்டெண்டது ரோங் டிஸிஸன்.

**இத்தனை** நெருக்கடிக்குள்ளயும் இந்து கலாசாரக்காறர் நவராத்திரி விழாவை ஏற்பாடு செய்திருக்கினம். பல துறையைச் சேர்ந்த அரசாங்க அமைச்சர்களும் பங்குகொண்டு வருகினமாம். தன்னைச் சுத்தி எது நடந்தாலும் தனக்குக் குடுத்த வேலையை சரியாச் செய்ய வேணும் எண்டு உரிய அமைச்சர் சொன்னவராம். அதற்குப் பொறுப்பா இருக்கிற அமைச்சின் அம்மணி ஒருவர் இரவு பகல் பாக்காமல் விழாவுக்காக உழைக்கிறாராம். அண்டை நாட்டிலயிருந்து வருகை தந்திருக்கிற நாட்டியக் கலைஞர்கள் வடக்குக் கிழக்குக்குப் போகக் கிடைக்கவில்லையே எண்டு கவலைப்பட்டிச்சினமாம். இப்பிடி ஒரு கலாசாரம் சார்ந்த நிகழ்ச்சியை எங்கட மண்ணிலயும் செய்ய வேணுமெண்டு யாருக்குத்தான் விருப்பமில்லை. எல்லாத்துக்கும் காலம் கைகூட வேணுமெல்லோ....

**மது** போதனை செய்ய வேண்டியவையள் அரசியலுக்குள்ள தலையைப் போடுகினம்; சகதி குளிக்கப் போகினம் எண்டு ஆரம்ப காலத்திலயே சொன்னனான். கரு நாக்குப் போல அப்பிடியே நடக்குது. இனி உறுமப்போறதில்லையெண்டு ஒருவர் ஒதுங்கிவிட்டார். இன்னொருவர் தான் எதிர்காலத்தில என்ன செய்யப்போறன் எண்டதை தெரிவிக்கப் போறாராம். இதெல்லாம் விசேஷமில்லை. அந்தக் கட்சியை உருவாக்கினவரே அதை விட்டு விலகி யானைக் கட்சியோடு சேர்ந்துவிட்டாராம். "இவ்வளவு நாளும் பச்சைக் கலரைக் கண்டாலே பச்சையா விமர்சிச்சியளே" எண்டு கேட்டதுக்கு "குஞ்சுத் தாடி வச்சிருக்கிறவையள் பங்கெடுத்திருக்கிற அரசாங்கத்தை விடவும் யானை மேல்" எண்டு பல்லில நாக்குப் படாம பொலிற்றிக்ஸ் பேசிறாராம். பொலிற்றிக்ஸ்ஸில நிரந்தர நண்பருமில்லை; பகைவருமில்லை; எண்டுவினம். அது சரியாத்தான் கிடக்கு... கட்சித் தாவலுக்கு மட்டும்.

# விளம்பரப் பகுதி

## எழுத்தாளர்களின் கவனத்திற்கு

**மலையகச் செய்திகள் எமக்கு அரசியல் சாயம் பூசி அனுப்பப்படுவதால் எமது தெரிவுக்குட்படுவதில்லை. எனவே சுதந்திரமாகவும், நியாயமாகவும் எவரையும் நேரடியாகக் குறிப்பிடாமலும் உண்மைச் செய்திகளை எழுதக் கூடியவர்கள் தாராளமாக எமக்கு எழுதலாம். செய்தியாகவோ / கட்டுரையாகவோ உங்கள் மன எண்ணங்களை எம்மோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

1. மலையகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் முறைப்பாடுகளைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஏற்கெனவே கவிதை, சிறுகதை என்பவற்றுடன் முரசின் வளர்ச்சியில் ஒன்றித்திருப்பவர்களுக்கு எமது சிரம் தாழ்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பி.கு.**

துணிந்து உண்மைச் செய்திகளை நேர்மையாக எமக்கு எழுதக் கூடிய பிராந்தியச் செய்தியாளர்களின் பங்களிப்பும் வரவேற்கப்படுகிறது. வடக்குக் கிழக்குச் செய்திகளை விடவும், மலையகச் செய்திகள் தொடர்பிலும் முரசு கூடிய கவனம் செலுத்தவுள்ளதால் ஒத்தாசை புரிந்து செயலாற்றத் துடிப்பான எழுத்தாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

நம்மால் முடிந்த சேவையை நம் சமூகத்திற்குச் செய்வோம். நமக்கு என்ன கிடைத்தது என்பதை விடவும் நாம் என்ன கிடைக்கச் செய்தோம் என்ற கேள்வியை நம்மை நோக்கி நாமே கேட்போம்.

நன்றி.

- ஆ - ர்

# பவானின் படுகொலை தமிழீழத்தின் இன்னொரு அவமானச் சின்னம்

**ஈ.பி.டி.பி.யின்** புத்தளம் மாவட்டப் பொறுப்பாளரும் முக்கியஸ்தருமான தம்பித்துரை சிவகுமாரன் 18.09.2004 அன்று புத்தளம் தில்லையடியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது இழப்பு புத்தளத்தில் அகதிகளாக வாழும் யாழ்ப்பாண முஸ்லிம்கள் மத்தியில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பவான் என்ற பெயரில் அனைத்து யாழ்ப்பாண முஸ்லிம்களாலும் அறியப்பட்டவர் இவர் இவரது படுகொலை, மீளக் கட்டியெழுப் பப்பட்டு வரும் தமிழ், முஸ்லிம் உறவுக்கு வைக்கப்பட்ட ஒரு வேட்டாகவே முஸ்லிம்கள் கருது கிறார்கள்.

1990ஆம் ஆண்டு யாழ்ப் பாணத்திலிருந்து முஸ்லிம்கள் புலிகளால் துரத்தப்பட்டார்கள். இவ்வாறு சொத்துக்கள், பணம், நகை, தொழில் என்பவற்றை இழந்து வந்த முஸ்லிம்கள் ஏனைய வடபகுதி முஸ்லிம்களுடன் சேர்ந்து புத்தளத்தில் அகதி முகாம்களில் குடியேறினர். அன்று தொடக்கம் இன்று வரை எந்தவொரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரும் இந்த அகதிகளைச் சென்று பார்வையிடவில்லை என்பது கசப்பான உண்மை. மாவை சேனாதிராஜா மட்டும் புத்தளம் விஜயம் செய்து தனது பழைய கூட்டணி நண்பர்களைச் சந்தித்ததாக அறிந்தோம். இவ்வாறு அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்டு அநீதியாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களைத் தமிழ் அரசியல் கட்சியினரும் கைவிட்டு விட்டார்கள். நிர்க்கதியான நிலையில் வாழ்ந்த இந்த முஸ்லிம் அக்திகளை ஈ.பி.டி.பி. மட்டுமே அன்புடன் அணுகியது.

இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் நலன்களைக் கவனிப்பதற்காகவும் அவர்களிடையே அரசியல் பணி செய்வதற்காகவும் நியமிக்கப் பட்டவரே பவான். 1994ஆம் ஆண்டு முதல் கடந்த 10 வருடங்களாகத் தொடர்ச்சியாக அகதிகளின் முன்னேற்றத்துக்காக பாடுபட்டு வரும் நபர்களில் தமிழர் சார்ந்தவர்களில் பவானே முதலிடத்தில் இருந்தார். அகதி முகாம்களில் பாலர் வகுப்புகளை ஏற்பாடு செய்து ஆசிரியர் சிலருக்கு நிதியுதவிகளையும் ஏற்பாடு செய்தார். அத்துடன் ஒரு காணியை வாங்கி அகதிகள் சிலருக்குப் பங்கிட்டுக் கொடுப்பதிலும் முன்னின்று செயற்பட்டார். மேலும், அகதி முகாம்களுக்குக் குழாய்க் கிணறுகள் சிலவற்றையும் நிறுவிக் கொடுத்தார்.

அவை மட்டுமன்றி, வடக்கு முஸ்லிம்களுடனேயே தனது குடியிருப்பையும் அமைத்து புத்தளம் அகதி முகாம் ஒன்றிலே தங்கிவிட்டார். இவருக்கு வைக்கப் பட்ட வேட்டு முஸ்லிம்களிடையே கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

1970 - 76களில் அல்பிரட் துரையப்பா யாழ்ப்பாண முஸ்லிம்களுடன் மிகவும் அன்னியோன்னியமாக வாழ்ந்து காட்டினார். தமிழர்களால் இவர் 'சோனகத் துரையப்பா' என்றே அழைக்கப் பட்டார். இவரைப் புலிகளின் தலைவர் பிரபாகரனே சுட்டுக் கொன்றார். அவரின் பின்பு யோகேஸ்வரன் முஸ்லிம்களுக்கு அதிகமான சேவைகளைச் செய்தார். அவரும் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆக முஸ்லிம் களுடன் நெருங்கிப் பழகும் தமிழர்கள் எல்லோரும் துரோகி களாகவே புலிகளால் கருதப்படு கிறார்கள்.

இனி விடயத்துக்கு வருவோம். கொல்லப்பட்ட பவானுக்கு மூன்று பிள்ளைகள். அவருடைய மனைவி விதவையாகவும் அவருடைய பிள்ளைகள் அநாதைகளாகவும் ஆக்கப்பட்டுள்ளனர். தமிழர் விடுதலைப் போராட்டத்தில் மூலக் கொள் கையே தமிழன் சுயநிர்ணய உரிமையுடன் வாழ வேண்டும் என்பதே. ஆனால், தமிழர் ஆயுதப் போராட்டம் ஆரம்பமாவதற்கு முன்பு குறிப்பிட்டுக் கூறப்படக் கூடியவர்களே சிங்களப் பேரினவாதிகளால் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால், இன்று புலிகள் பன்னிரண்டாயிரத்தும் மேற்பட்ட தம்மினத் தாரைக் கொன்றுள்ளனர். அவர்களில் ஏறக்குறைய எண்ணூறு பேர் திருமணம் முடித்தவர்கள். அதாவது புலிகள் செய்த கொலைகளால் எண்ணூறு தமிழ்ப் பெண்கள் வாழ்விழந்து, ஆயிரத்து இரு நூறுக்கும் மேற்பட்ட குழந்தைகள் அநாதைகளாகியுள்ளனர். மேலும், கொல்லப்பட்ட இளைஞர்களின் பெற்றோர்கள், பிள்ளைகளை இழந்து மீளாத் துயரில் கிடக் கின்றனர்.

இந்த அநாதைகள், தமிழீழத்தில் ஒரு அவமானச் சின்னமாகவே காணப்படுவார்கள். அவர்களுடைய விரக்தி, புலிகளுக்கெதிராக என்றாவது ஒருநாள் ஒரு மாபெரும் சக்தியை உண்டாக்கிவிடும். துப்பாக்கி தூக்கியவனெல்லாம் நீதிபதி ஆகிவிட்ட காலம் மாறி, நீதியான அரசியல் எதிர்காலத்தையே தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளார்கள். அந்தக் காலம் என்று வருமோ அன்றுதான் தமிழனுக்கு விடிவப்பா.

**-நன்றிகளோடு**
**புத்தளத்திலிருந்து**
**முகமது முத்தலிப்**

## வாழவைக்கும் அற்புத மருந்து மந்திர மனோதத்துவ மருத்துவம்



BODY & MENTAL HEALTH CARE - PSYCHOTHERAPY & YOGA - MEDITATION
YOGI-DR. T. MYLVAGANAM [Rh.M.D- DAcu (இலங்கை)M.B.B.S(h) (இந்தியா)]
MINISTRY OF HEALTH சுகாதார அமைச்சின் (மெடிக்கல் கவுன்சில்) பதிவு இல M. C. 061

**இறையருள் தியான யோக சக்தியினால் சொன்னது பலிக்கின்றது, செய்தது சித்தியாகுகின்றது.** குருசக்தி நிலைய சித்தர்மருத்துவபண்டிட் மஹாவிஷ்ணு உபாஷனா டாக்டர்.மந்திரயோகியின் அற்புத மருந்து மந்திர யந்திர வசிய மனோதத்துவ மருத்துவங்களினால் பிரிந்து சென்றவர்களை வெறுப்பவாகளை உறவாக்கி, காதல், திருமணம், கல்வி, வியாபாரம் வேறுகாரியங்களிலும் வெற்றிபெற்று, தீயசக்திகளின் தொல்லைகள், சிக்கலான சிலவகைப் பிரச்சனைகள் மனோநிலைப் பாதிப்புக்கள் வேறு நாட்பட்ட நோய்களைத் தீர்த்து நன்மையான காரியங்களை உடன் நிறைவேற்றி மகிழ்ச்சியாக வாழ்கின்றார்கள். யோகிடாக்டரிடம் வரமுடியாதவர்களுக்கு பதிவுப்பாசலில் அனுப்பப்படுகின்றன. பதிவுத்தபாலில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு செய்து கொள்ளலாம். கடல்கடந்த வெளிநாட்டவர்களுக்கு அதிவிஷேட செயல்முறைகள்.

**தர்ம சிந்தனையுள்ள புனிதசேவை ஸ்தானம் அரசாங்க பதிவு இல.** HA14/BT/176

| | |
|---|---|
| GURUSACKTHY CENTER<br>KALLADY - BATTICALOA (SRI LANKA) | தொலைபேசி : 0777573368<br>(வெளிநாடு) +0094-0777573368 |

## ஹோமியோபதி சிகிச்சை

தமிழ் நாட்டின் பிரபல சிகிச்சை நிபுணரும், தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான

**DR. R. தியாகராஜன் DHMS, AMRSH (Lon)**

நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக் குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

காலம் : 25.10.2004 முதல் 29.10.2004 வரை
இடம் : ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.
தொலைபேசி : 2585592, 2581986,
HOTLINE : 0777-602513

Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N)

# மலையாள மாந்திரீக சக்தி
# கை கண்ட பலன் பெற




பேராசிரியர்
கருணாகரபூஷணம்
உலக மலையாள மாந்திரீக
ஜோதிட சக்கரவர்த்தி

**எம்மால் வெற்றி பெறுவது நிச்சயம் என்பதாலேயே வாங்கும் பணத்திற்கு திட்டவட்டமாக ரசீது வழங்குகிறோம்**

**சந்திரன் இங்கிலாந்து!**


திரு ஐயா அவர்களுக்கு நான் திருமதி ஆனந்தி ரண சந்திரன் எழுதுவது ஐயா நாங்கள் 10.05.2003 நிரந்தர விசா கிடைத்து கனடா நாட்டிற்கு செல்கிறோம் தயவு செய்து எந்த காரணத்திற்கும் எனக்கு இங்கிலாந்துக்கு கடிதம் போட வேண்டிய நாங்கள் நிரந்தரமாக கனடாவில் தங்கி விடுவோம். நீங்கள் இதுவரை செய்த உதவிக்கு நன்றி.



**யோகராஜா, நோர்வூட்!**

அன்பு உள்ளம் கொண்ட மேன்மை தாங்கிய ஐயா அவர்களுக்கு யோக ராஜா எழுதிக்கொள்வது கடந்த ஐந்து வருட காலமாக எனது மனைவியாகிய ராஜலட்சுமிக்கு, பேய் கோளாறு, மனபயம் திடீர் என கீழேவிழுதல், கணவனை காட்ட முடியாது - இப்படிப் பல துன்பங்கள். எனக்கு கண்கன் தெய்வமாகிய உங்களிடம் வந்து என் மனைவியை காட்டி பிராயச்சித்தம் பெற்றுக்கொண்டேன். ரூபாய் 25,000/=செலவு செய்ததில் எனக்கு கிடைத்த பெறுமதி இது. இப்போது நான் மிக நிம்மதியாகவே இருக்கின்றேன். ஐயா அறிவது எனது உயிர் இருக்கும் வரை உங்களை மறக்கமாட்டேன். மாதாந்த பூஜையில் கலந்து கொள்வேன் இது உறுதி.

நன்றி



**கந்தையா, கொழும்பு -15**

ஐயா நான் உங்களிடம் 14.03.2002ஆம் திகதி திருமண திகதி நிவர்த்திக்காக வந்திருந்தேன் நீங்கள் சிரமம் பாராமல் அதனை செய்து தந்தீர்கள். உங்கள் அருளால் அதனை செய்து தந்தீர்கள். உங்கள் அருளால் எனக்கு 12.03.2002இல் நல்லபடியாக திருமணம் நடந்தது. அதற்குமிக நன்றி.

**துஷ்யந்தினி கிளிநொச்சி!**

மதிப்புக்குரிய P.K.சாமி ஐயா அவர்களுக்கு தாங்கள் எங்களுக்குக் கூறிய திருமண திகதி, மனிகனக்கு, வெளிநாட்டு பயணதிகதி, மணிகணிக்கு என் கணவர் எந்த திசையில் இருந்து வருவார் என்பதை எல்லாம் மிகவும் துல்லியமாக எழுதித் தந்தீகள். அதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அத்துடன் உங்களது பணி தொடர வாழ்த்துகிறேன்.

நன்றி.

**வந்துமி, ஊர்காவற்றுறை!**

ஸ்ரீ துர்க்கை அம்மனுக்கும் சாமி ஐயாவிற்கும் கோடிக்கணக்கான நல்வாழ்த்துக்கள். நான் தங்களிடம் வந்த போது பல சிரமத்தில் எனது அண்ணாவின் உதவியை எதிர் பார்த்து வந்தேன். தாங்கள் சொன்னது போல் சொன்ன படி உதவி கிட்டியது. ஐயாவிற்கு எனது நன்றிகள் கோடி.

**ஜோசப், கிருளப்புர!**

மதிப்பு மரியாதைக்குறிய மனித தெய்வமாகிய பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்களுக்கு எனது முதல் வணக்கம். நீங்கள் என் மகனுக்கு சூனிய நிவர்த்தி 11.04.2001 அன்று செய்து தந்தீர்கள் அந்த விடயம் நல்லபடியாக நிவர்த்தியாகிவிட்டது. ஏங்கள் குடும்பத்திற்கு மிக சந்தோஷம். இந்த உதவியை நான் வாழ்நாளில் மறக்கமாட்டேன்.. இந்த விடயத்திற்கு நான் எனது மகனுடன் வந்து துர்க்கை அம்மனுக்கு காணிக்கையாக ருபாய் 1001 தருகிறேன்.

நன்றி

**மருசுன், உக்குவளை!**

அன்புள்ள ஐயா! நீங்கள் எனக்கு செய்து தந்த 08.03.2001ஆம் ஆண்டு வெளிநாட்டு விஷயம் நல்லபடியாக முடிந்தது. நாங்கள் மிகவும் சந்தோஷம் அடைந்தோம். இன்னும் பல வேலைகள் செய்ய இருப்பதால் நான் உங்களை வந்து கண்டு கொள்கின்றேன். இந்த உதவியை நான் வாழ்நாளில் மறக்கமாட்டேன்.

நன்றி

**யோகளவீகம், மொரடுவ!**

கணம் P.K. சாமி ஐயா நான் எனது வேலை நீடிப்புக்கு ஐயாவை சந்தித்து பரிகாரம் செய்து 1 கிழமை வேலை செய்தபின் சேவை நிறுத்தப்பட்டுள்ளது. ஆகவே நீடிப்புக்கு ஐயா ஆசீர்வாதத்தை எதிர்ப்பார்க்கிறேன்.

நன்றி

**சந்திரன், இங்கிலாந்து!**

திரு. ஐயா! அவர்களுக்கு, நான் திருமதி ஆனந்தி ரண சந்திரன் எழுதுவது ஐயா நாங்கள் 10.05.2003 நிரந்தர விசா கிடைத்து கனடா நாட்டிற்கு செல்கிறோம். தயவு செய்து எந்தகாரணத்திற்கும் எனக்கு இங்கிலாந்துக்கு கடிதம் போட வேண்டியதில்லை. நாங்கள் நிரந்தரமாக கனடாவில் தங்கி விடுவோம். நீங்கள் இதுவரை செய்த உதவிக்கு நன்றி.

**கந்தையா மட்டக்குளிய!**

மதிப்பிற்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு எதிரிகளால் உயிராபத்து இருப்பதனையும் வழக்கு பிரச்சினை அதில் இருந்து காப்பாற்றி மாந்திரீக நிவர்த்தி செய்து தறுமாறு வேண்டிக் கொண்டபடி ஐயாவின் அருள் சக்தியாப் இப்பொழுது எதிரிகளினுள் எனக்கு ஏற்பட்ட உயிராபத்தை காப்பாற்றி எனது அனைத்து பிரச்னைகளையும் தீர்த்து வைக்குமாறு எனது கோடான கோடி நன்றிகள்

**குறிப்பு: வாடிக்கையாளரின் மாந்திரீக இரகசியங்கள் பாதுகாக்கப்படும்**

**Prof. Dr .PK. சாமி (J.D.G.A.N.)J.P.**

**ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம், மாந்திரீக உச்சாடன பீடம்**
**இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.**
**தொலைபேசி: 0112470615-2342463-2342464**
**தொலைநகல்: 0112344831**

**நுவரெலியாவில் :**
**33, Daily Fair Complex, Nuwara Eliya.**
**Tel : 052-2222508, 2235097 Fax: 052-2222508**

**எம்மிடம் வெளிநாட்டவருக்கு பிரத்தியேக விசேட சேவை பிரிவுண்டு. இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை.**

Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N) Prof. Dr .PK. சாமி (J.D.G.A.N) Prof. Dr .P.K. சாமி (J.D.G.A.N)

**சமஷ்டி அமைப்பு முறையொன்றின் கீழ் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை ஏற்றுக்கொள்ள முடியுமா? என்ற தலைப்பில் கடந்த 16.10.2004ஆம் திகதி "டெயிலி மிரர்" ஆங்கிலப் பத்திரிகையில் சுபாஷ் விக்ரமசிங்க என்பவரால் எழுதி வெளியிடப்பட்ட கட்டுரையிலிருந்து சில பகுதிகள் இங்கே தமிழில் தரப்படுகின்றன.**

இன்னொருவர் பார்வையில்

# இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை சாத்தியமா?

சமஷ்டி அரசென்பது வெளிவிவகாரங்கள் மற்றும் பொதுவான நலன்கள் சம்பந்தப்பட்ட உள்விவகாரங்கள் ஆகியவற்றை முழுமையாகப் பிரதிநிதித்துவப்படுத்துவதோடு முழுமைக்காகவும் செயற்படும் ஒரு மத்திய அதிகாரசபையைக் கொண்டதாகும். அத்துடன் தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள சட்டவாக்க மற்றும் நிர்வாக அதிகாரங்களைக் கொண்டுள்ள மாகாண அரச அதிகாரமுள்ள சபைகளையும் உள்ளடக்கியதாக இருக்கும். அல்லது ஏ.விட்சே விபரிப்பதைப் போன்று "அது தேசிய ஐக்கியத்துக்கான இணக்கத்தை ஏற்படுத்தும் நோக்குக் கொண்ட அரசியல் திட்டமிடல் அல்லது உபாயமாகும்".

அரசியல் யாப்பொன்றின் மூலம் அரச அதிகாரங்களை முறையாகப் பிரித்துக்கொள்வதே இச் சமஷ்டி அமைப்பு முறையின் குறிப்பிடத் தக்க அம்சமாகும். அதாவது, மாநிலங்கள் அல்லது மாகாணங்கள் போன்ற அங்கம் பெறும் அலகுகளுக்கிடையிலும் அவற்றை உள்ளடக்கிய பெரிய அரசுக்கிடையிலும் அதிகாரத்தை பகிர்ந்துகொள்வதே இதுவாகும். இந்த அலகுகளுக்கு வழங்கப்பட்டுள்ள விடயங்களைப் பொறுத்தவரை, சட்டங்களை இயற்றவும், அவை தொடர்பான நிர்வாக வேலைகளை மேற்கொள்ளவும், அவை பற்றிய விளக்கங்களை அளிக்கவும் இந்த அலகுகளுக்கு அதிகாரமுண்டு.

மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயங்களைப் பொறுத்தவரை இதே போன்ற அதிகாரங்கள் உண்டு.

இந்த அலகுகளும் மத்தியிலுள்ள அரசும் அரசியல் யாப்பினால் அரசும் அவ்வற்றுக்கென வழங்கப்பட்டுள்ள அதிகார வரம்புக்குள் மட்டுமே தத்தமது சட்டவாக்க, நிர்வாக மற்றும் நீதித்துறை அதிகாரங்களைச் செயற்படுத்த முடியும். எனவே, அரசியல் யாப்பின் அதியுயர் தன்மை சமஷ்டி அமைப்பு முறையின் இரண்டாவது முக்கியத்துவம் மிக்க அம்சமாகும்.

மத்திய அரசின் கீழுள்ள எந்தவொரு அதிகார அலகாவது இயற்றும் சட்டங்கள் அரசியல் யாப்புக்கு முரணாக அமையுமானால், அது அதிகாரத்துக்குப் புறம்பானதெனப் பிரகடனப்படுத்தும் அதிகாரத்தை இந்த அதியுயர் தன்மை கொண்டுள்ளது. எனவே, மத்திய அரசுக்கும் மாநில அல்லது மாகாண அரசுக்குமிடையிலான நீதித்துறை சம்பந்தமான பிணக்குகள் குறித்து அரசியல் யாப்புப் பற்றி விளக்கமளித்து உச்ச நீதிமன்றம் போன்ற அதிகார அமைப்புகள் தீர்மானிக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

**சமஷ்டி அமைப்பு முறைமையொன்றினை ஸ்தாபிப்பதற்கான வழிமுறை என்ன?**

முன்னர் பிரிந்திருந்த அல்லது இறைமை கொண்டவைகளாக இருந்த பல அரசுகள் மேலும் கூடிய பாதுகாப்பை ஏற்படுத்திக்கொள்வதற்காகப் பொதுவான அரசாங்கமொன்றினை ஸ்தாபிப்பதற்காகச் சேர்ந்துகொள்வதையே, சம்மேளனமொன்றினை (சமஷ்டி) ஏற்படுத்திக்கொள்ளும் வழிமுறை என்கிறோம். சில வேளைகளில் இது மறுபுறமாகவும் அமையலாம்.

உதாரணமாக, கனடாவில் ஆரம்பத்தில் ஒற்றையாட்சியே இருந்தது. பின்னர், அரசியல் யாப்பொன்றின் மூலம் சமஷ்டி அமைப்பு முறையாக அது மாற்றப்பட்டது. இதன் மூலம் மாகாணங்களின் ஆதிக்க வரம்புகள் வரையறுக்கப்பட்டு அவை ஒவ்வொன்றும் சமஷ்டி அரசின் அங்கங்களாக்கப்பட்டன.

மேலும், செயற்றிறன் மிக்க அரசாங்கமொன்றினை உருவாக்குவதற்காகச் செய்யப்பட்ட அதிகாரப் பகிர்வு அல்லது

> **சகல சமஷ்டி அரசுகளும் தீர்வுகாண வேண்டிய பிரச்சினை என்னவென்றால், அதன் கீழான அலகுகளின் பன்முகத்தன்மைக்கான வீச்சு மட்டத்துக்கு இடமளித்து அவை சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கும் அதேவேளை, செயற்றிறன் மிக்க மத்திய அரசொன்றினை எவ்வாறு ஏற்படுத்துவது என்பதேயாகும்.**

அதிகாரப் பரவலாக்கத்துக்கான வழிமுறையே இதுவாகும். சமஷ்டி அரசின் கீழான இறைமையென்பது, அரசியல் யாப்புக்குத் திருத்தம் கொண்டுவரக்கூடிய அதிகாரமுடைய சபையொன்று - அது எங்கிருந்தாலும் - எப்படியிருந்தாலும் - அதனிடத்திலேயே அந்த இறைமை தங்கியுள்ளது. சட்டரீதியாகக் கூறுவதானால், இந்த இறைமையுள்ள அதிகாரசபை அல்லது அலகு சம்மேளனத்தை (சமஷ்டி) முற்றுமுழுதாக நீக்கி, அதன் ஒவ்வொரு அங்கத்துவ அரசுகளுக்கும் அவற்றின் , முன்னைய சுதந்திரத்தை மீளப் பெற்றுக் கொடுக்க முடியும்.

எவ்வாறெனினும் பிரிந்து போவதென்று உறுதிகொண்ட அலகொன்றினை, அப்படிப் பிரியாமல் தடுப்பதற்கு ஆயுத பலத்தின் மூலமாகவன்றி சமஷ்டி அரசொன்று தடுப்பது கஷ்டமானதாகும். இவ்வாறானதொரு நிலைமையைக் கையாள்வதற்கு எந்தவொரு அரசியல் யாப்பு ஏற்பாடுகளும் போதியதாக இல்லையெனத் தெரிகிறது.

**சமஷ்டி அமைப்பு முறையுடன் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை மோதிக் கொள்வது எங்கே?**

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனை சரத்து 9 இலங்கை அரசாங்கத்தினால் செயற்படுத்தப்பட்ட சகல அதிகாரங்கள், கடமைகள் அனைத்தும் உள்ளிட்ட இந்த அதிகாரங்கள் பிராந்திய அதிகார சபைக்கு (வடக்கு, கிழக்கு) உரித்தாக்கப்பட வேண்டுமெனக் கூறுகிறது.

அரசியல் யாப்பின் மூலம் வரையறுக்கப்பட்ட விடயங்கள் குறித்தே சட்டங்கள் இயற்றும் அதிகாரம் சமஷ்டி முறைமையின் கீழ் இந்த அலகுகளுக்கு உண்டு. இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை சரத்து 9இல் கூறப்பட்டவாறு, சமஷ்டி முறைமையொன்றின் கீழ் இவ்வாறான மேலோட்டமான பாதுகாப்பை வழங்க முடியாது.

இ.த.அ.சபை - சரத்து 10, இதன் மூலம் ஸ்தாபிக்கப்படும் நிறுவனங்கள் சகல பிணக்குகளையும் தீர்த்துக்கொள்வதற்கான முற்றுமுழுதான பிரத்தியேக நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கலாமெனவும் கூறுகிறது.

அரசியல் யாப்பின் மூலம் தமக்கென வழங்கப்பட்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட நீதித்துறை அதிகாரங்களையே சமஷ்டி முறையொன்றின் கீழ் அச் சபைகள் அல்லது அலகுகள் செயற்படுத்தலாம்.

இ.த.அ.சபை - சரத்து 11, வடக்கு, கிழக்குக்கான அல்லது வடக்கு, கிழக்கின் சகல செலவுகள் அல்லது ஏதாவது செலவுகள் இடைக்காலத் 'தன்னாட்சி அதிகார சபையின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட விடயமென்று ஸ்ரீலங்கா அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கூறகின்றது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைச் யோசனையில் சரத்துகள் 11.1, 11.1ஏ, 11.1பி, 11.1இ, 11.2 மற்றும் 11-3 ஆகியவை அனைத்தும், மேலே கூறப்பட்ட அரசியல் யாப்பினால் மட்டுப்படுத்தப்பட்டுப் பகிர்ந்தளிக்கப்பட்ட விடயங்களுக்கு முற்றிலும் புறம்பானவையாக அமைகின்றன.

இ.த.அ.சபை - சரத்து 12, உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ கடன் பெறுவதற்கான அதிகாரம், பிணையங்களையும் நட்டாடுகளையும் வழங்குவதற்கும், உதவிகளை நேரடியாகப் பெறுவதற்கும் அத்துடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபடவும் அல்லது ஒழுங்கமைக்க இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கு அதிகாரமுண்டு என்று கூறுகிறது.

சமஷ்டி அமைப்பு முறையில் மத்திய அரசாங்கமே வெளிவிவகாரங்களைப் பொறுத்தும் பொது நலன்கள் சம்பந்தப்பட்ட உள்விவகாரங்களைப் பொறுத்தவரையிலும் முழு நாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்துவதோடு, முழு நாட்டின் சார்பாகவும் செயற்பட வேண்டுமென்பதால், இது சமஷ்டி அமைப்பு முறையென்ற கருத்தோட்டத்துக்கு அடிப்படையிலேயே எதிரானதாகும்.

சரத்து 9 சமஷ்டி அமைப்பு முறையோடு முரண்படுவதைப் போன்று, சரத்து 15 உம் முரண்படுகிறது. சமஷ்டி அமைப்பு முறையொன்றோடு தொடர்புபட்ட மிகவும் முக்கியமான குறைபாடும் முரண்பாடும் இதுதான். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை நியமனம் செய்ய, தீர்மானிக்க, வழிநடத்த, கட்டுப்படுத்த, உருவாக்கத் தேவையான அதிகாரங்களையும் மற்றும் முழு அதிகாரங்களையும் தன்னிடமே வைத்துக்கொள்வதற்கான யோசனையை முன்வைத்துள்ளது.

அரசியல் யாப்பொன்றின் மூலம் சமஷ்டி முறையொன்றின் கீழ் இவ்வாறான மேலாண்மையான அதிகாரத்தை வழங்க முடியாது. இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையைத் தானே நியமிக்கவும் நிறுவவும் வேண்டுமென்று இ.த.அ.சபைக்காக முன்வைக்கப்பட்டிருக்கும் யோசனை நகைப்புக்கிடமானதாகும். அத்துடன் நின்றுவிடவில்லை. தன்னாட்சி அதிகாரசபையில் யார் யார் அங்கம் வகிப்பது என்பது பற்றிய தீர்மானத்தையும் தன்னாட்சி அதிகார சபையே எடுக்க வேண்டுமென்றும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சரத்துகளும் யோசனைகளும் அரசியல் யாப்பின் மூலம் உருவாக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி முறையிலான அரசாங்கத்துடன் நேரடியாகவே மோதுகிறது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளில் முன்வைக்கப்பட்டுள்ள சாத்தியமற்ற அல்லது தவறான இந்த யோசனைகள் அனைத்தையும் வைத்துப் பார்க்கையில், இந்த இடைக்கால சபை, ஒன்றில் தனியாகச் செயற்பட வேண்டும் அல்லது பொருத்தமில்லாத இத்தகைய யோசனைகளைக் கைவிட்டுவிட வேண்டுமென்பது தெளிவானதாகும். அல்லது சமஷ்டி முறையிலான அரசாங்கமொன்றுடன் இணங்கிச் செயற்பட வேண்டும்.

எவ்வாறெனினும், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் இல்லாமல், சமஷ்டி அமைப்பு முறையிலான ஓர் அரசாங்கமே இன்றைய சூழ்நிலைகளின் கீழ் விரும்பத் தக்கதெனக் கூறப்படுகிறது. உண்மையில் புலிகள் இயக்கம் கூடச் சில காலத்துக்கு முன்னர் சமஷ்டி அமைப்பு முறை யோசனையை முன்வைத்திருந்தது. ஆனால், புலிகள் பின்னர் மிகவும் வெறுக்கத் தக்க இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை முன்வைத்தனர். புலிகள் முன்வைத்திருக்கும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் பிரிவினைக்குத் தேவையான சகல அம்சங்களையும் கொண்டிருப்பதாலும், தனி நாடாக இலகுவில் மாற்றிவிடக் கூடியதாக இருப்பதாலும், அவர்கள் தற்போது படிப்படியாகச் சமஷ்டி அமைப்பு முறையொன்றுக்கான கோரிக்கையிலிருந்து தம்மை விலக்கிக்கொண்டு வருகின்றனர். மாறாக, சமஷ்டி அமைப்பைப் பொறுத்தவரை அதற்குக் கட்டுப்படுத்தும் அதிகாரம் உண்டு. அத்துடன் விரும்பப்படும் பிரிவினையைப் பின்தள்ளி ஆகக் குறைந்தது சமநிலைப்படுத்தும் அதிகாரமாவது உண்டு. எனினும், சகல சமஷ்டி அரசுகளும் தீர்வுகாண வேண்டிய பிரச்சினை என்னவென்றால், அதன் கீழான அலகுகளின் பன்முகத்தன்மைக்கான வீச்சு மட்டத்துக்கு இடமளித்து அவை சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கும் அதேவேளை, செயற்றிறன் மிக்க மத்திய அரசொன்றினை எவ்வாறு ஏற்படுத்துவது என்பதேயாகும். அதாவது. மாநிலங்கள் என்ற கோள்களை வான வெளிக்குள் பறந்து போகவும் விட முடியாது. அதேபோல் மத்திய அரசென்ற சூரியன், அந்தக் கோள்களைத் தனது எரிநெருப்புக்குள் இழுத்து விடவும் முடியாது என்பதைப் போன்றதே இந்த நிலையாகும். பிரிந்து போக வேண்டுமென்று விரும்புகின்ற ஓர் அலகை அல்லது சபையை ஆயுத பலத்தைப் பயன்படுத்தாமலன்றி, சமஷ்டி அமைப்பிலிருந்து அது பிரிந்து செல்வதைத் தடுத்துவிட முடியாதென்ற முடிவுக்கு அரசியல் யாப்பு நிபுணர்கள் வந்துள்ளார்களென்பது உண்மையே. இவ்வாறானதொரு நிலைக்கு ஈடுகொடுக்க எந்தவொரு அரசியல் யாப்பு ஏற்பாடுகளும் போதுமானதாகவில்லை.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

நீண்ட விளக்கம் கொடுத்து அவருக்கு நான் எனக்குள்ள தர்ம சங்கடங்களைத் தன்னிலை விளக்கமாகத் தரவேண்டும் என்கிற எண்ணம் எனக்கு ஏற்படவில்லை. காரணம், என் கவனம் பூராவும் அவர் கொண்டு வந்திருந்த சிற்றேட்டில், நான் பல்லாண்டுகளுக்கு முன்பு எழுதியிருந்த என் கவிதையின்



மேலேயே இருந்தது. வாசிக்க வாசிக்க என்னையே என் கவிதை வசீகரித்தது. அதற்குள் வெகுவாக உதவியது. கவிதைக்காக நான் எடுத்துக் கொண்ட கரு.

அந்த இதழை என்னிடமே விட்டுவிட்டு அந்த பம்பாய்க்காரர் போய் விட்டார். ஆனால் இழந்த என் செல்வத்தைத் திரும்பப் பெற்ற வியப்பும் மகிழ்வும் என்னை ஆட்கொள்ள அந்தக் கவிதையைப் பத்திரப்படுத்தி இப்போது என் வசத்தில் வைத்துக் கொண்டிருக்கிறேன்.

அந்தக் கவிதையின் தலைப்பு:

**"நடுத்தரக் குடும்பத்தில் ஒரு நம்பிக்கை துரோகம்"**

அந்தக் கவிதையை வாசகர்கள் முன் வைக்கிறேன் வாசகர்கள் இதைப் படித்துப் பார்த்துவிட்டு தங்கள் கருத்துகளை இது குறித்து ஓர் Open Letter ஆக எனக்கு எழுதினால், நான் பெரிதும் இறும்பூதெய்துவேன்.

புதுக்கவிதைப் பாணியில், ஒரு சிறுகதையை நான் எழுதியிருப்பதாக பம்பாய் நண்பர் பரவசத்தோடு என்னிடம் சொன்னார்.

வாசகர்களின் மதிப்பெண்களை நான் விழைகிறேன். இதோ கவிதை,

அம்மாவுக்கு
அர்த்தராத்திரியில்
அக்கடி முற்றத்திற்கு வரும்
அப்படியொரு நாள்
அவள் டார்ச்செடுத்து வர...
தூக்கத்தில் - என்
துணி விலகியிருக்க...
திட்டுத் திட்டாகத்
தீட்டுப் பட்டிருப்பதை -
எவரெடி
எடுத்துக் காட்ட
அதிர்ந்து
அலமந்து
போய்
அடுத்த ரூமில்
அயர்ந்து
அண்ணாந்து படுத்திருந்த
அப்பாவை எழுப்பி
அம்மா சொன்னாள்.
அப்பா...
P.F. லோனுக்கு
அன்றே அப்ளை செய்தார்.
ஓவர்டைம் பார்த்து
ஒவ்வொரு நாளும்
ஒன்பது மணிக்கு
வீடு திரும்பாலனார்.
ஞாயிற்றுக்கிழமைகளில்
ராஜாஜி கிளப்
ரம்மி யாட்டத்தையும்
ராயர் கிளப்
ரவா தோசையையும்
புறக்கணித்தார்.
நராயணச் செட்டியாரிடம்
நாலு வட்டியானாலும்
சரி என்று சம்மதம்
சொன்னார்;
கிராமத்து நிலத்திற்கு
கிரய சாசனம் எழுத
பட்டா மணியம்
கிட்டா வையருக்கு
காகிதம் போட்டார்
அம்மாவுக்கோ
கையும் ஓடவில்லை;
காலும் ஓடவில்லை...
பேப்பரையும்
பென்சிலையும்
வைத்துக் கொண்டு
கூட்டியும்
கழித்தும்
வகுத்தும்.
பெருக்கியும்...
ரெண்டு வேளை காப்பி
ஒரு வேளையானது;
ரசமிருந்தால்
குழம்பில்லை;
குழம்பிருந்தால்
ரசமில்லை.


(தொடரும்.......)




---

**உளவு பார்த்தல் எவ்வாறு ஆரம்பமானது, உளவு பார்த்தலால் என்னென்ன நன்மைகள், தீமைகள் ஏற்படுகின்றன என்பதை சில அநுபவங்களிலிருந்து கூறும் கட்டுரைத் தொடர்....**

## சில அநுபவங்கள்




அவளும் சிரிக்கச் சிரிக்கப் பேசி அவரைத் தன் வயப்படுத்திக் கொண்டாள்.

அவர் விரும்பினால் தான் எதற்கும் தயார் என்பதைப்போல அவள் ஜாடையும் காட்டினாள்.

ஆனால், இளைஞர் தன் நிலையை எண்ணிப் பார்த்தார். இந்தியத் தூதரகத்தில் அவர் வேலை பார்க்கிறார். தன் மனம் போனபடி அவர் நடந்துகொள்ள முடியாது. கொஞ்சம் எச்சரிக்கையாகவே இருந்தார்.

ஆனால் ரஷ்ய அழகி அவரை விடுவதாக இல்லை. அவருடைய சபலத்தைத் தூண்டினாள். தன்னுடைய இருப்பிடத்திற்கு விருந்து சாப்பிட வருமாறு அழைத்தாள். இளைஞர் பாவம், சபலத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அழைப்பை ஏற்று அவளுடைய இருப்பிடத்திற்கும் சென்றார்.

அவள் சுவையான விருந்தை மட்டும் அவருக்குக் கொடுக்கவில்லை. தன்னுடைய பருவ அழகையே அவருக்கு விருந்தாக்க முன்வந்தாள். தான் தனிமையில் செய்யும் காரியங்கள் உலகத்திற்கு எங்கே தெரியப்போகிறது என்கிற பாதுகாப்பு உணர்ச்சியில் அவரும் அவள் விரித்த வலையில் விழுந்தார்.

அந்த அறையில் இரகசியமாக வைக்கப்பட்டு இருந்த கேமரா ஒன்று அவருடைய லீலைகளைப் படம் எடுப்பதை அவர் அறியமாட்டார்.

ரஷ்ய அழகியோடு அவருக்குள்ள பழக்கம் தொடர்ந்தது. அவருடைய இருப்பிடத்திற்கு சென்று வருவதை அவர் வாடிக்கையாக்கிக் கொண்டுவிட்டார். ஒரு நாள் அவர் அவளது வீட்டிற்குச் சென்றபோது, அங்கே வேறு ஒரு நபரும் இருந்தார். ரஷ்யப் பெண், அந்த நபரை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தாள். எல்லோரும் மது அருந்தினார்கள். இந்திய இளைஞர் அருந்திய மதுவில் மயக்க மருந்து கலந்து கொடுக்கப்பட்டது. என்ன நடக்கிறது என்று அவருக்குத் தெரியாத நிலையில் இன்னொரு ஆணோடு அவர் நிர்வாணமாகப் படுத்திருப்பது போன்ற படங்களை அங்கே இருந்த இரகசிய கேமரா பதிவுசெய்து கொண்டது.

எல்லாம் மகிழ்ச்சிகரமாக நடந்து கொண்டு இருப்பதைப் போன்ற உணர்வில் இந்திய இளைஞர் உற்சாகத்தோடு இருந்தார்.

ஒரு நாள் கே.ஜி.பி.யைச் சேர்ந்தவர்கள் அவரை வந்து சந்தித்தார்கள். அவர்கள் காட்டிய புகைப் படங்களைப் பார்த்தபோது இந்திய இளைஞர் அதிர்ச்சிக்கு உள்ளானார். தான் வசமாக மாட்டிக்கொண்டு விட்டோம் என்று அவருக்குப் புலனாயிற்று. இந்தப் படங்களை எல்லாம் இந்தியாவில் உள்ள அவருடைய மனைவிக்கும், இந்திய தூதரகத்தில் உள்ள அவருடைய மேலதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்போவதாக வந்தவர்கள் மிரட்டினார்கள்.

இந்திய இளைஞருக்கு அவமானமாக இருந்தது. நெருக்கடியிலிருந்து தப்ப வழியும் தோன்றவில்லை. அவர்கள் சொல்லுகிறபடி கேட்டு நடக்க அவர் ஒப்புக்கொண்டார். கே.ஜி.பி. அவரைத் தன்னுடைய கையாளாக ஆக்கிக் கொண்டது. அந்த இளைஞர் இந்தியாவிற்குத் திரும்பியவுடன் அவர் மூலமாக இந்திய அரசிடமிருந்து இரகசியங்களைத் தெரிந்துகொள்வது கே.ஜி.பி.யின் நோக்கம்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

---

சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துள்ள ஒரு மனிதனின் உதவியால் குழந்தைப் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள பெண்கள் கியூவில் நிற்கிறார்கள் என்ற தகவல் இத்தாலியில் இருந்து வெளியாகியுள்ளது.

வட இத்தாலியில் உள்ள எல்ப்ஸ் மலைத் தொடரில் கனதிமிக்க பனிப்படலத்தின் கிழிருந்து 1991 செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி ஒரு பூதவுடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆய்வுகளின் போது இது சுமார் 5000 வருடங்களுக்கு முன்பதாக இறந்த ஒருவரின் சடலம் எனக் கண்டறியப்பட்டுள்ளதுடன் இதற்கு அவர்கள் ஔட்ஸி

# பெண்களைக் கவர்ந்த பனி மனிதன்

எனப் பெயரிட்டுள்ளனர்.

இந்த ஔட்ஸி அக்காலகட்டத்தில் சிறந்ததொரு வேட்டைக்காரராகவும் போராட்ட வீரராகவும் கருதப்படுகின்றார்.

ஔட்ஸி தொடர்பில் புதிய தகவல்களைச் சேகரிக்கச் சென்றுள்ள பெட் ரோலர் என்ற ஊடகவியலாளர் வட இத்தாலியில் உள்ள பொல்கானோ நகரில் ஒரு ஹோட்டலில் தங்கியுள்ளார். இங்கு வைத்து அவர் அமெரிக்காவின் ஜோர்ஜியா மற்றும் புளோரீடா ஆகிய மாநிலங்களில் இருந்து வருகை தந்திருந்த சில இளம் பெண்களைச் சந்தித்துள்ளார். இப் பெண்கள் அசாதாரணமான எண்ணங்களைக் கொண்டிருந்தனர்.

விஞ்ஞானத்தின் இன்றைய வளர்ச்சியைப் பயன்படுத்தி ஔட்ஸியின் மூலம் பிள்ளைகளை உருவாக்குவதே இவர்களது ஒரேயொரு நோக்கமாகும். ஔட்ஸி எனும் பனி மனிதனின் ஆண் விந்தினை தங்களது கர்ப்பப்பையில் செலுத்தி கர்ப்பம் தரிப்பது அவர்களது திட்டமாகும்.




ஊடகவியலாளர் பெட் ரோலர் முதலாவதாக என்ஜெலா ஜோன்ஸை சந்தித்துள்ளார். பெட் ரோலருக்கு ஏனைய பெண்களை என்ஜெலா அறிமுகஞ் செய்து வைத்துள்ளார். பெடி வீல்சன் எனும் பெண் ஜோர்ஜியா மாநிலத்தில் உள்ள மெகொஸ்வல் பகுதியில் இருந்து வந்துள்ள ஒரு ஆசிரியை ஆவார்.

மேலும், ப்ளோரிடாவில் இருந்து வந்திருந்த ஷெரோன் தெம்ஸ் நூலகப் பொறுப்பாளராகவும், லீஸா மெக்லீன் சட்டத்தரணியாகவும், பிலீஸ் க்ரேன் தாதியாகவும் தொழில் செய்து வருபவர்கள்.

"நீங்கள் எல்லோரும் எதற்காக இங்கே வந்துள்ளீர்கள்? இந்தப் பனி மனிதனின் மீது இந்தளவு அக்கறை கொண்டிருப்பதற்கு என்ன காரணம்?" என பெட் ரோலர் என்ஜெலா ஜோன்ஸிடம் வினவியபோது,

'அது ஒரு சின்ன விஷயம். அதாவது அவரின் மூலம் எங்களுக்குக் குழந்தைகள் வேண்டும்' என்கிறார் ஜோன்ஸ்.

"ஔட்ஸி - அதாவது இந்தப் பனி மனிதனின் உடல் சவுத் டிரோல் நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இத குளிரூட்டப்பட்ட உடலாகும்' என ரோலர் கூறும் போது-

"அது உண்மை. எங்களை ஔட்ஸியின் குழுவினர் என அழைத்தாலும் அதில் தவறில்லை" என்கிறார் லீஸா மெக்லின்.

"ஏன்?"

அதற்கும் லீஸாவே பதிலளிக்கின்றார்.

"அமெரிக்காவில் உள்ள ஆண்களிடம் ஆண் தன்மை இப்போது கிடையாது. பெண்கள் தொடர்பான செயற்பாடுகள் காரணமாகவே அவர்கள் இப்போது பின்னடைவு கண்டுள்ள கூட்டத்தினராக மாறியுள்ளனர். ஒழுங்கான ஒரு ஆணைத் தேடிக்கொள்வது இப்போது கடினமான காரியமாக உள்ளது. போராட்ட குணமிக்க, சோம்பேறித்தனமற்ற, அச்சமின்றி தைரியமாக முன்செல்லக் கூடிய ஒரு தந்தையே எமது குழந்தைகளுக்குத் தேவை. அவ்வாறானவர்களின் குழந்தைகள்தான் நெஞ்சுரம் கொண்டவர்களாக அமைவார்கள். ஔட்ஸி என்பவர் ஒழுங்கான வீரமிக்க ஓர் ஆண். பண்டையக் காலத்தின் வேட்டைக்காரர் அதிலும் அவர் ஒரு போராட்டவாதியாவார். அவர் மூலம் கிடைக்கக் கூடிய பிள்ளைகள் எப்படி இருப்பார்கள் என சற்று யோசித்துப் பாருங்கள்" என்கிறார் லீஸா மெக்லின்.

"ஔட்ஸி மூலம் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதில் நீங்கள் ஏதெனும் அமைப்பினை உருவாக்கியுள்ளீர்களா?"

"ஆமாம், "Frost Females Requesting Oetzis Sperm Today" அதாவது 'ஔட்ஸியின் ஆண் விந்துக்களை எதிர்பார்க்கும் பெண்கள்' என்ற அமைப்பை நாங்கள் உருவாக்கியுள்ளோம்" என்கிறார் ஷெரோன் கெம்ப்.

அன்றைய தினம் பொல்கானோ நகரில் கூடியிருந்த அவர்களது வீரரான பனி மனிதனைக் காணும் வாய்ப்புக் கிட்டியிருந்தது. அவர்கள் பெட் ரோலருடன் சவுத் டிரோல் நூதனசாலைக்குச் சென்றனர்.

அங்கு பாதுகாப்பான ஓர் அறையில் ஔட்ஸியின் உடல் வைக்கப்பட்டிருந்தது. நிர்வாகிகளின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட அவர்கள் அந்த அறைக்குள் நுழைகின்றனர்.




அந்த அறையில் ஓர் மூலையில் பனி மனிதனின் மாதிரி உடல் வைக்கப்பட்டிருந்தது.

"எங்களது வீரர் மிகவும் சிறியவராக இருக்கின்றார். சின்னக் குழந்தையைப் போன்று...." தங்கள் எதிர்பார்ப்புகள் சிதைந்து விட்டதை உணர்ந்தவராய் என்ஜெலா கூறினார்.

"இல்லை.... இல்லை... பதற்றப்பட வேண்டாம்... இது மாதிரி உடல்" என்கிறார் அதைக் கண்ணுற்ற ஷெரோன்.

இதனிடையே அங்கு வந்த நிர்வாகி ஒருவர்.

"பதற்றமடையவேண்டாம். ஔட்ஸியின் உடல் அதோ அங்கே இரும்புப் பெட்டியில் வைக்கப்பட்டிருக்கிறது. அங்கு சென்று பார்க்கலாம்" என்கிறார்.

இரும்புப் பெட்டியில் ஒரு சிறு துவாரத்தின் ஊடாக பனி மனிதன் ஔட்ஸியின் உடலைப் பார்க்க இயலும். அனைவரும் அந்த உடலை மிக உன்னிப்பாக அவதானிக்கின்றனர். அதன் பின்னர் ஒவ்வொரு முகங்களைப் பார்த்துக் கொள்கின்றனர்.

"எங்கள் தேவை பண்டைக் காலத்து திடகாத்திரமான ஒரு வீரர் அன்றி குட்டையானவர்கள் அல்லர்" என்பது என்ஜெலாவின் வாதமாக இருந்தது. ஔட்ஸின் மூலம் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள இயலும் என நான் எண்ணவில்லை. முடியுமாக இருந்தாலும் இத்தாலியர்கள் இதனை விரும்பமாட்டார்கள் என்பது பெட் ரோலரின் கருத்தாகும்.




"பெண்கள் ஆண்களது பிடியில் இருந்து விடுபட வேண்டும். பெண்களை தைரியமுள்ள, சுதந்திர, அடிமையாகாத அமெரிக்கப் பெண்களாக மாற்ற வேண்டும். இது தான் எங்களது நோக்கமாகும்" என்பது என்ஜெலாவின் கருத்தாகும்.

"பிரபல நடிகர் ஜோன் வேனனி போன்ற ஒருவரின் உடல் பனியில் சிக்குண்டு இருந்திருப்பின் எங்களது எதிர்பார்ப்புகளை இலகுவாக நிறைவேற்றிக்கொள்ள முடிந்திருக்கும்" என என்ஜெலா பெருமூச்சகளுக்கிடையே கூறுகிறார்.

"ஔட்ஸியின் உடல் பதப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

"ஔட்ஸியின் மூலம் குழந்தை பெற்றுக்கொள்ள இயலுமா? இயலாதா? என்ற ஆய்வுகள் ஒரு புறமிருக்க, இந்தப் பெண்கள் ஏன் இப்படி அலைகிறார்கள் என்ற கேள்விக்கு விடையைத் தேடிப் பாருங்கள். பல உண்மைகள் புலப்படக்கூடும்.

-பாரூக்

# கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சு.

## தொழிற்பயிற்சி பிரிவு.

### தச்சுவேலைப் (இயந்திர) பயிற்சி நெறி
Carpenter (Mechanised ) Course

வடக்கு, கிழக்கு மாகாணத்தை வாழ்விடமாகக் கொண்ட அல்லது அங்கிருந்து இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களில் வாழும், பாடசாலைக் கல்வியை முடித்த / இடைநிறுத்திய மற்றும் பாதிப்புற்ற தரம் 8இல் சித்திபெற்ற இளைஞர் யுவதிகளுக்காக மேற்படி அமைச்சினால் ஆறு மாத கால தச்சுவேலைப் (இயந்திர) (**Carpenter Mechanised**) பயிற்சி நெறி திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மொழிமூலம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப் பயிற்சிநெறிக்குத் தெரிவுசெய்யப்படுவோருக்குத் **தங்குமிட வசதியும், உதவிக் கொடுப்பனவும்** வழங்கப்படும்.

### அலுமினியம் கட்டுமாணப் பயிற்சி நெறி
**Aluminium Fabricators Course**

வடக்கு, கிழக்கு மாகாணத்தை வாழ்விடமாகக் கொண்ட அல்லது அங்கிருந்து இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களில் வாழும், பாடசாலைக் கல்வியை முடித்த / இடைநிறுத்திய மற்றும் பாதிப்புற்ற தரம் 8இல் சித்திபெற்ற இளைஞர் யுவதிகளுக்காக மேற்படி அமைச்சினால் ஆறு மாத கால அலுமினியம் கட்டுமாண (**Aluminium Fabricators**) பயிற்சிநெறி கொழும்பு மாவட்டத்தில் தமிழ் மொழி மூலம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப் பயிற்சிநெறிக்குத் தெரிவுசெய்யப்படுவோருக்குத் **தங்குமிட வசதியும், உதவிக் கொடுப்பனவும்** வழங்கப்படும்.

### இயந்திர இயக்குனர் (தரிப்பு மற்றும் நகரும் பயிற்சி)
Machinery Operator Training (Moving & Stationary)

வடக்கு, கிழக்கு மாகாணத்தை வாழ்விடமாகக் கொண்ட அல்லது அங்கிருந்து இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களில் வாழும், பாடசர்லைக் கல்வியை முடித்த / இடைநிறுத்திய மற்றும் பாதிப்புற்ற தரம் 8இல் சித்திபெற்ற இளைஞர், யுவதிகளுக்காக மேற்படி அமைச்சினால் அநுராதபுரம் மாவட்டத்தின் கல்குளம் பிரதேசத்தில் உள்ள பயிற்சி நிலையத்தில் சகலவகையான பார இயந்திரங்கள் இயக்குவதற்கான பயிற்சி தமிழ்மொழி மூலம் அளிக்கப்படவுள்ளது.

இப் பயிற்சிநெறிக்குத் தெரிவுசெய்யப்படுவோருக்குத் **தங்குமிட வசதியும், உதவிக் கொடுப்பனவும்** வழங்கப்படும்.

**தகைமைகள்**

1. வடக்கு, கிழக்கு மாகாணங்களை வாழ்விடமாக / பிறந்த இடமாகக் கொண்டவர்களாக இருத்தல்.
2. தரம் 8 அல்லது அதற்கு மேல் சித்தி பெற்றிருத்தல்.
3. பார ஊர்தி சாரதி – அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல். (வகுப்பு ஏ) (இயந்திர இயக்குனருக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு மட்டும்)
4. 17 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்.
5. நற்குணமும் நல்லொழுக்கமும் உடையவர்களாய் இருத்தல்.

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தேசிய அடையாள அட்டையின் நிழல் பிரதியுடன் கீழே தரப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தை "A4" அளவுத் தாளில் தயாரித்துப் பூரணப்படுத்தி 30.11.2004 திகதிக்கு முன்

**பணிப்பாளர்,**
**தொழிற்பயிற்சி,**
**கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி,**
**கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள்**
**அமைச்சு**
**மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும்**
**அமைச்சு.**
**2ஆம் மாடி,**
**64, காலி வீதி,**
**கொழும்பு – 03.**
என்ற முகவரிக்கு அனுப்பல் வேண்டும்.

க. மகானந்தன்,
செயலாளர்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. முழுப்பெயர்,(ஆங்கிலத்தில் பெரிய எழுத்தில்) :-
..............................................................................................................

2. முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில் பெரிய எழுத்தில்) :-
..............................................................................................................

3. விலாசம் (ஆங்கிலத்தில்) :-
..............................................................................................................

4. முழுப்பெயர் (தமிழில்) :-
..............................................................................................................

5. இலங்கைப் பிரஜையா? ஆம் / இல்லை:-

6. தேசிய அடையாள அட்டை இல
..............................................................................................................

7. ஆண் / பெண்:-
..............................................................................................................

8. குடியியல் நிலை :-
..............................................................................................................

9. பிறந்த திகதி :-
..............................................................................................................

10. (1) பிறந்த மாவட்டம் :-
..............................................................................................................

(2) தேர்தல் மாவட்டம் :-
..............................................................................................................

(3) தேர்தல் தொகுதி பிரிவு:-
..............................................................................................................

11. கல்வித் தகைமைகள் (சித்தியெய்திய பாடம், ஆண்டுகளுடன்) :-
..............................................................................................................

12. வாழ்க்கைத் தொழிற்பயிற்சித் தகைமைகள் (பெற்றிருப்பின்) :-

| நிறுவனம் | துறை | காலம் |
|---|---|---|
| | | |

13. மொழித் தேர்ச்சி :-

| | வாசித்தல் | எழுதுதல் | பேசுதல் |
|---|---|---|---|
| தமிழ் | | | |
| ஆங்கிலம் | | | |
| சிங்களம் | | | |

14. தொழில் அநுபவம் (இருப்பின்) :-

| காலம் (மாதங்களில்) | தொழில் புரிந்த இடம் | மாதாந்த வேதனம் ரூபாய். |
|---|---|---|
| | | |

இத்துடன் தேசிய அடையாள அட்டையின் (இருபுறம்) நிழற்பிரதி சமர்ப்பிக்கின்றேன்.


எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானதும் சரியானதுமென வெளிப்படுத்துகிறேன். பொய்யான தகவல்கள் தரப்பட்டுள்ளதென எச்சந்தர்ப்பத்திலும் கண்டுபிடிக்கப்பட்டால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம் என நான் நன்கறிவேன்.

.................................... ..............................................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.




**சக்தி சக்தி என்றால் செல்வம்**
**தானே ஊறும் கண்டீரோ!**
**சக்தி சக்தி என்றால் கல்வி**
**தானே தேறும் கண்டீரோ!.**

**சுப்பிரமணிய பாரதியார்-**



# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு



ஒரு நகரத்தின் தெற்கு எல்லையில் ஓர் பெரிய ஆலமரம் இருந்தது. அம் மரத்தில் பல்வகையான பறவைகள் வாழ்ந்து வந்தன. அதன் அகன்ற கிளைகள், அங்கு வந்து தங்கும் பயணிகளுக்கு அருமையான நிழல் அளித்து வந்தன.

அந்த ஆலமரத்தில் காக்கை ஒன்று வசித்து வந்தது. ஒரு நாள் ஒரு வேடன் பறவைகளைப் பிடிப்பதற்காக அந்த மரத்தை நோக்கி வருவதை அது கண்டது. 'அந்தோ! இந்த மரத்தில் வாழும் பறவைகளுக்குத் தீங்கு நேருமே!' என்று வருந்தியது.

உடனே காக்கை, கிளைக்குக் கிளை தாவி அங்கிருந்த பறவைகளிடம், "ஒரு வேடன் தனது வலையை விரிக்க இங்கே வந்து கொண்டிருக்கின்றான். அவன் உங்களைக் கவர்வதற்காக அரிசி மணிகளை வைத்திருக்கின்றான். இந்த அரிசி மணிகளைத் தொடாதீர்கள். அப்படித் தொட்டீர்கள் என்றால் நீங்கள் வருந்த வேண்டி வரும்!" என்று எச்சரித்தது.

அது கூறியவாறே அங்கு வந்த வேடன் தன்னிடமிருந்த அரிசி மணிகளைத் தரையில் தூவி அவற்றின் மீது வலையை விரித்தான். பிறகு அருகில் ஓரிடத்தில் மறைந்து கொண்டான். ஆனால் காக்கையினால் எச்சரிக்கப்பட்டிருந்த பறவைகள் அந்த அரிசியைத் தொடவில்லை, அதனால் பிடிபடவில்லை.

அப்போது அங்கே புறா அரசன் கீழ் ஒரு புறாக் கூட்டம் பறந்து வந்தது. அப் புறாக்கள் கீழே சிதறிக் கிடக்கும் அரிசி மணிகளைப் பார்த்தன. அதைக் கண்டு காக்கை சத்தமாக எச்சரித்தது. ஆனால் புறாக்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. அதனால் அவை வலையில் சிக்கிக் கொண்டன.

ஏராளமான புறாக்கள் வலையில் சிக்கிக்கொண்டதைக் கண்டு வேடன் மசிழ்ச்சியடைந்தான். மறைவிடத்திலிருந்து வெளியே வந்தான்.

அதைக் கண்ட புறாக்களின் அரசன் புறாக்களிடம், "பதற்றப்படாதீர்கள், வேடன் விரித்த வலையிலிருந்து தப்புவதற்கு நமது புத்தியைப் பயன்படுத்த வேண்டும். ஆனால் அதற்கு முதலில் நாம் ஒற்றுமையாக இருத்தல் வேண்டும். வேடன் அருகில் வந்ததும் நாம்

**பாப்பா முரசு சிறுகதை**

எல்லோரும் சேர்ந்து வலையுடன் பறந்து விட வேண்டும்." **ஒற்றுமையே பலமாகும்** என்பதை ஒருபோதும் மறவாதீர்! தனித்தனியே நம்மால் எதையும் சாதிக்க முடியாது என்றது.

அப் புறாக்கள் தங்கள் அரசன் கூறிபடியே வேடன் அருகில் வரவும், வலையோ வானில் பறந்து போனதால் அவன் பிடியிலிருந்து தப்பின. ஆனாலும் தாங்கள் மாட்டுப்பட்டி வலையிலிருந்து வெளியே வர முடியவில்லை.

அப்போது அரசன் புறா "நாமனைவரும் வெகு தொலைவிலுள்ள என் நண்பனிடம் செல்வோம். அவன் நம்மை இந்த வலையிலிருந்து விடுவிப்பான்" என்றது.

அவை யாவும் ஓர் ஆற்றங்கரையிலுள்ள பொந்தினருகே வந்து இறங்கின.

"நண்பா! நான் துன்பத்திலிருக்கிறேன். உடனே வெளியே வா" என்றது அரசன் புறா.

பொந்தினுள் இருந்த சுண்டெலி, நீ யார்? உனக்கு என்ன வேண்டும்" என்று கேட்டது.

"நான் புறாக்களின் அரசன் வெளியே வந்து என்னைப் பார் என்றது புறாக்களின் அரசன்.

சந்தோஷடானன சீச்சொலியுடன் வெளியே வந்த சுண்டெலி, தன் நண்பன் வலையில் சிக்கியிருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தது.

"நல்ல அறிவுரையை கேட்காத என் மடத்தனத்தினால் நாங்கள் அனைவரும் வேடன் விரித்த வலையில் சிக்கிக்கொண்டோம். எங்களை விடுவிப்பாயாக" என்றது அரசன் புறா.


"துன்பம் வந்துள்ளபோது உதவவில்லையென்றால் அவர்கள் என்ன நண்பர்கள்? முதலில் உன்னை விடுவிக்கிறேன்." என்றது சுண்டெலி.

"நண்பனே! முதலில் என் சுற்றத்தை விடுவிப்பாய்" என்றது புறா அரசன்.

சுண்டெலி தனது கூரிய பற்களால் வலையை அறுத்து எல்லாப் புறாக்களையும் விடுவித்தது. எல்லாப் புறாக்களும் சுண்டெலிக்கு நன்றி கூறி வானில் பறந்து சென்றன.

புறாக்கள் அனைத்தும் ஒன்று பட்டு வலையை தூக்கிப் பறந்தபடியால் உயிர் பிழைத்தன.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **20.10.2004**.

வர்ணம் தீட்டும் போட்டி இல: **567**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 565

பரிசுக்குரியவர்:
**ஏ.எம். ஹஸன்,**
**340, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர்-03**

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| செல்வன். சிறீகுகன், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை. | அக்ஷயா வாலசிங்கம், 20/08, பெயிலி குறுக்கு வீதி. மட்டக்களப்பு. |
| ரா. திவ்யா, பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை. | யோ. சிவாஜினி, யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், மட்டுவில், சாவகச்சேரி. |
| நந்தகுமார் தர்ஷினி, 271, காந்திநகர், திருகோணமலை. | ஹம்ஸத் பளீல், 37/15, ஹிஜ்ராத்னமாவத மாவத்தை, மல்லவபிடிய, குருநாகல். |
| ஆர். அஜிமில், மாங்குளம், நேரியகுளம், வவுனியா. | சி. றாதை, கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை, கல்கிசை. |
| எம். எச். அமானி, கஹட்டபிடியா, முஸ்லிம் வித்தியாலயம், கம்பளை. | ஏ.கே.எம். ரிபைதீன், வட்டவிதானை குறுக்கு வீதி, வாழைச்சேனை - 05. |

# ஆத்திசூடி

## இயல்வது கரவேல்

**நீ உன் இயல்பான பண்புகளினின்று மாறுபட்டு நடக்காதே.**

*நன்றி: நிரஞ்சலா, கண்டி.* -ஔவையார்

## மனிதனும் தேனீயும்.



*மனிதன்:*

தேடிச் சென்று பூவிலே
தேனை எடுக்கும் ஈயே வா.
ஜாடி நிறையத் தேனையே
தருவேன்; குடித்துச் செல்லுவாய்.

*தேனீ:*

என்னைப் போலத் தினம்தினம்
ஈக்கள் தேனை எடுத்தன.
கொண்டு வந்து கவனமாய்க்
கூட்டில் சேர்த்து வைத்தன.

கூட்டைக் கலைத்தே ஈக்களைக்
கொன்று விட்டுத் தேனையே
வீட்டில் சேர்த்து வைக்கிறீர்.
விருந்து தரவா அழைக்கிறீர்?


எத்திப் பிழைக்க நானுமே.
எண்ண மாட்டேன் ஆதலால்,
புத்தம் புதிய தேனையே
பூவில் எடுக்கப் போகிறேன்.

# அதிசய உலகம்



## மடகாஸ்கர் லெமூர்

மடகாஸ்கர் தீவுப் பகுதியில் வாழும் லெமூர், நீண்ட மூஞ்சியுடைய குரங்கினம் சார்ந்த, இரவில் நடமாடும் பாலுண்ணி விலங்கு வகையாகும். படத்தில் நீங்கள் காண்பது சி:பாகா என்னும் இனத்தைச் சேர்ந்ததாகும். பார்ப்பதற்கு வெள்ளைக் கம்பளியை உடையாகத் தைத்து இறுக்கமாகப் போட்டுக்கொண்டது போல் காணப்படும் அதன் கண்களில் தெறிக்கும் கொடூரத்தைப் பார்த்தீர்களா? ஆனால் இது பகலில்தான் நடமாடுமாம்.




## கடலில் ஓர் ஹோட்டல்

ஒரு மிகப் பெரிய பாய்மரப் படகு போல் தோற்றமளிக்கும் இதுதான் உலகிலேயே மிக உயரமான ஹோட்டல்! துபாயில் சுற்றுலாப் பிரயாணிகளைக் கவருவதற்காக இங்கிலாந்தின் மிகப் பெரும் நிறுவனமான அட்கின்ஸ் வ்டிவமைத்து, நிர்மாணித்து நிர்வகிக்கிறது. இந்த ஹோட்டலைக் கடலுக்குச் சற்று உள்ளே சிறு தீவை உருவாக்கி, அதில் அதிநவீன கட்டடக் கலையின் முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் இந்த ஹோட்டலைக் கட்டியிருக்கிறார்கள்.

# உங்கள் பொது அறிவு எப்படி?


1. அசற்றிக் அமிலம் என்பதன் சாதாரண பெயர் என்ன?
   **வினாகிரி.**
2. இறக்கை இல்லாத பறவை எது?
   **கிவி.**
3. அதிக நீரருந்தும் பறவை எது?
   **புறா.**
4. மிகப் பெரிய முட்டையிடும் பறவை எது?
   **நெருப்புக் கோழி.**
5. மிகச் சிறிய முட்டை இடும் பறவை எது?
   **வெவ்வெயின்**
6. மிக வேகமாகப் பறக்கும் பறவை எது?
   **சுவிப்ட் (மணிக்கு 200 மைல்)**
7. நீண்டகாலம் வாழும் பறவை எது?
   **ஒஸ்ரிச்.**
8. தென்துருவத்தில் பறக்க முடியாத கடற்பறவை எது?
   **பெங்குவின்.**
9. அவுஸ்திரேலியாவில் உள்ள பறக்க முடியாத பறவை எது?
   **எமு.**
10. பின்புறமாகப் பறக்கும் பறவை எது?
    **ஹம்மிங் பேர்ட் (இசைக்கும் பறவை).**

## தகவல் பெட்டி



# ஒரே சூலில் பிறந்த ஐந்து குழந்தைகள் ஆய்வுத் தகவல்கள்

இலங்கையில் இரண்டாவது தடவையாக அண்மையில் ஒரே தடவையில் 5 குழந்தைகள் பிறந்துள்ளன. கொழும்பு பொரளை, காசல் மகப்பேற்று வைத்தியசாலையில் கடந்த 6ஆம் திகதி இந்தக் குழந்தைகள் பிறந்துள்ளன. இலங்கையில் முதற் தடவையாக 1980இல் டி சொய்ஸா மகப்பேற்று வைத்தியசாலையில் ஐந்து குழந்தைகள் ஒரே தடவையில் பிறந்துள்ளன. அதன் பின்னர் ஒரே சூலில் பிறந்த பல குழந்தைகள்



தொடர்பாகப் பல்வேறு செய்திகள் ஊடகங்களின் வாயிலாக வெளிவரத் தொடங்கின. இதுவரையில் இக் குழந்தைகள் குறித்து பல்வேறு விதமான கருத்துக்கள் வெளியாகியுள்ளன. இதேநேரம் இன்று பலர் ஒரே தடவையில் 5 குழந்தைகள் பிறந்தமை தொடர்பான தகவல்களைத் திரட்டியும் வருகின்றனர். உலகில் ஒரே தடவையில் 7 குழந்தைகள் கூடப் பிறந்திருக்கின்றன. இத்தாலியில் உள்ள இரு பெண்கள் ஒரே தடவையில் 6 குழந்தைகளைப் பிரசவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு பிறக்கும் குழந்தைகளின் பிறப்பை இரு வகையாகக் கொள்ளலாம். அதாவது, உடலுறவுக்குப் பின் கருவானது கர்ப்பப் பையில் இரு பிரிவுகளாகப் பிரிந்ததன் பின்னர் புதிதாக




ஒரு வித்து உருவாகி கரு வளர்வதாகும். இது ஒரு வகை. அடுத்த வகையானது கர்ப்பப் பையில் பெண் முட்டைகள் உருவாகி பின்னர் அவை ஆண் விந்துக்களுடன் கலந்து வித்து உருவாகி கரு வளர்ச்சி பெறுவதாகும்.

இவ்வகையில் வித்து உருவாகும் போது இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு என்ற எண்ணிக்கையில் குழந்தைகள் பிறக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. முதலாவது வகையைப் பொறுத்தவரையில் இரு குழந்தைகளுக்கு மேற்பட்ட வகையில் குழந்தைகள் பிறப்பது இம் முறையிலாகும்.

கலவையான வித்துக்கள் இரு பிரிவுகளாகப் பிரிந்து செல்வதால் இரு குழந்தைகள் பிறக்கின்றன. மூன்று குழந்தைகள் பிறக்கும்போது மேற்படி இரு பிரிவுகளாகப் பிரிந்து உருவாகும் ஒரு வித்து மீண்டும் இரு பிரிவுகளாகப் பிரிகின்றது. நான்கு குழந்தைகள் பிறக்கும்போது இரு பிரிவுகளாகப் பிரிந்து மீண்டும் இரு பிரிவுகளாகப் பிரிகின்றன. நான்கு பிரிவுகளாகப் பிரிந்து உருவாகும் வித்துக்களில் ஒன்று மீண்டும் இரண்டாகப் பிரியும் போது ஐந்து குழந்தைகள் பிறக்கின்றன. இதே போல் வித்துக்கள் இரண்டாகப் பிரிந்து பிறக்கும் குழந்தைகளது எண்ணிக்கை அதிகரிக்கின்றன.

பொதுவாக இவ்வாறு பிறக்கின்ற குழந்தைகளை முக்கிய இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. சர்வமும் சமமான குணவியல்புகளைக் கொண்ட குழந்தைகள். (இதன் போது ஒரே வித்து உடைந்து உருவாகும் குழந்தைகள் என்பதுதான் மிகவும் சரியானதாகும்.)

இவ்வாறான குழந்தைகள் பெரும்பாலும் சமமான குணவியல்புகளைக் கொண்டிருப்பதுடன் இவர்கள் ஒரே பாலையும் கொண்டிருப்பர். எனினும் எப்போதாவது ஒரு முறை இரசாயன மாறுதல்கள் காரணமாக எதிரெதிர் பால்கொண்ட குழந்தைகளும் பிறக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

2. சகோதர குழந்தைகள் ஒரே கர்ப்பப் பையில் வெவ்வேறான குணவியல்புகளைக் கொண்டு பிறப்பதால் இக் குழந்தைகளுக்கு இப் பெயர் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் ஒரே தினத்தில் பிறந்தாலும் கூட இவர்களது குணவியல்புகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவையாகும். இவர்கள் ஒரே பாலைக் கொண்டிருக்கலாம் அல்லது எதிரெதிர் பாலினைக் கொண்டுமிருக்கலாம். அதிகளவில் காணப்படுகின்ற இவ்வாறு பிறந்த குழந்தைகள் இவ்வகையைச் சார்ந்தவையாகும்.

அதிகளவில் ஒரே தடவையில் பிறக்கின்ற குழந்தைகளைக் காணும் வாய்ப்புகளைப் பற்றிப் பார்ப்போம்.

### 01. இனம்

நைஜீரியாவில்தான் மிக அதிகமாகக் குழந்தைகள் இவ்வாறு பிறக்கின்றன. இங்கு 22 பிரசவங்களில் ஒன்று இவ்வாறான பிரசவமாகும். வெள்ளை ஐரோப்பிய இனத்தவர்களுக்கும் வட அமெரிக்க இனங்களுக்கும் இடையில் பிறக்கின்ற 34 குழந்தைகளில் இவ்வாறான ஒரு பிரசவத்தைக் காண இயலும். இவ்வாறு பிறக்கின்ற குழந்தைகள் மிகக் குறைந்தளவில் காணப்படுவது ஆசிய நாடுகளிலாகும். இங்கு 125 பிரசவங்களுக்குள் பிரசவம்தான் ஒரே சூலில் பல பிறக்கும் குழந்தைகளைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. நைஜீரிய இனத்தவர்கள் உணவில் சேர்த்துக் கொள்கின்ற ஒரு வகைக் கிழங்கு காரணமாக இவ்வாறான குழந்தைகளை மிக அதிகமாகப் பிரசவிக்கும் விந்தணுக்களை உற்பத்தி செய்வதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

### 02. வயது

35க்கும் 39க்கும் இடைப்பட்ட வயதுகளையுடைய தாய்மார்களுக்குத்தான் பொதுவாக மிக அதிகளவில் குழந்தைகள் இவ்வாறு பிறக்கின்றன. 40 வயதின் பின்னர் இந் நிலை குறைந்து விடுகின்றது. எனினும் கறுப்பினப் பெண்களிடையே இந்த வயதெல்லையானது 49 வரை நீடிக்கின்றது.

### 03. பாலியல் செயற்பாடுகள்

அதி கூடிய அளவில் பாலியல் உறவில் ஈடுபடுகின்ற தாய்மார்கள் மிக அதிகளவில் ஒரே சூலில் பல குழந்தைகளைப் பெறும் வாய்ப்புகளை உருவாக்கிக்கொள்கின்றனர். பொதுவாக திருமணத்தின் பின்னர் 3 மாத காலம் கழிந்த நிலையில் ஒன்றாய்ப் பிறக்கும் குழந்தைகள் உருவாகும் நிலை ஏற்படுகின்றது.

### 04. உயரம்/பாரம்

மிகவும் உயர்ந்து, பாரம் கூடிய பெண்களுக்கு ஒரே சூலில் பல குழந்தைகள் பிறக்கின்ற வாய்ப்புகள் அதிகமுள்ளன. அதாவது ஒரு குழந்தைக்கு மேலதிகமான குழந்தைகளை தாங்கும் பலம் இவர்களுக்கு இருப்பதுவே இதற்குக் காரணமாகும்.

### 05. குழந்தைகள்

ஏற்கெனவே குழந்தைகளைப் பெற்ற பெண்களுக்கும் ஒரே சூலில் பல குழந்தைகள் பெறும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன. ஏற்கெனவே பல குழந்தைகளைப் பிரசவித்த பெண்களுக்கு இந்த வாய்ப்பு மிக அதிகமாக இருப்பதாகவே ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

### 06. குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரைகள்

குடும்பக்கட்டுப்பாட்டு மாத்திரைகளை பாவித்து அப் பாவனையை நிறுத்தியதன் பின்னர் ஏற்படுகின்ற கருத்தரிப்பின் போதும் குழந்தைகள் ஒன்றாய்ப் பிறக்கும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

### 07. ஏற்கெனவே குழந்தைகள் ஒன்றாய்ப் பிறத்தல்.



ஏற்கெனவே குழந்தைகள் ஒன்றாய்ப் பிறந்திருந்தால் மீண்டும் அவ்வாறான குழந்தைகள் பிறக்கும் வாய்ப்பு சாதாரண பெண்களைவிட இப் பெண்களுக்கு அதிகமாகும்.

### 08. குழந்தை வேண்டி மருந்து வகைகளை உபயோகித்தல்.

இதில் முக்கிய இரு முறைகள் காணப்படுகின்றன. ஒன்று ஹோமோன்களின் ஒத்துழைப்புகள். இரண்டாவது மருந்து வகையில் மற்றும் செயற்கை கருத்தரிப்பு முறைகளாகும். இவ் வகையில் அனைத்துச் சந்தர்ப்பங்களின்போதும் குழந்தைகள் ஒன்றாய்ப் பிறக்கக் கூடிய வாய்ப்புகள் அதிகமுள்ளன.

1934 மே மாதம் 28ஆம் திகதி கனடா, ஒன்ரோரியோ மாநிலத்தில் ஐந்து குழந்தைகள் இவ்வாறு பிறந்துள்ளன. வோகி, செசிலே, எனட், மாலியா எமிலி எனும் இந்த ஐவர் பிறந்து சில காலம் வாழ்ந்துள்ளனர். இவர்களே உலகில் முதலாவதாகப் பிறந்த வாழ்ந்த குழந்தைகளாகும்.

1786 ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி இங்கிலாந்தில் இவ்வாறான ஐந்து குழந்தைகள் ஒரே தடவையில் பிறந்துள்ளன. இதில் மூவர் பிறந்த உடனேயே இறந்துள்ளனர். ஏனைய இருவரும் சிறிது காலம் கழித்து இறந்துள்ளனர்.

1999 ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி ஜோர்ஜியாவில் ஒரே தடவையில் பிறந்துள்ள ஐவர் 24 வாரங்கள் மாத்திரமே தாயின் கர்ப்பப் பையில் இருந்துள்ளனர். குறைந்த காலம் கர்ப்பப் பையில் இருந்த இவர்கள் உயிர் வாழக் கூடிய நிலையைப் பெற்றிருந்தனர்.

இக் குழந்தைகள்தான் பாரம் குறைந்த குழந்தைகளாகவும் கருதப்படுகின்றனர். ஸ்டோன் சகோதர, சகோதரிகள் என அழைக்கப்படும் இவர்கள் ஐவரும் பிறக்கும்போது 5 இறாத்தல் 15.06 அவுன்ஸுகளைக் கொண்டிருந்தனர்.

இதே நேரம் 2001 ஜனவரி மாதம் 21ஆம் திகதி மேற்படி நாட்டில் பிறந்துள்ள ஐவரில் உயிர் வாழ்ந்து வரும் நிக்கலஸ் தினர் எனும் குழந்தை, பிறக்கும் போது 15 அவுன்ஸ் எடையைக் கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

ஐந்து குழந்தைகள் பெரும்பாலும் 28க்கும் 29க்கும் இடைப்பட்ட வாரங்கள் கர்ப்பப் பையில் இருக்கின்றன. எனினும் அமெரிக்க, எலிசோனா மாநிலத்தில் 2003, ஜூலை மாதம் 23ஆம் திகதி பிறந்துள்ள வில்சன் சகோதர, சகோதரிகள் (ஐவர்) 34 வாரங்களும் 3 நாட்களும் கர்ப்பப் பையில் இருந்துள்ளனர்.

அதே நேரம் இக் குழந்தைகள்தான் ஆகக் கூடிய நிறையுடன் பிறந்துள்ளன. பிறக்கும்போது 21 இறாத்தல் 12 அவுன்ஸ் நிறையை இவர்கள் கொண்டிருந்தனர்.

இதில் ஜொசுவா வில்சன் எனும் குழந்தை 5 இறாத்தல் 16 அவுன்ஸ் நிறையைக் கொண்டிருந்தது.

1965 ஜூலை 27ஆம் திகதி நியூஸிலாந்தில் பிறந்த ஐவர், குழந்தை வேண்டி மருந்து வகைகளை உட்கொண்டதன் மூலம் பிறந்துள்ளனர். இவர்கள் 'க்ளேடன் சகோதர, சகோதரிகள் என அழைக்கப்படுகின்றனர்.

செயற்கை முறையில் 1985 ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி இங்கிலாந்தில் 'எகோப்சன் சகோதர, சகோதரிகள்' (ஐவர்) பிறந்துள்ளனர்.

உலகிலேயே அதிகளவில் ஒரே சூலில் ஐவர் பிறந்துள்ள நாடு அமெரிக்காவாகும். 200 பேர் இவ்வாறு பிறந்துள்ளனர். ஆசியாவில் இவ்வாறான குழந்தைகள் மிக அதிகமாக வாழும் நாடு சீனாவாகும். 14 ஐவர் கொண்ட குழந்தைகள் இங்கு வாழ்ந்து வருகின்றன.

-இப்னு அஸூமத்.

# சினி விசிட்

## மூன்று நாட்களும்...

திரையுலக உண்ணாவிரதப் போராட்டம் தினம் ஒருவர் என்ற விகிதத்தில் ஒவ்வொரு துறையின் சார்பிலும் நடந்தபோது மூன்று நாட்களுமே உண்ணாவிரதம் இருந்தவர் ரமேஷ் கண்ணா.

எழுத்தாளர், நடிகர், இயக்குநர் என்ற 3 பிரிவுகளிலும் வருவதால் இந்த 3 நாள் உண்ணாவிரதம்.




## உற்சாக டானிக்!

'இயற்கை' படம் தேசிய விருது பெற்றாலும் பெற்றது, ஆளாளுக்குப் பாராட்டுக்கள், வாழ்த்துக்கள். இதில் படத்தில் நடித்த ஹீரோ ஷாமையும் விட்டுவிடவில்லை. ஒளிப்பதிவாளர் கே.வி.ஆனந்த் பாராட்டும்போது "ஒரு நிஜமான கப்பல் என்ஜினியரின் வாழ்க்கையைப் பிரதிபலித்தீர்கள்" என்று கூறியிருக்கிறார். வேறு யார் பாராட்டினார்கள்? வெளிநாட்டில் இருந்த மாதவன் 5 தடவை போனில் பாராட்டினார். சக நடிகரின் பாராட்டு என்பது இன்னொரு வகை உற்சாக டானிக். அது ஷாம் முகத்தில் அப்பட்டமாகவே தெரிந்தது.

## சும்மாவா பின்னே!

'செல்லமே' படத்தில் நாயகனாக அறிமுகமாயிருக்கும் விசால் 'பூப்பறிக்க வருகிறோம்', 'லவ்மேரேஜ்' படங்களில் நடித்த அஜய்யின் உடன்பிறப்பு. 'மகாப்பிரபு' உள்ளிட்ட படங்களின் தயாரிப்பாளர் ஜி.கே.ரெட்டியின் வாரிசு. அர்ஜுனிடம் அஸிஸ்டென்ட் டைரக்டராகவும் இருந்தவர்.

## என்ன பொருத்தம்!

'நியூ' படத்தில் முதலில் அம்மா வேடத்துக்குப் பேசப்பட்டவர் குஷ்பு. பிறகு தேவயானி நடித்தார். 'கிரி' படத்திலும் ஒரு அம்மா கேரக்டர் இருந்தது. சொந்தப் படம் என்பதால் குஷ்புவே நடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நடித்தவர் தேவயானி.

குஷ்பு நிஜத்தில் இரண்டு குழந்தைகளுக்கு அம்மா... தேவயானி இன்னும் 'அம்மா' ஆகவில்லை. ஆனால், சினிமாவில் அம்மாவாகிக் கொண்டிருக்கிறார். என்ன பொருத்தம் பாருங்கள்

## மேக்னா நாயுடு

'வீராசாமி'யின் அறிமுக நாயகிகள் இருவரில் மேக்னா நாயுடு ரொம்பவே இயல்பான டைப்பாகவும் தெரிகிறார். இவர் நடித்த 'ஹவாய்' இந்திப் படத்தின் டிரெய்லர் பார்த்தே டைரக்டர் விஜய டி.ராஜேந்தர் இவரைத் தேர்ந்தெடுத்தாராம். அப்போதே, "நீ மேக்னா நாயுடு அல்ல... மேக்னட் நாயுடு" என்றாராம் விஜய டி.ராஜேந்தர். சும்மாவா... ஆயிரம் பேருக்கு மேல் பார்த்துச் சலித்த வேளையில் இந்த 'மேக்னட்' இயக்குநரின் கண்ணில் பட்டிருக்கிறாரே!

"சினிமாவில் எந்த மாதிரியான இடத்தைப் பிடிக்க திட்டம்?" என்று மேக்னாநாயுடுவை கேட்டால்...

"மாடல் அழகிகளுக்கு இந்த பீல்டில் அதிகபட்சம் 5 வருஷம்தான் கொடிகட்டிப் பறக்க முடியும். நானும் இந்த பீரியட்டுக்குள் நடிப்பு, மியூசிக், விளம்பரம் என்று ஒரு ரவுண்டு வந்துவிடுகிறேனே..." என்கிறார். பொண்ணு பொழச்சிக்கும்.

## லஜ்ஜாவதி கவிஞர்!

இளைய கவிஞர்களில் 'பளீர்' பிரகாசம் கவிஞர் நா.முத்துக்குமார் மீது... 'லஜ்ஜாவதியே' பாடலை எழுதினாலும் எழுதினார்... "யாரந்த கவிஞர்" என்று கேட்கிற அளவுக்கு பிரபலமாகிவிட்டார்.

'7-ஜி ரெயின்போ காலனி' படப் பாடல்களும் 'ஹிட்' ஆனதில் ஷங்கரின் தயாரிப்பான 'காதல்' படத்துக்கு எல்லாப் பாடல்களும் எழுதுகிறார். இது தவிர, 'மன்மதன்', 'ஜி', 'போஸ்', 'எம்.குமரன்', 'சத்ரபதி' என ஒரு பட்டியலை அடுக்குகிறார்.

"உங்கள் வெற்றிக்கான இரகசியம் என்ன?" என்று கேட்டதற்கு "இளமை இனிமே புதுமை" என்கிறார்... அட! பதிலில் கூட கவிஞர் வெளிப்படுகிறாரே...

## கதையில் அசத்தி...

நடிகர் உதயா ஜோடியாக 'ஆசாமி' படத்தில் நடிக்கும் நேகா, ஏற்கெனவே தெலுங்கில் 'தில்' என்ற சூப்பர்ஹிட் படத்தில் நடித்தவர்.

டைரக்டர் சுரேஷ்வர்மா, ராம்கோபால்வர்மாவிடம் உதவியாளராக இருந்தவர். முதலில் தமிழ்ப் படத்தை இயக்கும் எண்ணம் இல்லாமல் இருந்தவரிடம், கதை சொல்லி அசத்தி ஒப்புக்கொள்ள வைத்திருக்கிறார்கள்.

கதை எழுதிய 'ஆசாமி'க்கு பெயர் பார்த்தன்.



இயக்குநர் பிரவின் காந்த்
சோனியா - குர்லின் சோப்ரா

## ஒரு வரிச் செய்திகள்

சதாவுக்கு 'அந்நியன்' படம் மட்டுமே கைவசம் உள்ளது.

'ஆனந்தம்' தெலுங்குப் பதிப்பில் வெங்கடேஷ் ஜோடியாக நடிக்கிறார் சினேகா.

பார்த்திபன் ஜோடியாக 'குடைக்குள் மழை' படத்தில் நடித்தவர் மதுமிதா. இவர் ஏற்கெனவே அர்ஜுனின் தங்கையாக 'அன்பு சகோதரன்' படத்தில் நடித்தவர்.

'என் காதலே' படத்தில் முதன்முதலாக அம்மா மகளாக நடிக்கிறார் கோவை சரளா.

'ஜீத்தன்' படத்தில் நடிகர் சரத்குமார் கௌரவ வேடத்தில் நடிக்கிறார்.

நடிகர் யுகேந்திரனுக்கு தொடர்ந்து தனது படங்களில் நடிக்க வாய்ப்புக் கொடுத்து விடுகிறார், விஜய்.

இயக்கத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கும் டைரக்டர் ராம.நாராயணன், விநியோகஸ்தராக மாறியிருக்கிறார்.

'அழகிய தீயே' வெற்றிப் படத்தை இயக்கிய ராதா பாரதி, அடுத்து நகைச் சுவைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படத்தை இயக்குகிறார்.

பி.ஸ்ருடியோஸ் என்ற பட நிறுவனத்தை கலைப்புலி தாணுவுடன் சேர்ந்து தொடங்கி உள்ளார் பாலா. சூர்யா, ஜோதிகா நடிக்க, ராம் சத்யா எனும் புனை பெயரில் 'ரெட்' படம் இயக்கிய சிங்கப்புலி, நிஜப் பெயருடன் மாயாவி என்ற பெயரில் இயக்கு கிறார். தமது பட நிறுவனம் மூலம் ஆண்டுக்கு இரு படங்களைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார். ஒவ்வொரு படத்திலும் புதுப் புது இயக்குநர்களை அறிமுகம் செய்யவிருக்கிறார்.

சிங்கிதம் சீனிவாச ராவ் இயக்க கமல் நடிக்கும் புதிய படத்திற்கு 'மும்பை எக்ஸ்பிரஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளது. ஹீரோயின் தபுவாக இருக்கலாம். படப்பிடிப்பு முழுக்க மும்பையிலேயே நடைபெற உள்ளது. காமெடி - ஆக்ஷன் கலந்த கமர்ஷியல் படம் இது.

'விருமாண்டி'யைத் தொடர்ந்து வாய்ப்புகள் இல்லாததால் நடிகை அபிராமி அமெரிக்காவில் செட்டிலாகத் திட்டமிட்டுள்ளார்.



மும்தாஜ்

## புதுமையின் உச்சம்!

மலேசியாவில் இன்றைய அதிசயம் பரத்வாஜ். அங்குள்ள பினாங்கு மாநிலத்தில் உள்ள பீசா கலையரங்கில் 74 வருட திரை இசையை நிறைவுபடுத்தும் விதத்தில் ஒரு மாபெரும் இசை விழா நடத்தி முடித்து வந்திருக்கிறார்.

5 இசையமைப்பாளர்கள், 25 பின்னணிப் பாடகர்கள், 75 இசைக் கலைஞர்கள் ஒரே மேடையில் தோன்றியதில் இசை மழையாகப் பொழிந்திருக்கிறது.

இதில் 1930 முதல் 2004 வரையிலான தமிழ்ப் படப் பாடல்களை அந் நாளைய மதுரை ஜி.எஸ்.மணி தொடங்கி இன்றைய மதுமிதா வரை அந்தந்தக் காலகட்டத்துக்கு ஏற்ப பாட வைத்ததைத்தான் புதுமையின் உச்சம் என்றார்கள்.

## நக்கல் நாயகன் சத்யராஜ் காட்டில் இப்போது பட மழை.

இப்போது 'மகா நடிகன்'. 'ஐயர் ஐ.பி.எஸ்.' என்று வரிசையாகப் படங்கள். 'மகா நடிகனில்' அரசியலுக்கு வர நினைக்கும் நடிகர்களை பிடி பிடியென வெளுத்து வாங்கியிருக்கிறாராம்.

படப்பிடிப்பில் பார்த்து வரலாம் எனப் புறப்பட்டோம். "அட என்ன இது? தலைவர் காமராஜ் கெட்டப்பில் கவர்ச்சி பாம்கள் ஜூனியர் சில்க், பாபிலோனா, அபிநயஸ்ரீயோடு குத்தாட்டம் போட்டுக்கொண்டிருக்கிறாரே" என்று கேட்க,



இயக்குநர் மங்கை அரிராஜன் பதறி, பின்பு பொறுமையாகக் காட்சியின் தன்மையை விளக்கினார்.

இதில் சத்யராஜுக்கு இரு வேடங்களாம். கெட்அப் புதிதாக வேண்டும் என்று இப்படி மாற்றியிருக்கிறார்கள்.

இப் படத்தின் ஒளிப்பதிவாளர். இயக்குநர் பாரதிராஜாவின் ஆஸ்தான ஒளிப்பதிவாளர் பி.கண்ணன்.

'4 ஸ்டுடண்ட்ஸ்' படத்தின் இசையமைப்பாளர் ஜாசிகிப்ட், 'அந்நியன்' படத்தில் ஒரு பாடல் பாடியிருக்கிறார்.

அரவாணிகள் பற்றி தான் எடுக்கும் புதிய படத்தில் குட்டி ஸ்வேதாவை முக்கிய கேரக்டரில் நடிக்க வைத்திருக்கிறார், சந்தோஷ்சிவன்.

'பீஷ்மரை'த் தொடர்ந்து 'காசிமேடு கோவிந்தன்' படத்தில் ரவுடியாக நடித்துக்கொண்டிருக்கிறார், ரஞ்சித்.

நடிகை அபிராமிக்கு தெலுங்கில் விக்ரமன் இயக்கி வரும் படம் ஒன்றுதான் கைவசம் உள்ளது.

தெலுங்கில் மகேஷ்பாபுவை வைத்து ஒரு படம் இயக்குகிறார் லிங்குசாமி.

நடிகை ஜோதிகா பெங்களூர் அருகேயுள்ள ஒரு ஆச்சிரமத்துக்கு அடிக்கடி சென்று வருகிறார். தியானம் செய்யத்தான்.

'7ஜி ரெயின்போ காலனி' படத்தின் எல்லாப் பாடல்களையும் கவிஞர் நா.முத்துக் குமாரே எழுதியுள்ளார்.

கார்த்திக்கை வைத்து ஒரு படத்தை இயக்க கதை சொல்லி வருகிறார் 'வர்ணஜாலம்' பட இயக்குநர் நகுலன் பொன்னுச்சாமி.

தன் இரசிகர் மன்றத்தினரை அழைத்துப் பேசி, "இனிமே பட்டையை கிளப்புங்க..." என்று உற்சாகப்படுத்தியுள்ளார் பிரபு.

சென்னையிலேயே தங்கிவிட வீடு தேடிக்கொண்டிருக்கிறார் 'குத்து' ரம்யா.

உடல் இளைக்க மூலிகை மருந்து சாப்பிட்டிருக்கிறார் தேஜாஸ்ரீ. அது ஹெவி டோஸ் ஆகி நரம்பும் தோலுமாகக் காட்சி அளிக்கிறார்.

ஒரு படத்தில் கூட நடிக்கவில்லை மும்தாஜ். ஆனால், தினமும் போட்டோ செஷன் என்று செம பிஸியாக அலைந்து திரிகிறார்.

இலங்கை அகதிகள் குறித்து தான் இயக்கும் 'தாய்மண்' படத்தில் அசல் இலங்கை அகதிப் பெண்ணைக் கதாநாயகியாக நடிக்க வைக்கப் போகிறார் தங்கர் பச்சான்.

வாரத்தில் ஒரு நாள் மூலிகைக் குளியல் நடத்துகிறார் சினேகா.



திருடாதே இதயத்தை
ரோகன் - சுபா

கூச்

நடிகை மும்தாஜுக்குப் போட்டியாகக் களமிறக்கப்பட்டவர் நடிகை குமதாஜ். 'இரவுப் பாடகன்' எனும் படத்தில் அறிமுகமான இவர், இப்போது ஒரு பாடலுக்கு நடனமாடி இரசிகர்களுக்குக் கலைச் சேவை செய்துகொண்டிருக்கின்றார்.

சமீபத்தில் ஒரு படப்பிடிப்பிற்குச் சென்றுவிட்டு ரயிலில் வந்துகொண்டிருந்தவரிடம் ஒரு நபர் வந்து, "எந்த ஷூட்டிங் போயிட்டு வந்துகிட்டிருக்கீங்க" என்று கேட்க,

இவர் பதிலாக "ராஸ்க்கல்" என்று கூற, கேட்டவர் டென்ஷனாகி "ஏங்க, படம் பேரு கேட்டா திட்டறீங்க" என்க.

"இல்லைங்க. படம் பேரே அதான்" என்று கூறி இருக்கிறார்.

"அடப் பாவிகளா போற போக்கிலே இன்னும் என்ன என்ன கன்றாவித் தலைப்பெல்லாம் வைப்பாங்களோ தெரியலயே" என்று புலம்பிவிட்டுப் போய்விட்டார் அந்த நபர்.

இப்போது 'ராஸ்கல்' படத் தலைப்பை மாற்றப் போகிறார்கள் என்பது உபரித் தகவல்.

தனியானது "சர்க்கர கசக்குற சர்க்கர" எனப் பாட்டையே மாத்திப் பாடுகிறார் நமீதா.

'மகாநடிகன்' படப்பிடிப்புத் தளத்தில் மயங்கி விழுந்த அவரை அள்ளிக்கொண்டு மருத்துவமனைக்குப் போனார்கள். காதலன் பரத்கபூரின் கைங்கரியமாக இருக்குமோ? என்று கற்பனைக் குதிரைகளை ஓடவிட்டனர்.

கடைசியில் டாக்டர் சொன்ன இனிப்பான சேதி என்ன தெரியுமா?

நமீதாவுக்கு சர்க்கரைச் சத்து உடம்பில் கூடிவிட்டது! இப்ப சொல்லுங்க...... நமீதாவுக்குச் சர்க்கரை இனிக்குமா? கசக்குமா?

## பின்னணியில் ஒரு விஷயம்!

செல்வராகவன் இயக்கத்தில் 'ஒரு நாள் ஒரு கனவு' படத்தில் நடிப்பதற்காக வெளிநாடு செல்லவிருந்த தனுஷ், பாலுமகேந்திராவின் 'அது ஒரு கனாக்காலம்' படத்துக்கு அந்தத் தேதிகளைக் கொடுத்திருக்கிறார்.

மாறிப்போன 'கனவு'க்குப் பின்னணியில் பாலுமகேந்திரா இருக்கிறார் என்கிறது கோலிவுட் வட்டாரம்.



அய்யர் ஐ.பி.எஸ்.
ஜூனியர் சில்க் - பாபிலோனா - அபிநயஸ்ரீ - சத்யராஜ்

சிவாஜி பிலிம்ஸ் தயாரிக்கும் 'சந்திர முகி'யில் ரஜினிக்கு ஜோடி சிம்ரன் என்று முடிவாகி உள்ளது. இன்னொரு கதாநாயகியாக சிநேகா நடிக்கலாம்.

### எப்படி இருந்த நான்......

நடிக்க வருவதற்கு முன் இவர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள் தெரியுமா?


இதோ ஒரு பட்டியல்.

ரஜினிகாந்த் - பஸ் கண்டக்டர், கமல்ஹாசன் - அரிசி மில், சிவகுமார் - ஓவியர், சத்யராஜ் - வட்டிக்கடை, விக்ரம் - ரைப்பிங், ரியூசன் சென்ரர் மாஸ்டர், சரத்குமார் - பத்திரிகை அலுவலகத்தில் விநியோகப் பணி, முரளி - தந்தையிடம் உதவி இயக்குநர், மம்முட்டி - வக்கீல், ஜெயராம் - மிமிக்ரி கலைஞர், நாசர் - பள்ளி ஆசிரியர், ஷாம் - மாடலிங், கலாபவன்மணி - ஆட்டோ டிரைவர்

மாதவன் - மாடலிங் - டியூசன் மாஸ்டர், பாண்டியன் - வளையல் கடை, ராமராஜன் - தியேட்டர் ஊழியர், மணிவண்ணன் - விவசாயம், செந்தில் - மளிகைக்கடை, டெல்லி - இராணுவ வீரர்

பிரபுதேவா - நடன துணை இயக்குநர், சாருஹாசன் - வக்கீல், வையாபுரி - ஹோட்டல் சப்ளையர், விக்னேஷ் - துணி வியாபாரம், விவேக் - செக்ரிட்டேரியட்டில்(கோட்டை) வேலை, வடிவேல் - கண்ணாடிக் கடை.

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி ஜெ. தனுசியா / 06.10.2004

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்து பேர்மிங்காமை வதிவிடமாகவும் கொண்ட ஜெயபாலன் ரேவதி தம்பதிகளின் செல்வப் புதல்வி தனுசியா தனது முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் 06.10.2004 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார். குழந்தை தனுசியாவை அன்பு அம்மா - அப்பா, அக்கா அனுசியா, லண்டன் சின்னப் பெரியப்பா - பெரியம்மா, அண்ணா காவியன், அக்காமார்களான இலக்கியா, அகல்யா, தங்கை கவிநயா, காரைநகர் அம்மப்பா - அம்மம்மா, இளவாலை பெரியப்பா - பெரியம்மா, பபி அக்கா, கரன் அண்ணா, வன்னி சின்னப் பெரியப்பா, வன்னி மாமா, அத்தை, வீது மச்சாள், கோபி மச்சான், அபி மச்சாள், சுவிஸ் பெரியப்பா - பெரியம்மா, தர்ஷன் அண்ணா, சுவிஸ் மாமா - மாமி, வவுனியா சின்ன மாமா, குட்டி மாமா மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சுழிபுரம் பறாளாய் விநாயகர் அருள் பெற்று கல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல் :- திரு.திருமதி.ஜெயபாலன், பேர்மிங்காம், U.K.

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து

மானிப்பாய் (சுதுமலை) சுகுமாரன் - அக்கரைப்பற்று கீதா தம்பதிகளின் செல்வப் புதல்வி ஆர்த்தி தனது முதலாவது பிறந்த நாளை 15.10.2004 அன்று சுவிஸ் சூரிச் நகரிலுள்ள தனதில்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா - அம்மா, இலங்கையில் உள்ள அம்மம்மா, அன்ரிமார், சித்தப்பாமார், ஆசை மாமா, அக்காமார், அண்ணாமார், தம்பி, லண்டனில் வசிக்கும் பாட்டி, தாத்தா, மாமா, மாமி, பெரியப்பாமார், பெரியம்மாமார், மச்சாள்மார், மச்சான்மார், அக்காமார், ஜேர்மனில் வசிக்கும் சின்ன மாமி, மாமா, மச்சான், மச்சாள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் இறைவன் அருள் பெற்று பல்லாண்டு காலம் நிறைவோடும் மகிழ்வோடும் வாழ வாழ்த்துகின்றார்கள்.



செல்வி சு. ஆர்த்தி / 15.10.2004




## பேசாத ஆசை!

மதி முகமும்
கொடியிடையும்
நீண்ட கூந்தலும்
சிவந்த புருவமும்
தேன் சிந்தும்
சிரிப்புங் கொண்ட
பிரமன் சிரமப்பட்டு
வரைந்த ஓவியமொன்று
பல ஆண்களின்
பெருமூச்சுக்கு மத்தியில்
நானிருந்த
பேருந்து இருக்கையில்
பார்த்தேன்; பார்வையானாள்.
சிரித்தேன்; சிரிப்பானாள்.
தூக்கமும் நினைவும்
தொலைந்தது தூரத்தே.
பாதை நீண்டு
பயணம் தூரமே
வேண்டுமென்றது இதயம் - என்
கற்பனையில்
காதலர்கள்தான் இருவரும்
அவளின் அழகிய புன்னகை
அடிக்கடி என்னை
'கதைங்களேன்' என்பதைப்போல்
கன்னந் தீண்டியது - நானும்
எத்தனை தடவை
எத்தனித்தேன் கதைப்பதற்கு
வார்த்தைகள் தொலைந்து
வாய் ஊமையானது
பயணம் முடியும் வரை
பாஷைகள் மட்டும்
பரிமாறவில்லை.
ஏனென்றால் - அவளோ
தமிழ்ப் புரியாச்
சிங்களத் தோழி!!

*-க.சிவானந்தம், வெருகல்.*

## எப்படிச் சொல்வேன்?

ஓர் நடு இரவில்...
திடுக்கிட்டு துயில் கலைந்தேன்...
சிலு சிலுவென இரவுக் காற்று - என்
மேனியெங்கும் புகுந்து கொண்டது.....
இந்த இலவசக் காற்று எங்கிருந்து....
உற்றுப் பார்த்தேன் திண்ணைக் கதவு
திறந்து காணப்பட்டது!
வெளியே என் அன்னை.....
என்னை உறங்க வைத்துவிட்டு
அவள்...
உறங்காமல் தவித்து நின்றாள்!
மதுவுக்கு அடிமையான - என்
தந்தையை எண்ணி...!!

அந்த ராத்திரி....
நிலாவின் வெளிச்சத்தில் - என்
வீட்டுப் பூந்தோட்டம் கூட அசந்து...
துயில் கொள்ளக் கண்டேன்!
சந்தோசம் கொண்டாலும்.....
உயிரானவள் உறங்கவில்லையே....
மகிழ்ச்சிக்குள் வேதனை....!!

எத்தனை ராத்திரிகள்....
இப்படித் தூங்காமல் தவித்தாளோ...?
என் - அன்னை!
எனக்குள் மௌனக் கண்ணீர்...!!

ரணப்பட்ட என் அன்னைக்கு.....
எப்படி ஆறுதல் சொல்வேன்?
தெரியவில்லையே! புரியவில்லையே?
வார்த்தைகளே வழி சொல்லுங்கள்!!

*-ஜே.பீரோஸ்கான், கிண்ணியா.*

## என் உயிரின் உயிருக்கு.....

செல்லமே!
உன் எழிலை
எனக்குள்ளே
எண்ணி - நானும்
மட்டில்லா
மகிழ்வடைவேன்.
பெண்ணே நீயும்
அறியமாட்டாய்!

குண்டு விழிக் கண் உனக்கு
கருமேகக் கூந்தல்தானே
வண்டு வந்து அமர்ந்திடும்
உந்தன் வதனம் தன்னை
மலரென்றெண்ணி!

முற்றத்திலே
நாமமர்ந்து
பௌர்ணமியை ரசிக்கும்போது......
உந்தன்
மடிதனிலே - நான்
கண்ணயர்ந்து
துயில்வதெப்போ?

ஏச்சுப் பேச்சு,
அடி தடி - இவை
எல்லாக் காதலுக்கும்
முட்டுக்கட்டைதான்!

தோற்றுத்தான் போனாலும்
துன்பம்தான் நேர்ந்தாலும்
மாற்றான் உன்னைக்
கைப்பிடித்தால்
மரணம்தான் என்னைச் சேரும்.

*-காவத்தமுனை ஜாபீர் எச்.எம்., கொழும்பு.*




## புழுதி

மாலை நேரத்திலே
மந்திகைச் சந்தியிலே
என் மங்கையவள் வருவாள்
என
வெகுநேரம் காத்திருந்தேன்.
சி.ரி.பி. பஸ் எல்லாம் சீராக
ஓடியது
பெண்ணவளின் வருகை
மட்டும்
தாமதமாய் அமைந்தமையால்
நானும் சதாவதானி சிலை
போல
தெருவோரம் புழுதியிலே
தவம் கிடக்கும் நிலையாச்சு.
பூக்கள் கொண்டு பூசிக்கும்
புலவர்களைப் புழுதியிலே
விட்டதைப் போல் -
புன்னகையால்
பூசிக்கும் என்னவளும்
என்னைப்
புழுதியிலே விட்டுவிட்டாள்.

*-ஸ்ரீ, ஆழியூர்.*

## பயோடேற்றா



உன் நாமம்
என் கவிதை
உன் முகவரி
என் இதயம்
உன் வெட்கம்
என் சொர்க்கம்
உன் வார்த்தை
என் நாதம்
உன் காதல்
என் வேதம்
உன் உறக்கம்
என் ஓய்வு
உன் கனவு
என் இலட்சியம்
உன் புன்னகை
என் சந்தோசம்
உன் கண்ணீர்
என் மரணம்

*-ஜனாமத், எருக்கலம்பிட்டி.*



## பகடைக் காயாக காதல்

புன்னகைகள்
உதிர மறுக்கின்றன
என்னுள்!

வற்றிய குளங்களாக
கண்ணீரற்ற என்
கண்கள்!

இரக்கப்படாத
இரவுகளின் ஆக்கிரமிப்பு
எனக்கு!

நித்திரையின்றிய
நீண்ட பகல்களில்
நான்!

நெருங்கப் பயப்படும்
நிம்மதிகள்
என்னில்!

ஆசைகள்
உக்காத பொலித்தீனாய்
அடிமனதில்!

இவை எதனால்....?

காதலின்
பகடைக்காயாக என்
வாழ்வு
வழிமாறியதால்.....!

*-கா.சுபாஷ், டிக்கோயா.*

## அரசியல்வாதிகள் — வாக்குச் சீட்டு — பாராளுமன்றம்

**அரசியல்வாதிகள்**

அரசியல் நீரோடையில்
ஆழம் பார்த்து
நீந்தத் தெரிவதால்
பதவிக் கதிரைகளை
எப்போதும்
எட்டிப் பிடித்திடுவார்கள்.

**வாக்குச் சீட்டு**

போடுவதற்கு முன்
புதுப்புது
அர்த்தங்களைக் காட்டும்
போட்ட பின்
ஒரே அர்த்தத்தைக்
காட்டும்.

**பாராளுமன்றம்**

மக்கள் நிர்மாணித்த
மக்கள் வண்டியில்
அவ்வப்போது
சிலர் ஏறுவார்கள்
சிலர் இறங்குவார்கள்.

*நா.ஜெயபாலன், பிபிலை.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

*சமீபத்திய புதுக் குரல்களில் தனித்துவம் மிக்கதாகவும், அர்த்தம் கூடியதாகவும், இசைவு கூடிய மொழிப் பிரயோகத்துடனும் வெளிப்படும் குரல் யூமா -வாசுகியுடையது.*

*மன ஆவேசத்தின் உச்சத்திற்கும் அதன் எதிர் விளைவான நெகிழ்விற்கும் இடையில் விரிவது யூமாவின் கவியுலகு.*

*ஒரு கவிதையிலிருந்து நாம் உருவாக்கிக்கொள்ளும் அநுபவம் என்பது பெரிதும் அந்தரங்கமானது. வாசகனின் கற்பனைச் சாத்தியத்தைப் பொறுத்து விரிவடையக் கூடியது. கவிஞனின் நோக்கத்தை விடவும், விமர்சகனின் விளக்கத்தை விடவும், வாசகன் தனது சொந்த வாசிப்பு அநுபவத்திலிருந்து சுயமாக அடையும் அர்த்தமே முக்கியமானது.*

*பாறையின் நடுவே முளைத்தெழும் ஒரு செடியைப் போல, தன்னை அழுத்தித் தாழ்த்த முயலும் உலகியல் நிர்ப்பந்தங்களிலிருந்து யூமா - வாசுகி உருவாக்கும் கவிதைகளும் நமக்குத் தனித்தனியான அந்தரங்க அநுபவத்தைத் தருபவைாகின்றன.*

### இன்று

தம்போக்கில் வீசுகிற காற்று
காற்று வழி அலைகிற மேகம்
பூத்ததை முன்வைத்து
கோரிக்கை விடுக்காத மலர்கள்
கோஷங்கள் எழுப்பாதிருக்கின்ற
மரங்கள்
தோஷம் தீண்டாத இயல்போடு
நாளையும் இருக்குமாவென்பதில்
என் சந்தேகம்
கூண்டுகளைத் திறந்துவிட
தருணமிதுதான்
பறவைகள் விடுபடட்டும்
பறந்து - பிடித்த மரத்தில் அமர்ந்து
மகிழ்ந்து இரை தேடி
தேர்ந்தெடுத்த நீர்நிலைகளில்
தோன்றும்போது பாடிக்கொண்டிருந்து
மரணத்தை உணராமல்
நொடிப்பொழுதில் மரிக்கட்டும்.



### சரண்

பழைய சவால்கள் எதிர்ப்படும்போது
மாற்றுப் பாதை தேடவேண்டியிருக்கிறது
நினைவிலிருந்து வெளியேறிய
வாக்குறுதிகள் என்றாவது
கைதட்டி அழைக்கும்போது -
செவிடெனத்
திரும்பாமல் செல்ல வேண்டியிருக்கிறது
போஷிக்கப்பட்டவைகளெல்லாம்
பிடுங்கியெறிந்து
புழுதியிற் கிடந்தவைகளை
பீடமேற்றியிருக்கிறேன்
நேற்றிரவு
நான் துவேஷித்த மனிதனின்
தரிசனத்திற்காகக்
காத்துக் கிடக்கிறது இன்றைய பகல்
வாளின் கூரைப் பரிசோதிப்பது
நண்பனின் கழுத்திற்காக
வேண்டியதை வேண்டாமலும்
வேண்டாததை வேண்டியும்
தாயத்தில் விழும் எண்கள்
சொன்னதும் செய்ததும்
இதை அறிவிப்பதும்
நானல்ல!

* * *

என் முதல் வார்த்தை முடிவதற்குள்
அதன் அவசியமின்மையை
உணர்த்திவிடுகிறீர்கள்
என் செயல்களிலிருந்து
உங்களுக்கேதுவான அர்த்தம் உரிப்பது
இலகுவிற் கூடிற்று உங்களுக்கு
உங்கள் பாவனை
எனக்குப் புரிவது போல
என்னுடையதும் ஆகுமென்ற
காத்திருப்பை நிராகரிப்பதில்
இறுதிவரை உங்களுக்கு வெற்றி
உங்கள்
உபாயங்களுக்குள் செலுத்தப்பட்டு
என் திசையழிந்து போயிற்று
என்னை ஒப்புக்கொடுக்கும் முன்பு
இதைச் சொல்ல அனுமதியுங்கள்
உங்களையும் நான்
நேசிக்கிறேன்.

### ஊர்நடைத்தல்

நள்ளிரவில் விளக்கணைய
ஆடுகளமாகுமென் படுக்கை
ஜதை ஜதையாய்க் காலடிகள்
போதைச் சித்தத்தில் நடக்கும் ஒலி
நடையின் லயம் கலையும்
பொருந்தாச் சேர்க்கையில்
மோதும் எதிர் நின்று
மோதிப் பிரிந்த இடைவெளி
தெளிவதற்கு - பின்னும்
முடிவுக்குப் போல வரும் வாக்கியத்திலிருந்து
கலைந்து பிறக்கும் காலடிகள்
பாதங்களின் வன்மை இறங்கும்
மிருதுவில் - முட்கரடுகளில்
அடித்தோல் கிழியும்
இரத்தம் பரஸ்பரம்
பக்கங்கள் சுருண்ட அலை உடைந்து
எழுத்துக்கள் பதுங்குமொரு
துப்பாக்கிச் சூழலில்
விடிகிறது - நாளையிரவு
விசையழுத்தி
ஓசைகளைக் கொட்ட வரும்
விரல் முடங்க - அறைக்குள்
நுழையாதிருக்க வேண்டும் புத்தகங்கள்.

* * *

கழுத்துக் காயத்தின் ஈக்களகற்றும்
நுகத்தடி அசைவில் வழிந்த உதிரம்
சூரியத் தணலை எதிரொளித்தது.
ஏறும் சுமையில்
நிலைப்பதற்குக் கால்களலைய
கண்ணீர்த் துளிகள்
சுடுமணலில் மறைந்தன
பாரம் நிறைந்ததும் வானம் பார்த்து
கட்டளை கேட்டதும் நடக்க நினைத்து
வலுவற்று வீழ்ந்தது
எல்லாம் முடிந்தது போல்.
கயிற்றடிக்கும்
கெட்ட வசவுக்குமெதிராய்
செய்வதறியாது பெருமூச்சுடன்
தரைச் சூட்டில் உடல் துடிக்க
கலங்கிப் பார்த்து பாதையில் கிடந்தது
இப்போதைக்கு இலகுவான என்னை
இழுத்துக் கொண்டு கடந்து போனேன்.

## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : ந. வினோஜன்
வயது : 18
முகவரி : யூனியன் வீதி, முனைத்தீவு, பெரியபோரதீவு, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனா நட்பு.



பெயர் : ஏ.சி.எம். ஜலீல்
வயது : 34
முகவரி : 24/A, நகர மண்டப வீதி, கல்முனை–07.
பொழுதுபோக்கு : பேனா நட்பு, பத்திரிகை, ரி.வி.



பெயர் : கோ. சாந்தரூபி.
வயது : 25
முகவரி : இல. 30, சவேரியார்புரம், தாழங்குடா–03, ஆரையம்பதி.
பொழுதுபோக்கு : தொலைக் காட்சி, வானொலி.



பெயர் : ம. கோகிலன்
வயது :19
முகவரி : 2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
பொழுதுபோக்கு : வானொலி, பத்திரிகை.





# நீண்ட ஆயுளுக்கு துளசி

துளசி இலையும் விதையும் மருந்தாகப் பயன்படுகின்றன. அந்தச் செடியின் கட்டையில் மணிகள் செய்து மாலையாக விஷ்ணு பக்தர்கள் அணிகிறார்கள்.

துளசியில் இளம்பச்சை நிறமுடைய துளசியும் கருந்துளசியும்தான் எங்கும் கிடைக்கக் கூடியது. இரண்டுக்கும் குணத்தில் அதிக அளவு வித்தியாசம் இல்லை. இருந்தாலும் கிருஷ்ண துளசி என்று அழைக்கப்படும் கருந்துளசியில் காரத்தன்மை அதிகமானதாக உள்ளது.

துளசிச் செடி முளைத்திருக்கும் இடத்தில் பாம்பு, தேள், கொசுக்கள் போன்ற விஷ ஜந்துகள் நெருங்குவதில்லை. இதனால்தான் பெரும்பான்மையான மக்கள் வீட்டில் துளசியைக் கண்டிப்பாக வளர்த்து வருகிறார்கள். இதனால் துளசிச் செடியிலிருந்து மணத்தோடு கூடிய காற்றை சுவாசிக்கின்ற வாய்ப்பும் அதன் மூலம் நுரையீரலுக்கு எதிர்ப்புச் சக்தியுள்ள காற்றும்



கிடைக்கின்றது.

தினமும் காலையில் ஒன்றிரண்டு துளசி இலைகளை வெறும் வயிற்றில் மென்று விழுங்கி வருபவர்களுக்குச் சரீரத்தில் சேரும் விஷப்பொருட்கள் நீங்கும் வாய்ப்பு உள்ளது.

தேள் கொட்டினால் அது கொட்டியவுடன் ஒரு பிடி துளசி இலையை நன்றாகக் கழுவியெடுத்து நன்றாக மென்றுதின்றுவிட்டு நீர் அருந்தவும். மேலும் தேள் கொட்டிய இடத்தில் சிறிது துளசி இலையை அரைத்து அந்த இடத்தில் தேய்க்கலாம். உடனே வலி குறைந்து நிவாரணமும் கிடைக்கும்.

பாம்பு கடித்த விஷத்தை முறிக்கும் குணமும் துளசி இலைக்கு உண்டு. தேள்கடிக்கு உபயோகித்த அளவை விட கொஞ்சம் அதிகமான அளவு துளசி இலையை மென்று சாப்பிட வேண்டும். அல்லது தண்ணீர்விட்டு நன்றாகக் கட்டியாக துளசி இலையை அரைத்து உருண்டையாக உண்ண வேண்டும். பின்பு நன்றாக ஓய்வெடுக்க வேண்டும். மேலும், பாம்பு கடிபட்டவர் மயக்க நிலையில் இருந்தால் தலையில் ஒரு இடத்தில் இரத்தம் கசியும்படி கீறிவிட்டு துளசி இலையை அரைத்துக் கட்டி சிறிது துளசிச் சாற்றை மூக்கிலும், வாயிலும் பிழிந்துவிட்டால் விஷமுறிவு ஏற்பட்டு நல்ல பயன் கிடைக்கும்.

துளசி இலைகளை எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்துப் படர்தாமரைப் புண்களுக்குப் போட்டுவரக் குணமாகும்.

இலைகளை நல்ல நீரில் ஊறப்போட்டுவிட்டு ஆறு மணி நேரம் கழித்து எடுத்துக் குடித்து வந்தால் கல்லீரல் நோய்கள் அணுகுவதில்லை. குறைந்தபட்சம் ஆறு வாரங்கள் துளசித் தீர்த்தம் சாப்பிட்டு வந்தால் தேகம் நல்ல நிறம் பெற்று பளபளவென்றாகிவிடும். அத்துடன் ஆயுளையும் நீடிக்கச் செய்யும் தன்மையும் அதற்கு உண்டு.

துளசித் தீர்த்தம் மூளைக்குத் திண்மையையும் சுறுசுறுப்பையும் கொடுக்கக்கூடியது.

சிலருக்கு ஜலதோஷம் பிடித்து மூக்கில் சளி வடிந்துகொண்டே இருக்கும். அதற்காகக் கவலைகொள்ளாமல் பத்து துளசி இலைகளைக் எடுத்து அத்துடன் சிறு இஞ்சித் துண்டையும் சேர்த்து நன்றாக மென்று விழுங்கி உடன் காய்ச்சிய நல்ல குடிநீரை தொடர்ந்து மூன்று நாட்கள் வெறும் வயிற்றில் காலையிலும் மாலையிலும் சாப்பிட்டு வர நல்ல குணம் கிடைக்கும்.

### துளசி காபி

கோப்பி போடும்போது கோப்பித் தூளுக்குப் பதிலாக துளசி இலையைத் தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து வடிகட்டி, பாலும் சர்க்கரையும் சேர்த்துச் சாப்பிட்டால் துளசிக் கோப்பி மணமாகக் கிடைக்கும். இந்தக் கோப்பி, இரத்தத்தைச் சுத்திகரிப்பதுடன் உடலுக்குத் தெம்பையும் வழங்கும்.

பெண்களின் தலையில் பேன் தொல்லை வரும்போது தலையணையின் மீது நல்ல துளசி இலைகளில் சிலவற்றைப் பறித்துப் போட்டு, அதன் மீது மெல்லிய துணி போட்டு அந்தத் தலையணையின் மீது மூன்று நாட்கள் தலைவைத்துப் படுத்துவந்தால் பேன்கள் தானாகவே மடிந்துவிடும்.

### இருதய நோய்

இருதய வலி உள்ளவர்களுக்கு அருமருந்தாகத் துளசி அமைந்துள்ளது என்று சித்தர்களால் வழிகாட்டப்பட்டுள்ளது.

இருதய வலியால் துன்பப்படக்கூடியவர்கள் ஒரு பிடி துளசி இலையுடன் இரண்டு செம்பருத்திப் பூக்களைப் பிய்த்து ஒரு சட்டியில் போட்டு மிதமான சூட்டில் வதக்கி எடுத்து பின்பு ஒரு லீற்றர் தண்ணீர் ஊற்றி வதக்கி துளசி இலையையும், செம்பருத்திப் பூவையையும் போட்டு அரை லீற்றர் தண்ணீராகக் காய்ச்சி இறக்கி வடிகட்டி எடுத்துக்கொண்டு ஒருமுறைக்கு 100 மி.லீ. வீதம் ஒரு நாளைக்கு ஐந்து தடவை சாப்பிடலாம். இவ்விதம் தொடர்ந்து 15 நாட்கள் சாப்பிட இருதய வலி இருந்த இடம் தெரியாமல் சென்றுவிடும்.

# குளிர்கால அழகுக்கு.....!

பனி காலம் தொடங்கிவிட்டது. உதடுகள் வெடித்துவிடும். முகம் வறண்டு போய்விடும். கை, கால்களில் ஒரு வித வெடிப்புக் காணப்படும். பனி காலத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இந்தத் தொல்லை ஏற்படுகிறது.

தோலுக்குத் தேவையான தண்ணீர்த் தன்மையைத் தருவதில், எண்ணெய்த் தன்மையை உருவாக்குவதிலும் ஈடுபடுவது சில சுரப்பிகள். குளிர் காலத்தில் அதன் செயற்பாடு மந்தமாவதால்தான் வறட்சி ஏற்படுகிறது. குளிர் காற்றுத் தோலில் படுவதாலும் பாதிப்பு உருவாகிறது.

இந்தத் தொல்லையைப் போக்க எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். நல்லெண்ணெய், பதினைந்து நிமிடம் உடம்பைப் பிடித்துவிட வேண்டும். பின்பு இளம் சூடான எண்ணெயைத் தலையில் அழுத்தித் தேய்த்துக் குளிக்க வேண்டும்.

குளிர் காலத்தில் சோப்பு பயன்படுத்தாதீர்.




அது தோலை வறண்டு போக வைத்துவிடும். சிறுபறை அரைத்து, அதனுடன் கடலை மாவைச் சேர்த்துத் தேய்த்துக் குளிக்க வேண்டும். சோப்புப் போட்டு தான் குளிக்க வேண்டும் என்றால், கிளிசரின் சோப்பு மட்டும் பயன்படுத்த வேண்டும்.

குளிர் காலத்தில் வாரத்தில் இரண்டு நாளாவது எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும்.

இரவு தூங்கப் போவதற்கு முன்னால் உதட்டில் பாலாடையையோ அல்லது வெண்ணெயையோ பூச வேண்டும். பின்பு கிளிசரினும் பன்னீரும் சேர்த்த வெந்நீரில் பஞ்சை முக்கி எடுத்து, குளிர்ந்த நீரில் பஞ்சை முக்கி பிழிந்து மாறி மாறி அதனை உதட்டில் வைத்து அமிழ்த்த வேண்டும். இதன் மூலம் உதடு வெடிப்பு போய்விடும்.

# கைக்குழந்தையை குளிப்பாட்டுவது எப்படி?

குழந்தைகளைப் பெறும் இளம் பெண்களில் பலருக்கு குழந்தை வளர்ப்பு முறை தெரியவில்லை. அதிலும்



குழந்தைகளைக் குளிப்பாட்டுவது என்றால் பயந்து போய்விடுகிறார்கள். முன்பெல்லாம் கூட்டுக் குடும்பத்தில் வாழ்ந்ததால், இளம் பெண்களுக்கு மாமியாரோ, தாயோ குழந்தைகளைக் குளிப்பாட்டும் முறையைக் கற்றுக்கொடுத்தார்கள். இப்போது நிறையப் பேர் தனிக்குடித்தனம் நடத்தி வருவதால், ஒவ்வொன்றையும் சுயமாக அவர்களே தெரிந்து செய்ய வேண்டியதாக இருக்கிறது.

குழந்தைகளைக் குளிப்பாட்டும் முறை இங்கே விரிவாகத் தரப்படுகிறது.

முதலாவதாக குழந்தையைக் குளிப்பாட்டும்போது பயம் தோன்றத்தான் செய்யும். ஒரு சில முறை குளிப்பாட்டிவிட்டால் அந்தப் பயம் இல்லாமல் போய்விடும்.

குழந்தைக்குப் பொருத்தமான சோப், சுத்தமான இரண்டு டவல்கள், எண்ணெய் (தேவைப்பட்டால் கடலை மா) ஆகியவைகளை எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

இளம் சுடுநீரிலே குழந்தையைக் குளிப்பாட்ட வேண்டும்.

குழந்தையை மார்போடு சேர்த்துப் பிடித்து, சிரிப்புக் காட்டிக்கொண்டே குளிக்கக் கொண்டு செல்ல வேண்டும்.

குழந்தை பயப்படும் விதத்தில் அதனைக் குளிப்பாட்டக் கூடாது.

குழந்தையின் உடலில் எண்ணெயைத் தேய்த்து பாயில் கிடத்தி வைப்பது நல்லது. கண், மூக்கில் எண்ணெய் செல்லாத அளவுக்குத் தேய்ப்பது சிறந்தது.

எவ்வளவு குளிர் காலமாக இருந்தாலும் நீர் அதிகம் சுடக் கூடாது. எப்போதும் இளம் சுடுநீரையே பயன்படுத்த வேண்டும்.

தலையில் தண்ணீர் விடும்போது, முகத்தில் தண்ணீர் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். குளிக்கும்போது, குழந்தை தண்ணீரைக் குடித்துவிடவும் கூடாது.

'பேபி டப்' அல்லது பிளாஸ்டிக் பேஷன் போன்றவைகளில் தலையை உயர்த்திப் பிடித்துக்கொண்டு குளிப்பாட்டலாம்.

தலையில் அதிகம் தண்ணீர் விடக் கூடாது. உடலில் உள்ள எண்ணெயை நன்றாக கழுவிய பின்பே தலையைத் சுத்தப்படுத்த தொடங்க வேண்டும்.

குழந்தைகள் குளித்தவுடன் தூக்கத்திற்கு ரெடியாகிவிடும். அதனால் குழந்தை தூங்குவதற்கான வசதியையும் குளிப்பாட்டும் முன்பே செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

குளிப்பாட்டி முடிந்ததும் ஒரு டவலில் குழந்தையைக் கிடத்தி இன்னொரு டவல் மூலம் குழந்தையின் தலையையும் உடலையும் துடைக்க வேண்டும்.

மூக்கு, கண், காது போன்ற இடங்களில் பஞ்சைப் பயன்படுத்தித் துடைப்பது நல்லது. தண்ணீரைத் துடைத்ததும் உடல் முழுக்கப் பவுடர் போட்டுத் தேய்க்கவும். முகத்தில் அதிகம் பவுடர் போடாதீர்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது -ஷோபா-*

## ஸ்சுவீஸ்ட் குக்கீஸ்

10 – 12 துண்டுகள்

**தேவையான பொருட்கள் :-**

| | |
|---|---|
| மா | - 1 கப் |
| சீனி | - 1 1/2 கப் |
| மாஜரீன் | - 1/3 கப் |
| தேசிச் சாறு | - 1 மே.க. |
| தேசித் தோல் துருவல் | - 1 தே.க. (மட்டமாக) |
| அடித்த முட்டை | - 2 மே.க. |

***செய்முறை :-***

மாவை 5 முறை அரித்துக்கொள்க.

மாஜரீனையும் சீனியையும் சேர்த்து, சீனி கரையும் வரை நன்றாக அடித்து, அதனுள் தேசித் துருவல், தேசிச் சாறு என்பவற்றையும் சேர்த்து, முட்டையையும் விட்டு அடிக்குக.

பின்பு அடித்த கலவையுள் மாவைச் சிறிது சிறிதாகத் தூவிச் சேர்த்துக்கொண்டபின் ஸ்ரார் நொசில்ஸ் போட்ட ஸ்றிஞ்சில் கலவையை அடைத்து 2 அங்குல நீளத் துண்டுகளாக மாஜரீன் பூசிய தட்டில் பிழிந்து 345 பாகை வெப்பத்தில் 10-20 நிமிடங்கள் பேக்செய்து கொள்க.

# நலமாக வாழ்வோம்

# சூரிய நமஸ்காரம்

உள்ளங்கைகளை ஊன்றி உடம்பை வேகமாக முன்னோக்கிக் கொண்டுவர வேண்டும். மார்பு, நெற்றிப் பொட்டு ஆகியவற்றைத் தரையில் வைத்து நமஸ்காரம் செய்ய வேண்டும். இதுவே அட்டாங்க நமஸ்காரம் என்று கூறுவர். அதாவது பாதம் 2,கால் முட்டிகள் 2, மார்பு 1, உள்ளங்கைகள் 2. நெற்றி பொட்டு தலை 1 ஆக 8 பாகங்கள் தரையின் மீது இருப்பதால் இந்தப் பெயர் அட்டம் என்றால் 8 என்று பொருள். இடுப்புப் பகுதி, தரையில் படாது புட்டத்தை உயர்த்தி நிறுத்த வேண்டும்.

7. தலையை உயர்த்தி வானத்தைப் பார்க்க வேண்டும். முதுகு நன்கு பின் நோக்கி வளைந்து இருக்க வேண்டும். இது புஜங்காசன நிலையாகும்.

8. உள்ளங்கைகளையும் பாத விரல்களையும் நன்கு தரை மீது அழுத்தி, இடுப்பை மேல் நோக்கி உயர்த்தி, தலையை குனிந்த நிலையில் இரண்டு கைகளின் இடையே கொண்டுவரும்போது குதிக்காலைப் பூமியின் மீது அழுத்தி வைக்க வேண்டும். இது ஒரு குன்று போன்ற நிலையாகும்.

9. திரும்பவும் 5ஆவது நிலைக்கு வர வேண்டும். கால் முட்டிகளைத் தரையின் மீது வைத்துக் குதி கால்கள் மீது அமர்ந்து நெற்றி பொட்டை தரை மீது வைத்து ஓய்வு எடுக்க வேண்டும்.


10. நிமிர்ந்து வேகமாக வலது கால் பாதத்தை இரண்டு கைகளுக்கு இடையே கொண்டு வந்து வைக்க வேண்டும்.

11. குனிந்து இரண்டு கைகளையும் பாதத்திற்குப் பக்கத்தில் வைக்க வேண்டும். கால் முட்டிகளை வளைக்காது சரி செய்ய வேண்டும். இது 2ஐப் போன்று பாதஹஸ்தாசன நிலையாகும்.

12. நிமிர்ந்து நின்று தயார் நிலையான நமஸ்கார முத்திரை செய்து நேராகப் பார்க்க வேண்டும்.

இது ஒரு சுற்று அல்லது ஒரு நமஸ்காரம் ஆகும். இது போல் 6லிருந்து 12 வரை செய்தால் போதும்.

முக்கிய குறிப்புகள் :-




1. இரண்டாவது நமஸ்காரம் செய்யும்போது இடது காலை பின்னோக்கி கொண்டு வந்து 11வது நிலையில் இடது காலையே திரும்ப கொண்டு வரவேண்டும்.

2. வலது கால், இடது கால் என்று மாற்றி மாற்றி ஒவ்வொரு சுற்றிலும் செய்ய வேண்டும். 3வது நிலையில் வலது காலை கொண்டு வந்துவிட்டு 11வது நிலையில் இடது காலை திரும்பக் கொண்டு வரக்கூடாது.

3. காலையில் செய்வதானால் கிழக்குத் திசை நோக்கி நின்றும், மாலையில் செய்வதானால் மேற்குத் திசை நோக்கி நின்றும் பழக வேண்டும்.

4. அடி முதுகு வலி, கழுத்துவலி மற்றும் முதுகுத் தண்டுக் கோளாறு உள்ளவர்கள் இப் பயிற்சியை செய்யக் கூடாது.

5. அதிக இரத்த அழுத்தம், இருதய நோய் உள்ளவர்கள் யோகாசன நிபுணரின் ஆலோசனையுடன் பழகலாம்.

6. மந்திரங்களுடன் பழகும் முறையை நிபுணரின் உதவியுடன் நேரில் கற்றுக் கொள்வதே நலம். இருந்தாலும் மந்திரங்கள் இல்லாது பயிற்சி செய்வதால் தவறு இல்லை.

7. மலச்சிக்கல் உள்ளவர்கள் 2 டம்ளர் வெந்நீர் அருந்திவிட்டு உடன் இப் பயிற்சியை செய்து வந்தால் விரைவில் மலச்சிக்கல் தீரும்.

8. யோகாசனம் பழக நேரமில்லாதவர்கள் அல்லது நேரமில்லாத நாட்களில் இப் பயிற்சியை மட்டும் 6 தடவைகள் செய்து வந்தால் போதும்.

9. தவறுகள் இல்லாது முறையாகச் செய்வதே அதிக பலனைக் கொடுக்கும். அதனால் ஒரு முறைக்குப் பல முறை செய்முறையை நன்கு படித்து மனதில் நிறுத்தவும்.

10. இப் பயிற்சியால் சந்தேகம் தோன்றினால் யோகாசன நிபுணருடன் நேரிலோ, கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளவும்.

**யோகா முற்றும்**

# ஒரு தாய் மகள் 02

**சென்ற வாரம்...**

சான் பிரான்சிஸ்கோவைச் சேர்ந்தவள் பேஜ். இவளின் கணவன் பிராடி இவர்களுக்கு ஆண்ட்ரூ என்ற ஏழு வயது மகனும், ஆலிஸன் என்ற பதினைந்து வயதான மகளும் உள்ளனர். இரு பிள்ளைகள் இருந்தாலும் பேஜ் கணவன் மீது அளவுக்கதிகமான காதல் கொண்டிருந்தாள்.

ஆனால் ஆலிஸன் அறிவுள்ள பெண். கொஞ்ச நேரத்தில் மனம் மாறி அம்மாவின் பேச்சுக்குக் கட்டுப்படுவாள். தம்பி ஆண்டியிடம் உயிர். அவளுக்கு எட்டு வயதாகியிருந்தபோது ஆண்டி பிறந்தான். குழந்தை பிழைக்குமோ பிழைக்காதோ என்று அப்பா அம்மாவைப் போலவே அவளும் தவித்திருந்தாள். ஆஸ்பத்திரியிலிருந்து அதைத் தூக்கிக்கொண்டாள். கீழே விடவே யில்லை. அன்று முழுதும் அதை எடுத்துக்கொண்டு வீடு பூரா சுற்றினாள். பிறகு கூடப் பல நாட்கள் தன் படுக்கையிலேயே தம்பிப் பாப்பாவை வைத்துக்கொண்டிருப்பது அவள் வழக்கமாக இருந்தது. ஆண்டியும் அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு நிம்மதியாகத் தூங்குவான். அம்மாவுக்குத் தெரியாமல் சாக்லேட், விளையாட்டுப் பொருள்களை வாங்கி வந்து தம்பிக்குக் கொடுப்பாள் ஆலிஸன்.

வீட்டிற்குள் நுழைந்தாள் பேஜ்.

இரவுச் சாப்பாட்டுக்காக அடுப்பில் ஏதாவது வைத்துவிட்டுக் கணவனின் அறைக்குப் போக வேண்டுமென்று நினைத்தவளாகச் சமையலறைக்குள் அவள் நுழையவும் ஆலிஸின் டெலிபோனை வைத்துவிட்டு அம்மாவைப் பார்த்துப் புன்முறுவல் செய்யவும் சரியாயிருந்தது.

"என்னென்ன பண்ணினாய் இன்று?" என்றாள் பேஜ்.

"என் சினேகிதி க்ளோவும் நானும் டென்னிஸ் ஆடினோம். இன்னும் சில பேர் வந்திருந்தார்கள். டபிள்ஸ் ஆடினோம். அப்புறம் ஸ்விம்மிங்கிற்குப் போய்விட்டு வந்தேன்" என்றாள் ஆலிஸன்.

இப்படியெல்லாம் வசதியான வாழ்க்கை கிடைத்திருப்பதைப் பற்றி ஆலிஸன் பெரிதாக நினைப்பது கிடையாது. சகஜமான விஷயம் மாதிரிப் பேசுவாள்.

பேஜ்ஜும் பிராடும் அமெரிக்காவின் வெவ்வேறு பகுதிகளில் பிறந்து, ஓரளவு கஷ்டத்துடன் வளர்ந்து முன்னேறியவர்கள். ஆனால் ஆலிஸனும், ஆண்டியும் பிறக்கும்போதே தங்க மாநிலம் என்று புகழ்பெற்ற கலிபோர்னியாவில் வசதியாகப் பிறந்து வளர்ந்திருக்கிறார்கள். சில சமயம் பேஜ்ஜுக்குப் பொறாமையாகக் கூட இருப்பதுண்டு, குழந்தைகளை எண்ணி!

ஆனால், அவர்களுக்கு இப்படிப்பட்ட வசதியான வாழ்க்கை கிடைக்க வேண்டுமென்றுதான் அவள் ஆசைப்பட்டாள். பத்திரமான, சௌகரியமான, ஆரோக்கியமான வாழ்க்கை வாழ வேண்டும்..... அவர்கள் மனசுக்கு வருத்தமோ, உடலுக்குத் தீங்கோ ஏற்படாமல் பாதுகாப்புத் தரும் வாழ்க்கை....அதுதான் பேஜ் விரும்பியது.

"ராத்திரி எங்கேயாவது வெளியே போகப் போகிறாயா ஆலி?" என்று மகளைக் கேட்டாள். ஆலிஸன் எங்கும் போவதாக இல்லை யென்றால், ஆண்ட்ரூவைப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு, கணவனுடன் கொஞ்சம் வெளியே போய் வரலாமே என்று அவளுக்கு ஆசை.

"ஆமாம்மா. க்ளோவின் வீட்டுக்குப் போகப் போகிறேன். அவள் அப்பா என்னையும் க்ளோவையும் டின்னருக்கு அழைத்துப் போகிறேன் என்றார். சாப்பிட்ட பிறகு சினிமாவுக்குப் போகப் போகிறோம்" என்றாள் ஆலிஸன்.

சற்று ஏமாற்றமாக இருந்தாலும், "சரி" என்றாள் பேஜ்.

"அம்மா, உன் காஷ்மீர் வெல்வெட் ஸ்வெட்டரை இன்று போட்டுக்கொண்டு போகட்டுமா?"

"அந்தக் கறுப்பு ஸ்வெட்டர்தானே? தாராளமாய் எடுத்துக்கொள்" என்றவள், "எத்தனை மணிக்கு நீ புறப்பட வேண்டும்?" என்றாள்.



"ஏழு மணிக்கு வருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன்".

மகளின் கரிய பெரிய கண்களை நேருக்கு நேராகச் சந்தித்தாள் பேஜ். அந்தக் கண்களில் இன்னதென்று சொல்ல முடியாத இரகசியம் ஒளிந்திருப்பது போல் தோன்றியது. தாயிடம் பகிர்ந்து கொள்ள முடியாத ஏதோ ஓர் எண்ணம்..... என்னவோ மர்மம்....

மறு வினாடியே அது மறைந்து விட்டது.

"பதினொரு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்துவிட வேண்டும்" என்றாள் பேஜ். வழக்கமான கட்டளைதான் அது.

"அம்மாம்மா...என்னம்மா....நீ....படம் முடிய லேட்டானால்?"

"சரி, பதினொன்றரை. அதற்கு மேல் ஆகுமென்று தோன்றினால் சினிமாவுக்கே போக வேண்டாம். வீட்டுக்கு வந்துவிடு."

"தாங்க்ஸ்மா," என்றாள் ஆலிஸன்.

"காரில் நான் கொண்டுபோய் விடட்டுமா?"

"வேண்டாம்மா. க்ளோவின் வீடு பக்கத்தில்தானே? நான் நடந்தே போய்க்கொள்கிறேன்."

தோளின் இருபுறமும் சுருள் சுருளாகக் கூந்தல் பொங்கி வழிய, வெள்ளை ஸ்கர்ட்டும் அதன் மீது இறுக்கமான கறுப்பு ஸ்வெட்டரும் அணிந்து புறப்படத் தயாரானாள் ஆலிஸன்.

மணி ஆறு.

அழகுத் தேவதையாகத் திகழும் பெண்ணையே கண் கொட்டாமல் பார்த்தாள் பேஜ்.

அழகான பெண், அழகான பையன், அழகான கணவன், இனிமையான குடும்பம் - நினைக்கையிலேயே பேஜின் மனத்தில் ஒரு பரவசம் படர்ந்தது.

ஆனால் ஒரே ஒரு கொடிய இரவில் இந்த ஆனந்தம் அத்தனையும் நாசமாகப் போகிறது என்று அவளுக்கு அப்போது தெரியாது.

மகளையே பார்த்துக்கொண்டு நின்றிருந்த பேஜ்ஜுக்கு, பிறகுதான் கணவன் ஞாபகம் வந்தது.

'பிராட் என்னதான் பண்ணிக் கொண்டிருக்கிறார்? குரலையே காணோமே?'

அவனுடைய அறையை நோக்கி நடந்தாள். பிராட் தன் பெட்டியில் துணிமணிகளை எடுத்து வைத்துக்கொண்டிருப்பதைக் கண்டதும் ஏமாற்றமாக இருந்தது. வெளியூர்ப் பயணம்!

'ஞாயிற்றுக்கிழமைகளில்தான் பிராட் வெளியூர் புறப்படுவது வழக்கம். இந்த வாரம் சனிக்கிழமையே கிளம்புகிறாரே?' ஒரு பெருமூச்சுடன் நின்றாள்.

கணவனைப் பார்க்கும் ஒவ்வொரு முறையும் இப்போதுதான் முதல் தடவை பார்க்கிற மாதிரி, அவனுடைய அழகு அவளை அசத்தும். இன்றும் அப்படித்தான்.

ஆறடி உயரம். செதுக்கிய சிற்பம் மாதிரி முகவெட்டு, குட்டையாக வெட்டப்பட்ட கறுத்த முடி; பெரிய கண்கள்; அகன்ற தோள்கள்; குறுகிய இடை; நீண்ட கால்கள்; இத்தனையுடன் கூட அந்தக் கவர்ச்சியான புன்னகை! அவன் புன்னகை செய்தால் போதும்; பேஜ் பனிக்கட்டியாய் உருகிவிடுவாள்.

இருந்தாலும் கூடச் சில சமயங்களில் அவனுக்கும் தனக்குமிடையே ஏதோவொரு பிளவு, என்னவோ ஒரு தடை இருப்பது போல ஒரு பயம் ஏற்படுவதுண்டு. ஒரு நீண்ட தூர ஓட்டப் பந்தயத்தில் இருவரும் தினம் தினம் கலந்துகொண்டு ஓடிவிட்டு, சாயந்தரம் மூச்சு இரைக்க இரைக்கச் சந்திக்கிற மாதிரி ஒரு பதைப்பு...எப்போதும் அவனுக்கு ஒரு அவசரம்....என்னை அங்கே இறக்கிவிடு...அதை எடு.... இதை வை....என்னோட இது எங்கே?...அது எங்கே? எப்போது...? என்ன...? எப்படி? இதுவே வாழ்க்கையாகிவிட்டது என்று பேஜ் நினைத்துக் கொள்வாள்.

*(தாய் தொடர்வாள்...)*

எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

# செல்ஃபோன் சில்மிஷங்கள்



இன்று நாடு முழுவதும் பரவிக்கொண்டிருக்கும் பயங்கரம் படம் எடுப்பது மட்டுமல்லாமல் அந்தப் படங்களை நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி இண்டர்நெட்டிலும் நுழைத்து விடுகிறார்கள்.

இங்கு நீங்கள் பார்க்கும் படங்கள் அந்த அப்பாவிப் பெண்கள் அறியாதபோது எடுக்கப்பட்டு இண்டர்நெட்டில் பதிவு செய்யப்பட்டவை.

செல்ஃபோன் என்பது அரிதான விஷயமாய் இருந்த காலம் போய் இப்போது எல்லோர் கையிலும் ஒரு செல்ஃபோன். முக்கியமாய் டீன்ஏஜ் இளசுகள் எல்லோருமே கையில் செல்ஃபோனுடன்தான் இருக்கிறார்கள். எஸ்.எம்.எஸ். அனுப்புவதும் விதவிதமான ரிங்டோன் வைப்பதும் அவர்களது லேட்டஸ்ட் பொழுதுபோக்கு. இந்தச் சமாச்சாரங்களுடன் இப்போது ஃபோட்டோ எடுப்பதும் சேர்ந்துவிட்டது. கையடக்க செல்ஃபோன் உள்ளேயே ஒரு குட்டி காமிரா. நாம் படமெடுக்கிறோமா, பேசுகிறோமோ என்று அடுத்தவருக்குத் தெரியாது. ஆறாயிரம் ரூபாயில் தொடங்கி முப்பத்தைந்தாயிரம் வரை விலை.

தேவிகா என்கிற இளம் பெண்ணிடம் கேமிரா செல்ஃபோன் குறித்துக் கேட்டோம். "நம்ம ஊர்ல கேமிரா செல்ஃபோனை ரொம்ப தப்பா பயன்படுத்தறாங்க. நடந்து போற பெண்களை, பஸ்ல போற பெண்களை அவங்களுக்குத் தெரியாம படம் எடுக்கிறது, அந்தப் படத்தை எம்.எம்.எஸ். மூலமா மத்த நண்பர்களுக்கு அனுப்பறது இப்படி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். இதை எப்படி கண்ட்ரோல் செய்யப் போறாங்கன்னு தெரியலை" என்கிறார்.

அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் பல ஹோட்டல்கள், ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்களில் காமிரா செல்ஃபோன்கள் தடைசெய்யப்பட்டிருக்கின்றனவாம். மிக முக்கியமாய் பிரபலங்கள் அதிகம் வரும் பகுதிகளில் இந்த வகை காமிராக்கள் தடை செய்யப்பட்டிருக்கின்றன. ஏனென்றால், 'பப்பராஸி' என்று சொல்லப்படும் வீ.ஐ.பீ.க்களை இரகசியமாகப் புகைப்படம் எடுக்கும் புகைப்படக்காரர்கள் செல்ஃபோன் காமராவைக் கொண்டு படமெடுத்துவிடுவார்கள் என்ற பயம்தான்.


இப்போது வரும் செல்ஃபோன்கள் அதி நவீனமாய் இருக்கின்றன.

செல்ஃபோனிலேயே எஃப்.எம்.ரேடியோ இண்டர்நெட் என்று வந்துவிட்டன. சினிமாவையே கூடப் பார்த்துவிடலாம் என்கிறார்கள். செல்ஃபோனில் பார்ப்பதற்காக நீலப் படங்கள் கூடக் கிடைக்கின்றதாம்.

ஆகவே பெண்களே, கடைத்தெருவிலோ, ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் உள்ளேயோ மும்முரமாய் ஷாப்பிங் செய்துகொண்டிருந்தாலும், அவ்வப்போது சுற்றுமுற்றும் ஒரு பார்வை பார்த்துக்கொள்ளுங்கள். கழுகுக் கண்களோடு காமிரா செல்ஃபோன்களின் லென்ஸ்களும் உங்களைக் கண்காணிக்க வாய்ப்புண்டு.

*-நன்றி குமுதம்.*








# இணைய வாரீர்!

இலங்கையில் தமிழ்த் திரைப்படத் துறை இருந்ததற்கான தடயங்களே தொலைந்துவிட்டன. திரைப்படத் துறையில் ஆர்வமுள்ள நம் நாட்டுக் கலைஞர்கள் இந்தியாவுக்குச் சென்று பல துறைகளிலும் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அந்த வரிசையில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்குச் சென்று திரைப்படம் இயக்கும் பயிற்சியை மேற்கொண்டதோடு பல திரைப்படங்களுக்கு உதவி இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார் நம்மவர் சுதன். இப்போது இலங்கையில் இருக்கும் இவர், இலங்கை - இந்திய கூட்டுத் தயாரிப்புப் படங்களை இயக்க ஆர்வம் கொண்டுள்ளார். கலைஞர்களைக் தட்டிக்கொடுக்க இலங்கைத் தயாரிப்பாளர்கள் முன்வராததால் பலரின் முயற்சிகள் பலனளிக்காமல் போயுள்ளன. இக் குறையை நீக்கவும் புதியக் கூட்டுத் திரைப்படங்களைத் தயாரிக்கவும் ஆர்வமுள்ளவர்களும், இணைந்து பணியாற்ற விரும்பும் கலைஞர்களும் முன்வருவார்களானால் நம் நாட்டிலேயே வெற்றிப் படங்களை நாமே தயாரிக்க முடியும் என்கிறார் சுதன். இவரின் இம்முயற்சியில் கைகோர்த்துக்கொள்ள விரும்புவோர் எம்மோடு தொடர்புகொள்ளவும். வெற்றிப் பயணத்தில் சேர்ந்து பயணிப்போம்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
தினமுரசு வாரமலர்
தபால் பெட்டி இல. 1772. கொழும்பு.

# 32 ஒரு பெண்ணின் வாழும் வரலாறு



## ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்



**அமெரிக்க** - வியட்னாம் போர் இடம்பெற்ற அதே கால கட்டத்தில்தான் அமெரிக்காவில் கறுப்பின மக்களின் உரிமைகளுக்காகவும்; முழு அமெரிக்கரினதும் உரிமைகளும் வென்றெடுப்பதற்கான போராட்டத்தை DR. மார்டின் லூதர்கிங் ஆரம்பித்தார். இந்தப் போராட்டத்தை இவர் ஆரம்பித்த வேளையில் ரொபர்ட் கென்னடி அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்தார். இவர்கள் இருவரும் ஒரே காலப்பகுதியில்தான் படுகொலை செய்யப்பட்டார்கள். இவர்கள் இருவருடைய படுகொலைகளுக்கும் நேரடியான காரணமாக அமெரிக்க - வியட்னாமியப் போர்தான் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி ஏற்றுக்கொள்ள முடியும்.

உண்மையில் இந்த அமெரிக்க - வியட்னாம் போர் பற்றி நான் சுருக்கமாக விளக்கியுள்ளதுடன்; பொதுவாக எனது ஐக்கிய அமெரிக்க நாடு பற்றியும் அதன் தேசிய சர்வதேசிய கொள்கைகளில் இப்பேற்பட்ட அமெரிக்காவின் வெளிநாட்டு யுத்தங்கள் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதையும் அவ்வேளையில் எமது அமெரிக்கா பற்றிய தேசப்பற்றுடன் கூடிய உணர்வு எல்லோரிடமும் எவ்வாறு இருக்கிறது என்பதையும் இந்த யுத்தங்களும், அமெரிக்காவின் முடிவுகளும் எமக்கு தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

அமெரிக்கா தனது தேசிய நலனையும், சர்வதேச மட்டத்தில் காப்பாற்றிக்கொள்வதற்கு ஐரோப்பா, ஆபிரிக்கா மற்றும் ஆசியக் கண்டங்கள் ஊடாக முழு உலகிலும் எமது அமெரிக்காவின் கடற்படையின் முகாம்களும்: பாதுகாப்புத்தளங்களும் இருப்பதானது, எமது நாட்டின் நலன்களை பேணிப் பாதுகாப்பாக எமது நாட்டை வளத்திருப்பதுடன், ஏனைய நாடுகளுக்கு பூரணத்துவமான பாதுகாப்பை எம்மால் வழங்கமுடிகிறது. இது எமது நாட்டின் விஷேட தன்மைகளுள் ஒன்றாகும்.

மேலும், அமெரிக்க - வியட்னாம் யுத்தம்பற்றி ஒரு தடவை எமது, Wellesley பல்கலைக்கழகத்தில் ஒரு விஷேட விவாத அரங்கே நடைபெற்றது. அந்த விவாத அரங்கில் அமெரிக்க நலன்கள், மற்றும் அமெரிக்கர் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய நாட்டுப்பற்று தேசப்பற்று சரியானதாக இருக்க வேண்டும் என்றும் அது உறுதியாக இருக்க வேண்டும் என்றும் ஒரு தலைப்பிலும்... மற்றையது உலக நாடுகளில் எதுவித தக்ககாரணமின்றி, ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில், யுத்தத்தில் அமெரிக்கா ஈடுபடுவது அல்ல என்று இருதலைப்பிலும் எமது விவாத அரங்கு அரங்கேறியது.

நான் அமெரிக்கர்களுக்கு இருக்க வேண்டிய தேசப்பற்று நாட்டுப்பற்று உறுதியாக இருக்க வேண்டும் என்ற தலைப்பின் கீழ் எனது கருத்துக்களை அந்த விவாதத்தில் முன்வைத்தேன். அந்தக் காலகட்டத்தில் அமெரிக்க - வியட்னாம் போர் நடைபெற்றுக்கொண்டிருந்ததால், எமது விவாத அரங்கமும் சூடுபிடித்திருந்தது. அத்துடன் அந்த விவாத அரங்கில் ஒரு அமெரிக்கன் எவ்வளவு தூரம் நாட்டுப்பற்றுள்ளவனாக இருக்க வேண்டும், அதேவேளை ஒரு அமெரிக்கன் தாய் நாட்டை தூய்மையாக, உறுதியாக நேசிப்பானென்றால், அவன் தனது நாட்டுக்கெதிராக எந்தவித மாற்றுக்கருத்தையும் ஒருபோதும் தெரிவிக்க மாட்டான் என்பதை மிகத்தெளிவாக தக்க சான்றுகளுடனும், ஆதாரங்களுடனும் நான் விவாதித்தேன்.

மேலும் அமெரிக்க அரசாங்கம் எடுக்கின்ற எந்தவொரு முடிவுக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு இராஜதந்திர ரீதியாக எமது தாயகமான அமெரிக்காவின் நலன்கள் ஒருபோதும் பாதிப்படையக்கூடாது என்பதுதான் எனது உறுதியான கருத்தாக இருந்தது.

அதேவேளை, நாட்டுப்பற்றில்லாமல் வெறுமனே விதண்டாவாதங்களைப் புரிபவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் எமது நாட்டின் - இந்த தேசத்தின் எதிரிகள் அல்லது துரோகிகள் என்பதுதான் எனது பொதுவான கருத்தாகும். ஒரு அமெரிக்கனைப் பொறுத்தவரை ஆணோ, பெண்ணோ, அவர் எதுவித கேள்வி கணக்குக்கேட்காமல் அமெரிக்காவின் தேசிய, சர்வதேசிய கொள்கைகள் விடயத்தில் பற்றுக்கொண்டவராக வாழவேண்டும். மாறாக வெறுமனே இதுவிடயத்தில் ஏனோதானோ என்று காலம் கழிக்கக்கூடாது என்பது எனது உறுதியான கருத்தாகும். மேலும் எங்களுடைய அந்த விவாத அரங்கு முடிவடைந்தவுடன் கேள்வி - பதில் நேரமும் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தக் கேள்வி, பதில் நேரத்தின்பொழுது சில காத்திரமான கேள்விகளை மாணவிகள் என்மீது தொடுத்தனர். நான் உறுதியான பதில் அளித்தேன்.

மேலும், ஒரு முக்கியமான விடயத்தினையும் நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அதாவது DR. மார்டின் லூதர்கிங் ஏப்ரல் மாதம் 4ம் திகதி 1968ம் ஆண்டு படுகொலைசெய்யப்பட்டதன் பின்பு எமது Wellesley பல்கலைக்கழகத்தில் எனது வகுப்பில் கற்றவர்களில் கறுப்பின மாணவிகளான கரன், பரன் ரூஷான், அல்வியா வாட்லோவ் போன்ற முக்கியமான மாணவிகள், மற்றும் அவர்களுடன் இன்னும் பலரும் இணைந்து மனித உரிமைப்போராளியான Dr. மார்டின் லூதர்கிங் அவர்களின் கொள்கைகளின் அடிப்படையிலான ஒரு விஷேட அமைப்பை எமது Wellesley பல்கலைக்கழகத்துக்குள்ளேயே ஏற்படுத்தினார்கள். அந்த அமைப்புதான் எமது Wellesley பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது ஆபிரிக்க அமெரிக்க கறுப்பின நிறுவனமாகும். (African - American Organization of Campus) இந்த நிறுவனத்தின் மூலம் Wellesley பல்கலைக்கழகத்தில் கறுப்பின மாணவர்களின் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் ஏனைய அனைத்து நலன்களை கவனிப்பதற்குமான அனைத்து ஏற்பாடுகளையும் அந்நிறுவனம் செய்ய ஆரம்பித்தது.



*(இன்னும் வரும்...)*

# அரச குடும்பத்தின் ஆடை அணிகலனுடனான முடிசூட்டல் நிகழ்வு



**மன்னர் 5வது** ஜோர்ஜினது அரச குடும்பத்தின் ஆடை அணிகலனுடனான முடிசூட்டு நிகழ்வும், அதற்கான பெருவிழாவும் அரண்மனையில் வெகு விமர்சையாக நடைபெற்றது. மன்னர் 5வது ஜோர்ஜின் பிள்ளைகளான எட்வார்டும், அவருடைய சகோதரி விக்டோரியா மேரியும் அந்த விழாவில் கலந்து கொள்வதற்காக அரச குடும்ப. ஆடை அணிகலனுடன் இங்கு காட்சியளிப்பதையே படத்தில் காண்கிறீர்கள்.

**இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.**


**ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்த வைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களினூடாக உங்கள் முன் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப்போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங்களும் இயல்பாக ஏற்பட்டதுமல்ல, அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்ப்புகளைத்தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகி யுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.**

**19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத்துகிறது.**

# ரம்சே மெக்டொனல்ட் (RAMSAY MACDONALD)

## பிரித்தானியாவின் தொழில் கட்சியின் தவிசாளராக தெரிவு செய்யப்படல்



**6ம்** திகதி பெப்ரவரி மாதம் 1911ம் ஆண்டு பிரித்தானியாவின் தொழில் கட்சியின் தவிசாளராக ரம்சே மெக்டொனல்ட் (RAMSAY MACDONALD) என்பவர் தெரிவுசெய்யப்பட்டார். அவரையே, இங்கு படத்தில் காண்கிறீர்கள். இவருடைய தந்தை ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஒரு சாதாரண மான் பண்ணைத் தொழிலாளி. இந்த ரம்சே மெக்டொனல்ட் என்பவர் 1866ம் ஆண்டு பிறந்தார். அவர் பிரித்தானியாவின் தொழில் கட்சி (The British Labour Party) யின் வளர்ச்சியில் பங்கெடுத்தவர்களில் அதாவது ஆரம்ப கர்த்தாக்களில் இவரும் ஒருவர். அந்த கட்சியினூடாக பிர்த்தானிய மக்களுக்கு பல்வேறு அரிய பல, மகத்தான பணிவிடை செய்த அவர் 1937ம் ஆண்டு மரணமானார்.

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

**ஒரு பத்திரிகையாளனின் அநுபவம்**

"1983ஆம் ஆண்டு ஜுலை மாதம் 24ஆம் திகதி.

அப்போது நான் தெஹிவளையில் குடியிருந்தேன். 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் பணிபுரிந்துகொண்டிருந்தேன். எனது செய்தி ஆசிரியர் என்.ஆர்.ஜே.ஏரன் தொலைபேசி மூலம் என்னோடு தொடர்புகொண்டு யாழ்ப்பாணம் திருநெல்வெலியில் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட கெரில்லாத் தாக்குதலில் பதின்மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்ட சம்பவத்தையும் இதன் விளைவாகக் கொழும்பில் பதற்றம் நிலவுவதாகவும் தெரிவித்தார். என்கிறார் பத்திரிகையாளர் சபாரத்தினம். தனது அநுபவம் இப்படியிருந்ததென்கிறார் அவர்.




"தகவல் கிடைத்ததும் நான் எனது பத்திரிகைக் காரியாலயத்துக்குச் சென்றேன். தமிழ் நண்பர்கள் பலர் தொலைபேசி மூலம் என்னோடு தொடர்புகொண்டு கொழும்பில் பல பகுதிகளில் குண்டர்கள் அட்டகாசம் புரிவதாகத் தெரிவித்தனர். சிலர் என்னிடம் என்ன நடக்கிறதென்று கேள்வி எழுப்பினர். எனது காரியாலயத்துக்குச் சென்ற பின்னர்தான் கொழும்பில் பதற்றம் அதிகரித்து வருவதை என்னால் உணர முடிந்தது. 24ஆம் திகதி மாலை இராணுவ சிப்பாய்களின் சடலங்கள் இறுதிக் கிரியைகளுக்காக பொரளை கனத்தை மயானத்துக்குக் கொண்டு வரப்படவுள்ளதென்ற தகவல்கள் காட்டுத் தீ போல் கொழும்பில் பரவிக்கொண்டிருந்தன. பெருந்தொகையான மக்கள் கூட்டம் அன்று மாலையிலிருந்தே மயானத்தில் குவியத் தொடங்கியது. அணிவகுப்பு மரியாதையுடன் இறுதிக் கிரியைகள் நடத்தப்பட வேண்டுமென்று ஜெயவர்த்தனவிடம் இராணுவம் கோரியிருந்தது. அதற்கு அவரும்

**"எனது வீட்டைக் காண்பிக்குமாறு காடையர் கும்பல் கேட்டது. அங்கே தமிழர்கள் யாருமில்லையென்று எனது அயலவர்களான சிங்களச் சகோதரர்கள் கூறினர். "பொய் சொல்ல வேண்டாம். ஏன் தமிழர்களைப் பாதுகாக்க முனைகிறீர்கள். இதோ தமிழர்களின் குடியிருப்புக்கள், கடைகள் பற்றிய பெயர், விபரங்கள் எம்மிடம் இருக்கின்றன" என்று கூறியபடியே ஒருவன் வாக்காளர் இடாப்பை எடுத்துக் காண்பித்தான்."**

இணக்கம் தெரிவித்திருந்தார்.

மயானத்தில் மக்கள் கூட்டம் திரளத் தொடங்கியதால் அரசாங்கம் அச்சமடைந்தது. பொரளையில் சிப்பாய்களின் சடலங்கள் தகனம் செய்யப்படமாட்டாதென்றும் மக்களை மயானத்தை விட்டுக் கலைந்து செல்லுமாறும் பொலிஸார் ஒலிபெருக்கிகள் மூலம் அறிவித்தனர். சிப்பாய்களின் சடலங்கள் அவரவர்களின் சொந்த இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளதாகவும் ஒலிபெருக்கிகள் மூலம் தெரிவிக்கப்பட்டது. திருநெல்வேலியில் இடம்பெற்ற கெரில்லாத் தாக்குதல்கள், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் பற்றிய செய்திகள் கொழும்பில் பரவத் தொடங்கின. கனத்தை மயானத்தில் குழுமிய மக்கள் கூட்டம் அதிகரித்ததேயொழிய கலைந்து செல்வதாக இல்லை. இதேவேளை, பொரளைச் சந்தியை வந்தடைந்த கும்பலொன்று தமிழ் மக்களின் கடைகளைத் தாக்கத் தொடங்கியது. சில

(அரசியல் தொடர்)

கடைகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. அன்றிரவு குழப்பங்கள் பரவத் தொடங்கின. டெயிலி நியூஸ், தினமின, தினகரன் ஆகிய மும்மொழிப் பத்திரிகைகளின் ஆசிரிய பீடங்கள் மேல் மாடியில் உயரமான இடத்தில் அமைந்திருந்ததால் அன்று கடமையிலிருந்த பத்திரிகையாளர்கள் புகை மண்டலங்களைக் காணக்கூடியதாக இருந்தது. வானத்தை நோக்கி தீ எழுவதையும் காணக்கூடியதாக இருந்தது. நான் எனது காரியாலயத்திலிருந்தபடியே வீட்டுக்குத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டேன். பிரச்சினைகள் எதுவுமில்லையென்று வீட்டிலிருந்து பதில் வந்தது. எனக்கு நிம்மதியாகவிருந்தது.


இரவு பத்து அல்லது பத்தரை மணியளவில் எனது அலுவலக வாகனமொன்றின் மூலம் வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். கொழும்பு கோட்டையிலிருந்து காலி வீதி வழியாக அந்த வாகனம் பயணித்தது. ஏதாவது அசம்பாவிதங்கள் நடைபெற்றதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை. 24ஆம் திகதி அதிகாலை ஐந்து மணியளவில் எனது நண்பரொருவர் நாரஹென்பிட்டியிலிருந்து என்னோடு தொடர்பு கொண்டார்.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

நாரஹென்பிட்டியில் காடையர்கள் அலைந்து திரிவதாகவும் தமிழ் மக்களின் கடைகள், வீடுகளுக்குத் தீவைக்கப்படுவதாகவும் அவை கொள்ளையடிக்கப்படுவதாகவும் அவர் சொன்னார். அப்போது எனது இரு மகன்களும் வளரிளம் பருவத்துப் பையன்களாக இருந்தார்கள். தகவல் கிடைத்ததுதான் தாமதம் எனது இரு பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு, பம்பலப்பிட்டிய காசல் ஒழுங்கையிலுள்ள எனது உறவினரொருவரின் வீட்டுக்கு விரைந்தேன். அங்கு பாதுகாப்பாக இருக்கலாமென்று நான் நினைத்தேன். பம்பலப்பிட்டி கதிரேசன் ஆலயத்துக்கு அண்மையிலேயே எனது உறவினரின் வீடு இருந்தது. இவ்வாறான வன்செயல் நடவடிக்கைகளின்போது இந்த ஆலயம் அகதி முகாமாக மாறுவது வழமை. கிட்டத்தட்ட இரண்டு மணித்தியாலங்கள் கழித்து, அதாவது காலை எட்டு மணியளவில் குண்டர்களின் கும்பல்கள் கொழும்பு நகரின் பல்வேறு இடங்களில் தாக்குதல்களை ஆரம்பித்தன. இரும்புக் கம்பிகள், அலவாங்குகள் மற்றும் கையில் கிடைத்த கூர்மையான பொருட்கள் அவர்கள் வசமிருந்தன. தமிழர்களுக்குச் சொந்தமான கடைகளையும் வீடுகளையும் தாக்கிக் கொள்ளையடிப்பதில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். இவர்களைப் பின்தொடர்ந்து பெற்றோல் கலன்களுடன் வந்த கும்பல்கள் தீவைக்கும் வேலைகளை மேற்கொண்டன.

அன்று முழுநாளும் கொழும்புக்கு வெளியேயுள்ள இடங்களிலிருந்து காடையர்கள் கொண்டுவந்து குவிக்கப்பட்டனர். காடையர் கும்பலொன்று தெஹிவளை சென்றது. எனது அயலில் வசித்த சிங்கள மக்களிடம் எனது வீட்டைக் காண்பிக்குமாறு அந்தக் கும்பல் கேட்டது. அங்கே தமிழர்கள் யாருமில்லையென்று எனது அயலவர்களான சிங்களச் சகோதரர்கள் கூறினார். "பொய் சொல்ல வேண்டாம். ஏன் தமிழர்களைப் பாதுகாக்க முனைகிறீர்கள். இதோ தமிழர்களின் குடியிருப்புக்கள், கடைகள் பற்றிய பெயர், விபரங்கள் எம்மிடம் இருக்கின்றன" என்று கூறியபடியே ஒருவன் வாக்காளர் இடாப்பை எடுத்துக் காண்பித்தான் என்றனர் என் அயலவர்கள். அத்துடன் எனது பெயர், முகவரியின் கீழ் சிகப்பு நிற மையினல் கோடிடப்பட்டிருந்ததையும் அந்தக் குண்டன் காண்பித்ததாகவும் அயலவர்கள் தெரிவித்தனர். காடையர் கும்பல் என் வீட்டை நோக்கி முன்னேறியது.

(தொடர்ந்து வடியும்....)




**வ**ணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!! எங்கட இந்த "போனவாரப் புதினம்" பற்றிய பல விமர்சனங்கள் வந்து சேர்வதில் மகிழ்ச்சியே. வாழ்த்தியும் அதே வேளை தூற்றியும் விமர்சித்த அனைவருக்கும் எங்கள் நன்றிகள். ஏனெனில் வாசிப்பதோடு நின்றுவிடாமல் ஒரு வரியைத்தன்னும் எழுதிய உங்களுக்கு வேறு என்ன கைம்மாறு எங்களால் செய்ய முடியும்? ஆகவே, எதிர்காலத்தில் உங்கள் ஒத்துழைப்புத் தேவை என்று கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

***சின் :-*** *தம்பிமார் கைது செய்து வச்சிருந்த இரண்டு ஊர்காவல் படையினரையும் பிணையில விடுவிச்சுப்போட்டினமே.*

**மன் :-** விடயில்லையெண்டால் திட்டுவியள். விட்டால் வியப்பு. அப்ப என்னதான் செய்யச் சொல்லிறியள். எப்பிடி விட்டிச்சினம் எண்டு கேளும்...தங்கட ஆக்கள் பத்துப் பேரை விடுவிச்சுக்கொண்டுதான் விட்டிச்சினம். அதுவும் சும்மாவே...இருவருக்கும் ஒரு லகரம் ரொக்கப் பிணையிலையும், ஒரு லகரம் ஆட்பிணையிலையும்தான் விட்டிச்சினம். இந்தப் பிணைப் பொறுப்பை எழிலான தம்பியே பொறுப்பெடுத்தார்...அவையளின்ர மன்றத்தில அவையளே பொறுப்பும் நிப்பினமாம். அவையளே வைச்சு அவையளே எடுக்கிற மாதிரி.

***சின் :-*** *அப்பிடியெண்டால் எதிர்காலத்தில் அவையளின்ர ஆக்களை விடுவிக்க வேணுமெண்டால் இங்காலப் பக்கத்தில ஆக்கள் பிடிபடுவினமெண்டு சொல்லுங்கோ...கருணா அம்மான் கட்சி ஆரம்பிச்சதின்ர பின்னணியில இந்தியா இருக்கலாம் எண்டு தமிழரசுக் கட்சிக்காறர் சந்தேகப் படுகினமாமே......*

**மன் :-** இவையள் எதில சந்தேகப்படாம இருந்திருக்கினம். ஓட்டுப் போட அடையாள அட்டை அவசியமெண்டால் சந்தேகப்படுகினம், சந்திரிகா அம்மையார் ஆலோசனைச் சபைக்கு வாங்கோ எண்டால் சந்தேகப்படுகினம். வெளிநாட்டுப் பிரமுகர்கள் யாழ்ப்பாணத்துக்குப் போனா சந்தேகப்படுகினம். இவ்வளவு ஏன் தற்கொலைக் குண்டுதாரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின்ர ஒப்பீசுக்குள்ள ஏன் வெடிக்கயில்லை எண்டும் சந்தேகப்படுகினம். அப்பிடித்தான் இதுவும் ஒரு சந்தேகம். சொந்தபுத்தியில சுயமா இயங்காத வரைக்கும் தொட்டதெல்லாம் சந்தேகம், சந்தேகம், சந்தேகம்தான்.

***சின் :-*** *ஐயோ அண்ண நிப்பாட்டுங்கோ. எனக்கு மூச்சு வாங்குது. தெனாலி படத்தில கமலஹாசன் சொல்லுமாப் போல 'பயம் பயம் பயம்' எண்ட மாதிரிக் கிடக்கு....எனக்கும் அப்பிடி ஒரு சந்தேகமிருக்குத்தான்.....*

*உங்கட தம்பிமாரிற்ர இப்பத்தைய பொசிசன் 'போர் எண்டால் போர், சமாதானம் எண்டால் சமாதானம்' எண்ட மாதிரியெண்டு ஒரு எழுத்தாளப் பல்லி சொல்லியிருக்கே.....*

**மன் :-** முன்னாள் மூக்கு நீண்ட ஜனாதிபதி 83 கலவரத்தில தமிழர் அநாதரவாக நிக்கேக்க இப்பிடித்தான் அறைகூவல் விடுத்தவராம். அதுக்குப் பதிலடியா இப்ப தமிழர் கூவினம் எண்டு கடனைக் கழிச்சுவிடலாம். சொன்னதே பல்லி; அதையேன் எழுத்தாளப் பல்லி என்கிறீர்? இப்பவெல்லாம் எவன் நேரா இருந்து எழுதிறான். சைக்கிள் பக்கில் எடுக்குமாப் போல ஒரு பக்கமாவெல்லோ எழுதிறான். ஏதோ தேசியத்துக்கு இவையால முடிஞ்சதைச் செய்யினம்; அவ்வளவுதான்.

***சின் :-*** *பழைய கடனைத் தீர்க்கிறதில நீங்களும் பொல்லாத ஆள் போலத்தான் இருக்கு...பதிலடி அப்பிடியும் கொடுக்கலாம்; மறுவளத்திலையும் தீர்க்கலாம் எண்ட முறை இரண்டாவதாக்கும்...*

*இந்து சமய அமைச்சு புதிய கதிரேசன் ஹோலில நடத்திற நவராத்திரி விழா என்ன சொல்லுது......*

**மன் :-** முதல் நாள் போனனான். முழுநாளும் போக முடியல்லையே எண்டு வருத்தம்தான். இந்தியா, தஞ்சாவூரில இருந்து வந்த கலைஞர்கள் தமிழர் கலாசார நிகழ்ச்சிகளை இரசிக்கும்படியா நல்லாச் செய்யினம். அவையளோட சரிக்குச் சமமா. எங்கட நாட்டுக் கலைஞர்களும் அசத்திறாங்கள். வாய்ப்புக் கிடைச்சால் ஒருக்காப் போய்ப் பாரும்....

***சின் :-*** *நல்லா அநுபவிச்சுப் பாத்திருக்கிறியள் போல.....கோல்பேசில கூப்பிட்டு காயவிடாம ஹோலுக்குள்ள குளுகுளுன்னு விழா நடத்தினால் வித்தியாசம் இருக்கத்தானே செய்யும்.*

*தற்சமயம் வெளிநாட்டில இருக்கும் சங்கரியார் சமகால அரசியல் நிலைமைகளை வர்ணனை செய்யுமாப் போல விளக்கி உங்கட தம்பி பிரபாவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறாரே, இது வேலைக்கு ஆகுமா?*

**மன் :-** வாசிச்சனான். இது முதல் கடிதமில் லையாம்; மூண்டாவது கடிதமாம். முதல் அனுப்பின இரண்டுக்குமே பதிலில்லாத நிலையில் மூண்டாவதை எழுதியிருக்கிறார் எண்டால் உந்தப் பரிதாபத்தை எப்படிச் சொல்கிறது. சொல்லிறதைக் கேட்கிறவையள் தான் வேணுமே தவிர, புத்தி சொல்லுறவையளோ, ஆலோசனை சொல்லுறவையளோ, வழிகாட்டிற றவையளோ இங்க தேவையில்லை. இந்த நினைப்புகளோட யாரெண்டாலும் இருந்தால் அவையள் தேசத் துரோகிகள் எனக் கருதப்படுவினம். இதுதான் தேசியத்தின்ர தாரக மந்திரம். அரசியல் ஞானம் தெரிந்த சங்கரியாருக்கு இந்தச் சங்கதி தெரியல்லையோ எண்டதை என்னால நம்ப முடியல்லை......

***சின் :-*** *அண்ண....உப்பிடி அடிச்சாப் போல பேசிறியள் எண்டால் அடிக்கடி பார்த்தீபன்ர படம் பாக்கிறியள் போல.....இப்ப சங்கரியார் புரிஞ்சிருப்பார் எண்டு நினைக்கிறன்...*

*எங்கட சுழல் பந்துச் சாதனையாளர் முரளிதரன், ஐக்கிய நாடுகளின் நல்லிணக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இப்ப வறிய மக்களுக்கு உதவ பணம் சேகரிப்பதிலும் ஈடுபட்டு வருகிறாராமே.....*

**மன் :-** முரளிதரனுக்கு ஐ.நா. சபையால கிடைச்ச கௌரவம் நமக்கெல்லாம் கௌரவம்தான். அதை விடவும் வறியவர்களுக்கு உதவுற பணியில காட்டி வாற ஆர்வம் அவரை புகழின்ர உச்சத்துக்கு இட்டுச்செல்லும். இப்ப முரளி விசயத்தில் வாயைப் பிளக்கிறவையள், முரளி சிங்கள தேசத்துக்கு வென்று கொடுக்கிறார் எண்டு சின்னப்புள்ளத்தனமா பேசினவையள் தங்கட மூஞ்சையை எங்க கொண்டு போய் வைக்கப் போகினமோ......

***சின் :-*** *அட சும்மா இருங்கோ. இதைக்கூட ஞாபகம் வச்சுக்கொண்டு....அது ஒரு வேகத்தில அப்பப் பேசிப்போட்டினம். அதப் போய்........*

*கருணாவின்ர பிரிவுக்குப் பிறகு கோடிக்கணக்கான பணம் மோசடி செய்ததாக ரமேஷை அவையளின்ர தலைமையே கைதுசெய்தது. இப்ப ராம் எண்டவரையும் கைதுசெய்திருக்கினமாம்..... அப்படியெண்டால் சூசை விவகாரமும் உண்மையோ.*

**மன் :-** பானு எண்டவர் வன்னியில இருந்து வந்து மட்டு.-அம்பாறை பகுதிகளை பொறுப்பேற்றிருக்கிறார் எண்டால் உள்ளுக்குள்ள ஏதோ புகைச்சல் இருப்பது உண்மை எண்டாகிறது. இதோட ஒப்பிட்டுப் பாக்கேக்க, சூசை தலைமையோட முரண்பட்டிருக்கிறார் எண்டதிலையும் சில ஆதாரங்கள் இப்போ வெளிவரத் தொடங்கியிருக்கு. இந்தக் கைதுகள் ஒருபக்கம் இருக்கட்டும், ஏற்கெனவே கைதான பதுமனுக்கு என்ன நடந்ததெண்டு ஏன் யாரும் கேட்கினமில்லை...பதுமன் இருக்கிறாரோ, இல்லையோ...பங்கர்களே நீங்கள்தான் பதில் சொல்ல வேணும்.

***சின் :-*** *முதலில உங்களுக்கு மருந்து எடுக்க வேணும். ஞாபக சக்தி அதிகரிச்சுப் போட்டுது உங்களுக்கு. இது அவ்வளவு நல்லதில்லையுங்கோ..... எங்கட எதிர்க்கட்சித் தலைவர் அண்டை நாட்டுக்குப் போயிருந்த வேளை தன்ர இராஜதந்திரத்தைக் காட்டியிருக்கிறாரே....*

**மன் :-** அவரைச் சொல்லிக் குற்றமில்லை. எதிர்க்கட்சியா யார் இருந்தாலும் இதத்தான் செய்வினம். அது சம்பிரதாயங்களில ஒண்டாகிப் போச்சு. ஆனாலும் தான் ரொம்பவும் சமாதானத்துக்காக உழைச்சவராகக் காட்ட எடுத்த முயற்சி ஜஸ்ட் ஓவர்...இவரிட்ட வாங்கித் திண்டதுகள் இப்ப சொல்லினம் 'ஐ.தே.க.வுக்கு நல்ல அரசாங்கமாகவும் இருக்கத் தெரியேல்லையாம்; நல்ல எதிர்க்கட்சியாவும் இருக்கத் தெரியல்லையாம். இதுதான்ராப்பா உலகம்.....

**மன்னவரும் சின்னவரும்**

# சிந்தனைக் கதவுகளை மூடாதீர்!


மனதில் சோர்வு, தாழ்வு மனப் பான்மை போன்றவை தலைதூக்கும் போதெல்லாம் அதை மறைக்க, "நான் ஜெயிக்கப் பிறந்தவன்...நான் சாதிக்கப் பிறந்தவன்...."என்று நமக்கு நாமே சொல்லி உற்சாகப்படுத்திக்கொள்வது அப்போதைக்குப் பலன் கொடுக்கலாம். ஆனால், இந்த "பாஸிட்டிவ் திங்கிங்" அதிக நாளைக்கு உதவாது.

"தீய எண்ணங்கள் எழும்போது 'ராமா....ராமா...'என்று மனதுக்குள் சொல்லிக்கொள்ளுங்கள்" என்று ஒரு சிலர் யோசனை சொல்வார்கள். 'பாஸிட்டிவ் திங்கிங்' என்பது ஏறக்குறைய இதே அடிப்படைதான்! மனதில் சபலம் வரும்போது, அதை அடக்கத் தெய்வத்தின் மீது சிந்தனையைத் திருப்புவது அந்தச் சமயம் பலன் தரும். ஆனால், அதே தீய எண்ணம் அடுத்த நாளோ, அடுத்த வாரமோ மீண்டும் தலைதூக்குமே...? அப்போதும் கடவுள் பேரைச் சொல்லித்தான் சபலத்தை அடக்க வேண்டுமா...?

வீடு முழுவதும் துர்நாற்றம். வீட்டின் ஒரு மூலையில் எலி ஒன்று செத்துக் கிடக்கிறது. அது எங்கே என்று தேடிக் கண்டுபிடித்து எடுத்து வெளியே தூக்கிப் போட நமக்குப் பொறுமை இல்லை! ஆனால், துர்நாற்றத்தை மறைக்கக் கட்டுக்கட்டாக ஊதுவத்தி கொளுத்தி வைக்கிறோம். கொஞ்ச நேரத்துக்கு வேண்டுமானால் செத்த எலியின் நாற்றத்தை அது மறைத்துவிடும். ஆனால், வத்தி எரிந்து முடிந்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் நாற்றம் மீண்டும் குடலைப் பிடுங்கத் துவங்கிவிடுமே!

'பாஸிட்டிவ் திங்கிங்'கும் இது மாதிரித் தான்! சரி...'பாஸிட்டிவ் திங்கிங்'குக்கு மாற்று இருக்கிறதா....? இருக்கிறது! அதற்குப் பெயர்தான் Authentic thinking!

நீங்கள் மிகவும் துன்பத்தில் இருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். 'ஐயையோ! நான் படும் துன்பத்தைச் சுற்றியே என் சிந்தனை சுழல்கிறதே.....'என்று வெறுப்படைந்து, 'இல்லை! நான் மகிழ்ச்சியோடுதான் இருக்கிறேன்' என்று 'பாஸிட்டிவ் திங்கிங்' என்ற சித்தாந்தத்தின்படி மாற்றுச் சிந்தனையைத் திணிக்க நீங்கள் முயற்சி செய்தால் மனதுக்குள் ஒரு போராட்டம் தான் உருவாகும். அதற்குப் பதிலாக, உங்களின் சிந்தனையை நீங்களே சற்றுத் தள்ளி நின்று கவனிக்க ஆரம்பியுங்கள்!



"இது கெட்ட சிந்தனை," "இது நல்ல சிந்தனை" என்பது மாதிரி சிந்தனைக்கு லேபிள் குத்தாமல், உங்களின் சிந்தனை மீதே வெறுப்புக் காட்டாமல் நடுநிலையோடு கவனியுங்கள்.

துக்கமான சிந்தனையோ, சபலமான சிந்தனையோ அல்லது மகிழ்ச்சியான சிந்தனையோ...அதை நீங்களே விலகி நின்று பார்க்கும்போது, உங்களுக்குள்ளே 'புரிந்துகொள்ளுதல்' நடக்கும்.

இது போன்ற மனநிலையை எய்திவிட்டால் துன்பம், மகிழ்ச்சி இந்த இரண்டுமே ஒன்றுதான். மகிழ்ச்சி எப்படி ஓர் அநுபவமோ, அதே போல் துயரமும் ஓர் அநுபவமே! ஆனால், மனதிலே அமைதியும் தெளிவும் இல்லாத மனிதர்களுக்கு மகிழ்ச்சிகூடச் சோகமானதாகப் போய்விடும்.

அவர் நடுத்தரப் பிரிவைச் சேர்ந்தவர். அவருக்கு 'ஆறு பெண்கள். எல்லோருமே கல்யாண வயதை அடைந்தவர்கள். ஆறு பெண்களுக்கும் எப்படித் திருமணம் செய்து வைப்பது....?' என்று கவலைப்பட்டுக் கவலைப்பட்டே அவருக்கு ஒரு நாள் மாரடைப்பு வந்துவிடுகிறது. அவரை மருத்துவ மனையில் சேர்க்கிறார்கள். அந்த நேரம் பார்த்து, அவர் வாங்கி வைத்திருந்த ஒரு பரிசுச் சீட்டுக்குப் பத்து இலட்ச ரூபாய் விழுகிறது. 'இந்த மகிழ்ச்சியான செய்தியை அவரிடம் சொன்னால், அவருக்கு மீண்டும் மாரடைப்பு வந்துவிடுமோ...?' என்று பயந்த மனைவி, டாக்டரைவிட்டே இந்தச் செய்தியைத் தன் கணவரிடம் பதமாகச் சொல்லச் சொல்கிறாள்.

டாக்டர், மனோதத்துவ முறையில் காஷுவலாக அவளது கணவரிடம் பேச்சை ஆரம்பிக்கிறார்.

"உங்களுக்கு லாட்டரியில் ஒரு இலட்சம் பரிசு விழுந்தால் என்ன செய்வீர்கள்...?"

"நான் என் மூத்த பெண்ணுக்குத் திருமணம் செய்துவிடுவேன்...."

"சரி, இரண்டு லட்சம் விழுந்தால்....?"

"இரண்டாவது பெண்ணுக்கும் கல்யாணம் முடித்துவிடுவேன்..."

"சரி....பத்து லட்சம் விழுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்!"

"எனக்கெல்லாம் எங்கே டாக்டர் பத்து இலட்சம் விழும்....? அப்படி ஒருவேளை விழுந்தால், சத்தியமாக உங்களுக்கு இரண்டு இலட்சம் தந்துவிடுவேன்."

எதிர்பாராத இந்த இன்ப அதிர்ச்சியில் டாக்டருக்கு ஹார்ட் அட்டாக் வந்து இறந்துவிட்டார்.

மகிழ்ச்சி எப்படி ஒரு சுவையோ, அதே மாதிரி துயரமும் ஒரு சுவை. இந்தச் சித்தாந்தத்தை ஏற்றுக்கொள்வது கஷ்டமாகக்கூட இருக்கலாம்! நான் சிறுவனாக இருந்தபோது என் அம்மா, பாகற்காயை விரும்பிச் சாப்பிடுவார். அப்போது, கசப்பான ஒரு பொருளை அம்மா எப்படி இரசித்துச் சாப்பிடுகிறார் என்று எனக்கு ஒரே குழப்பம்....ஆனால், மனதுக்குப் பிடித்துவிட்டால் இனிப்பு என்பது எப்படி ஒரு சுவையோ, அதே போல கசப்பும் இரசிக்கக்கூடிய ஒரு சுவைதான் என்பதை உணர்ந்துகொண்டேன்.

சிறுபிள்ளையாக இருக்கும்போது, இனிப்பு ஒன்றுதான் சுவை. கசப்பு, துவர்ப்பு, புளிப்பு எல்லாம் சுவை இல்லை, என்று நமக்கு நாமே முடிவெடுத்துக் கொண்டு, சிந்தனையின் கதவுகளை மற்ற சுவைகளுக்கு இடம் தராமல் எப்படி மூடிவிடுகிறோமோ, அதே மாதிரிதான் இந்த விஷயமும். மகிழ்ச்சி மட்டும்தான் நல்ல உணர்ச்சி, மற்றது எல்லாம் வெறுக்கத் தக்க உணர்ச்சிகள் என்று எண்ணி, வாழ்க்கையில் நாம் அநேக உணர்ச்சிகளுக்குக் கதவைத் திறப்பதில்லை.

இப்படி எந்தச் சிறையிலும் அடைபடாமல் தள்ளிநின்று சிந்தனையைக் கவனிக்கும்போது, மனது தானாகவே அமைதி அடையும்! திரைகள் விலகும் உண்மைகள் புரியும்! வாழ்க்கை அழகாக, அற்புதமானதாக - ஒரு மலரைப் போல மௌனமாக, மென்மையாக விரியும்.

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள்
சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள்
அடங்கிய இப் போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு
பரிசுகளையும், பாராட்டுக்களையும்
பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.90க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

நா. அனோஜினி, 209, மார்கண்டு வீதி, பாண்டியிருப்பு -01, கல்முனை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. எம்.ஜெ.ஸஹ்மி, 125, சஙகம, சீனக்குடா.
2. இஷாரா பேகம் ஜெமீல், 390 A, செமனரிவத்த வீதி, தென்னக்கும்பர, கண்டி.
3. ஜெ. ரஞ்சிதமலர், ப.நோ.கூ. சங்கம், சூடுவெந்தபுலம், பாவற்குளம்.
4. எஸ் ஜெயச்சந்திரராசா, இராசேந்திரம் குளம், வவுனியா.
5. எஸ். நிவேதா, கண்டி வீதி, குருநாகல்.
6. ம.இ. சிலுவைதாஸ், பள்ளிமுனை, மன்னார்.
7. எஸ். சாரங்கன், மேபீல்ட் லேன், கொழும்பு-13.
8. த. திவ்யா, புதிய தெரு, உப்புக்குளம், மன்னார்.
9. மா. வித்தியா, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
10. ஜெ. ஜெமீலா, முதலைப்பள்ளி, புத்தளம்.

## குறுக்கெழுத்துப் போட்டி 92

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | | 7 | | 8 |
| 9 | 10 | 11 | | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 |

### இடமிருந்து வலம்

1. மரக்கலத்தை நிறுத்திவைக்கும் கருவி.

9. பண்

13. நம் நாட்டின் மத்திய பிரதேசத்தில் அதிகமாயுள்ளது (குழம்பியுள்ளது).

18. மன்மதன் மனைவி (திரும்பியுள்ளது).

20. இரவில் மட்டுமே பார்க்கக் கூடியது.

22. சிரத்தை (குழம்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

1. சக்தி வழிபாட்டுக்கு மதிப்பளிக்கும் விழாக் காலம்.

3. சாரணர் பாசறைகளின்போது இதனை அமைத்து இருப்பிடமாகப் பயன்படுத்துவர் (குழம்பியுள்ளது).

5. முற்றுமுழுதான நிறைவு (தலைகீழாகவுள்ளது)

10. கொன்றையை இப்படியும் சொல்லாம் (குழம்பியுள்ளது).

16. இந்த நோய்க்கு மொசுமொசுக்கையை உணவில் சேர்த்தால் பயனடையலாம். (தலைகீழாயுள்ளது)

## குறுக்கெழுத்துப் போட்டி 90 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 லோ | 2 தை | 3 ல | 4 ஸ் | 5 சு |
| 6 றா | 7 ஸா | | | 8 ஸ் |
| 9 ட் | | 10 ண | | 11 ல |
| 12 உ | 13 ம | 14 ம் | 15 ண் | 16 ல |
| 17 ம் | 18 ர | 19 ர | 20 கா | 21 வி |
| | 22 ம் | 23 க | 24 டு | 25 க |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 26.10.2004 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

**குறுக்கெழுத்துப் போட்டி இல-92**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ. இல. - 1772,**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.


ராதா ரெக்ஸ்ரைல்ஸின்
வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

RATHAA TEXTILE
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

66

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
தொழில்: ..........................
கையொப்பம்: ..................

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி:
26-10-2004

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.


**இந்த வாரம் யாருக்கு சேலை?**
**திருநெல்வேலி வாசகிக்கு அதிர்ஷ்டம்! 64**

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**து. சிவபாக்கியம்.**
கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்புகொண்டு பரிசினைப் பெறலாம்.

## இவ்வாரச் சிறு கதைகள்

# மனசே......மனசே!

சற்றுமுன் தபால்காரன் கொடுத்துவிட்டுப்போன அந்தக் கடிதம் சந்தோசத்தைவிட, அதிர்ச்சியையே ஏற்படுத்தியிருந்தது அருணுக்கு. ஒருவேளை ஒருவாரத்திற்கு முன்பு அக்கடிதம் கிடைத்திருந்தால் அவன் மிகவும் மகிழ்ந்திருப்பான்.

"என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் அருண்" என்று தனது கடிதத்தை ஆரம்பித்திருந்தாள் திவ்யா. அதிர்ச்சியாக இருந்தாலும் மீண்டும் மீண்டும் கடிதத்தை வாசித்தான் அருண்.

"என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் அருண். உங்களது அன்பையும், காதலையும் இப்போதுதான் நான் உணர்கிறேன். நீங்கள் பல தடவைகள் என்னைச் சுற்றி வந்த போதும் நான் உங்களைக் கண்டுகொள்ளவேயில்லை. அதற்காக மன்னிக்கவும். நான் இப்போது உங்களை மனதார விரும்புகிறேன். தயவு செய்து என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்" திவ்யா. கடிதத்தை வாசித்த அருணுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. "எப்படி திவ்யா திடீரென்று மாறினாள்? இவ்வளவு நாளும் இல்லாத காதல் இப்போது எங்கிருந்து வந்தது?" நீண்ட நேரம் சிந்தித்த அருண் இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தான்.

'உடனே கவிதாவைச் சந்திச்சு எல்லா உண்மைகளையும் சொல்லவேணும். அவள் மனசு வைத்தால் எல்லாம் நல்லபடி நடக்கும். இதைவிட வேறு வழி இல்லை.' என மனதுக்குள் எண்ணியபடி தொலைபேசி மூலம் கவிதாவுடன் தொடர்புகொண்டான்.

"ஹலோ, கவிதா, நான் உடனே உங்களப் பார்க்க வேணும்."

"அதுக்கென்ன, பின்னேரம் வீட்ட வாங்க!" மறுமுனையில் பதிலளித்தாள் கவிதா.

"அன்று மாலை கவிதா வீட்டுக்குச் சென்ற அருண், "கவிதா, ஒரு முக்கிய விசயம்...!" என்று ஆரம்பித்தான். அவனை இடைமறித்த கவிதா, "அருண், கொஞ்சம் பொறுங்க, இவ்வளவு வேர்த்துக் களைச்சுப் போய் இருக்கிறீங்க, நான் போய் குடிக்க ஏதாவது கொண்டுவாறன்" என்றவள் சமையலறைப் பக்கமாகப் போனாள்.

யாரிந்த கவிதா? "அருண் அவளிடம் சொல்லப் போகும் விடயம் என்ன? முப்பது வயதை நெருங்கும் அருண், பெற்றோரின் நெருக்குதலால் வேண்டா வெறுப்பாக கவிதாவை திருமணம் செய்ய ஒப்புக்கொண்டான். கடந்த வாரம்தான் கவிதாவின் வீட்டுக்கு வந்து பெண்பார்த்து விட்டுச் சென்றார்கள்.

தன்னுடன் ஒன்றாகப் படித்த திவ்யாவை ஒருதலையாகக் காதலித்த அருணால் அவளை அவ்வளவு சீக்கிரம் மறக்க முடியவில்லை. பல தடவைகள் தனது காதலை அருண் வெளிப்படுத்தியபோதும் அவனைத் தட்டிக் கழித்து வந்தாள் திவ்யா. அதனால் மனமுடைந்து போய் தனக்கு திருமணமே வேண்டாமென்றிருந்தான் அருண். தங்களது ஒரே ஒரு மகனுக்கு திருமணம் செய்துபார்க்க ஆசைப்பட்ட அவனது பெற்றோர்கள், திருமணத்திற்கு ஒத்துக்கொள்ளாவிட்டால் தங்களை உயிருடன் பார்க்க முடியாது



எனப் பெரியதொரு குண்டைத் தூக்கிப் போடவே, வேறு வழியின்றி திருமணத்திற்குச் சம்மதித்தான் அருண். அவனுக்குப் பெற்றோர் பார்த்த பெண்தான் கவிதா.

"என்ன அருண், இவ்வளவு யோசனை?" சிரித்தவாறே கேட்டாள் கவிதா.

"ஓ.....ஒண்டுமில்லை..." சமாளித்த அருண், கவிதா கொடுத்த கூல் ட்ரிங்சை வேகமாக வாங்கி மடக்கென்று குடித்தான்.

"என்ன...முக்கிய விசயம்?" ஆவலோடு கேட்டாள் கவிதா.

தொண்டையைச் செருமியவாறே அருண், "கவிதா, ஐ ஆம் வெரி சொறி. நான் சொல்லப் போற விசயம் உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். நான் இந்தக் கல்யாணத்துக்கு முழுமனதோட சம்மதிக்கவில்லை. ஏதோ அம்மா, அப்பா வற்புறுத்திச்சினமே எண்டு ஒத்துக்கொண்டன். நான்...நா.....ன்...திவ்யா எண்ட பிள்ளைய விரும்புறன். அவா என்னோட படிச்சவா, இவ்வளவு நாளும் என்ர காதல அவா ஏற்றுக் கொள்ளேல ஆனா இப்ப அவா என்னை காதலிக்கிறாவாம். என்னால திவ்யாவ மறக்க ஏலாது. அதால நீங்க மனசு வச்சு எங்கள் ரெண்டு பேரையும் சேர்த்து வைக்க வேணும். அதனால என்ர அம்மா, அப்பாட்ட வந்து என்னை உங்களுக்குப் பிடிக்கேலை எண்டு சொல்லுங்கோ. இது நீங்கள் எனக்குச் செய்யிற மிகப் பெரிய உதவியாக இருக்கும்."

ஒரே மூச்சில் கூறி முடித்த அருணுக்கு, தனது வேண்டுகோளை கவிதா ஏற்பாளா, நிராகரிப்பாளா என்று தவிப்பாய் இருந்தது. சிறிது நேரம் மௌனமாய் இருந்த கவிதா, "அருண், நீங்க சொன்னபடியே செய்யிறன். ஆனா நீங்களும் என்ர அம்மா, அப்பாட்ட என்னை உங்களுக்குப் பிடிக்கேலை எண்டு சொல்ல வேணும். சரியா?" என்றாள்.

"ஏன்?" என்று கேட்பதைப் போல அவளை ஏறிட்டு நோக்கினான் அருண். அவனது பார்வையின் அர்த்தத்தை உணர்ந்துகொண்ட கவிதா,

"அருண், நான் கரன் எண்ட ஒருத்தரை விரும்புறன். அது அம்மா - அப்பாவுக்குத் தெரியாது. என்னால கரனை மறக்க ஏலாது. நான் அவரோடதான் வாழுவன். எங்கள் இரண்டு பேரையும் நீங்கள்தான் சேர்த்து வைக்க வேணும்" அமைதியாகக் கூறிமுடித்தாள்.

அருணுக்கு சந்தோசம் தாங்க முடியவில்லை. கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தமாதிரி இருந்தது அவனுக்கு! கவிதாவுக்கும் அதே நிலைதான். அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அர்த்தமுடன் பார்த்து புன்னகைத்துக் கொண்டார்கள்.

**(யாவும் கற்பனை)**


**-கே.ஆர்.ரஜீவன், வவுனியா.**

# என்ன சொல்லப் போகிறாய்?

"மஞ்சுளா நீ என்ன சொல்லுறே....?"

"உண்மையைத்தான் சொல்லுறேன் ரவி...என்னோட தோழி பிரமிளா உங்களை உயிருக்குயிரா நேசிக்கிறா. அவ எனக்கு தோழி மட்டுமில்ல. என் கஷ்ட நஷ்டங்கள்ல தோள் குடுத்தவ. நாலு தங்கச்சி, ஒரு அக்கான்னு பெரிய குடும்பம் என்னோடது. இன்னைக்கி என் அக்கா, ரெண்டு தங்கச்சின்னு மூனுபேரு மணம் முடிச்சி மனநிறைவோட இருக்காங்க. எனக்கு இன்னமும் கடமையிருக்கு. இந்த நிலமையில..... காதல் கல்யாணம்னு நான் என் வழியில போனா மற்ற தங்கச்சிமாருங்களோட நிலமை என்னாகிறது...... நான் மட்டும்தான் சம்பாதிக்கிறேன். ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர் அப்பா.....நோயாளி அம்மா....நங்கூரமா கப்பலை நிலையா நிறுத்தி வைக்கிற நான் தனி வழி போனா என்னாகும்.... பிரமிளாவை அடிக்கடி என்னோட பார்த்திருப்பீங்க. அவ அழகானவள் மட்டுமில்லை. அடக்கமானவள். உங்களுக்கு சரியான பொருத்தமானவள்....இதுவரைக்கும் நான் எனக்காக யார் கிட்டேயும் எதுவும் கேட்டதில்லை. பிரமிளாவுக்காக உங்க கிட்ட தூது வந்திருக்கேன். என்னோட அன்பு வேண்டுகோளை நிச்சயமாக நிராகரிக்க மாட்டீங்கன்னு நினைக்கிறேன்...."

அவள் சொல்லி முடிக்கவும் ரவி என்னவோ சொல்ல வாயெடுத்தான். ஆனால் மஞ்சுளா விருட்டென அந்த இடத்தைவிட்டு விரைவாக நடந்து அந்த பஸ்ஸில் ஏறினாள். காலியாக விருந்த இருக்கையில் அமர்ந்தாள். பஸ் ஓடியது. அவள் கண்களிலிருந்து வடிந்த கண்ணீரை அவளால் கட்டுப்படுத்தமுடியவில்லை. உண்மையிலேயே ரவியை அவள் உயிருக்குயிராக நேசித்தாள். ஏற்கனவே மற்றொரு தங்கைக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்ட நிலையில் அடுத்து ரவியை கரம் பற்ற நினைத்திருந்தாள். ஆனால், போன வாரம் அவளிடம் மனம் விட்டுப் பேசிய அவள் உயிர்த்தோழியும் அவளுடன் ஒன்றாக வேலை செய்பவளுமான பிரமிளா தன் மனதிலிருந்ததைக் கொட்டிவிட்டாள். ரவியை



-பாலா.சங்குபிள்ளை, ஹட்டன்

அவள் உயிருக்குயிராக நேசிக்கிறாளாம். அதற்கு மஞ்சுளாவிடம் உதவி கேட்டாள். மஞ்சுளா மனதில் பெரும் போராட்டமே ஏற்பட்டது. காதலா? நட்பா? என்ற நிலை வந்தபோது நட்பு வென்றது.

அடுத்த நாள் அவள் விலாசத்துக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. ரவிதான் எழுதியிருந்தான். நடுங்கும் கைகளால் கடிதத்தைப் பிரித்து வாசித்தாள்.

"அன்பான மஞ்சுளா, என்ன எழுதுவது, எதை, எப்படி எழுதுவதென்று தெரியவில்லை. உன்னை முதன் முதலாக எப்போது பார்த்தேனோ அன்றே நான் உன் வசமானேன். கடமைகளை முடித்துவிட்டு நீ எப்போது வருகிறாயோ அன்றே நான் உன்னைக் கைப்பிடிக்கக் காத்திருந்தேன். ஆனால் உன் தோழிக்காக உன் காதலை கை நழுவவிட்டு, காத்திருந்த எனக்கு கை காட்டிவிட்டு உன்னால் எப்படிப் போகமுடிந்தது? என் இதயத்தில் முளைத்து வேர் விட்ட காதலை என்னால் வேரோடு வெட்டிச் சாய்க்க முடியாது. நீயில்லாத ஒரு வாழ்க்கையை என்னால் கற்பனை செய்தும் பார்க்க முடியவில்லை. நான் இந்த ஊரைவிட்டே போகிறேன். உன் படம் பதிந்த என் உள்ளத்தில் இன்னொருத்தி நிச்சயமாக தடம் பதிக்க முடியாது. தயவு செய்து என்னை மன்னித்துவிடு மஞ்சுளா...."

கடிதத்தை வாசித்த மஞ்சுளாவினால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவள் சட்டென காரியாலய குளியலறைக்குச் சென்றாள். கதவை மூடினாள். ஷவரை திறந்து விட்டாள். 'ஓ' வென அழுதாள். அவள் அழுகை ஓய பத்து நிமிடங்கள் சென்றன. அவள் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். அப்போது வெளியே அவளுக்காகப் பிரமிளா காத்திருந்தாள். அவள் வெளியே வந்தாள்.

"மஞ்சுளா.....உன்னைப் பார்க்க ரெண்டு மூணுநாளா முயற்சி செஞ்சேன். ஆனா முடியாம போயிடுச்சி....என் காதல் சக்ஸஸ் ஆயிடுச்சி. அவரும் என்னை விரும்பியிருக்காரு. ஆனா நேரடியா சொல்ல பயம். நான் உன்கிட்ட சொன்ன அடுத்த நாளே அவர் எனக்கு கடிதம் எழுதியிருந்தாரு......"

மஞ்சுளா அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தாள்.... "நீ.....நீ.....என்ன சொல்லுறே....ரவியா கடிதம் எழுதினார்?"

"ஓ! நான் ஒரு முட்டாள். ரவின்னு மொட்டையாத்தான் உன்கிட்டே சொல்லியிருக்கேன். உன்னவர் பேரும் ரவி இல்லையா! நான் சொன்னது நாம் ரெண்டு பேரும் அடிக்கடி போவோமே வங்கி. அங்கே காசாளரா இருக்காரே ரவிகாந்த். அவரைத்தான் சொன்னேன். அவர் என்னைவிட உன்கிட்டத்தான் ரொம்ப சகஜமா பழகுவாரு. அதுனாலத்தான் உன்னை தூது போகச் சொன்னேன்...... எப்படியோ என் காதல் ஒரு மாதிரி வெற்றியடைஞ்சிடுச்சி. உனக்கு சந்தோஷம் தானே...."

பிரமிளா மகிழ்ச்சியுடன், மனதில் குதூகலத்துடன் பேசிக்கொண்டே போக, மஞ்சுளா மனதில் விழுந்த இடியினால் எதுவுமே பேச முடியாதவளாக அடியற்ற மரம் போல கீழே விழுந்தாள்.

(யாவும் கறபனை)

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

# சிந்தித்துப் பார்க்க...

## மனம் தூய்மையானால் வார்த்தை இனிமையாகும்!

நல்ல புத்தகங்கள் நல்ல துணைவர்கள் போன்றவை. ஒழுக்கக் கேடான இலக்கியங்கள் மனதை மாசுபடுத்தித் தவறான பாதைக்கு இட்டுச் செல்லும்.

எத்தகைய பிரச்சினைகள் ஆயினும் குழப்பம் அடையாதீர்கள். நீங்கள் சித்தியடைய வேண்டிய பரீட்சைகள் என எண்ணி, அவற்றுக்கு முகங்கொடுங்கள்.

வாழ்க்கையைப் பாழாக்கியவை "நான்", "எனது", "நீர்", "உமது" என்பவையே அவற்றை மறந்துவிடுங்கள்.

ஞானம்தான் செல்வம் என்றால் உங்களைக் கேட்டுப் பாருங்கள். "நான் எவ்வளவு செல்வந்தன்?"

உங்களுடைய வாயிலிருந்து கீழ்த்தரமான வார்த்தைகள் வந்தால் உங்களுடைய மனம் எப்படிப்பட்டதாக இருக்கும்?

உங்களை மதிப்பிடுவது உங்கள் செயல்களாலேயேயன்றி, நீங்கள் பேசும் மென்மையான வார்த்தைகளாலல்ல.

இறப்பதற்குப் பயன்படுவதன் அர்த்தம் நீங்கள் வாழ்க்கையின் முக்கியத்துவத்தை விளங்கவில்லை என்பதாகும்.

உங்களுடைய உரிமைகள் பற்றி மட்டுமே அக்கறைப்படாதீர்கள். நீங்கள் சரியா, பிழையா என்பது பற்றியும் ஆலோசியுங்கள்.

லௌகீக ஞானம் அதிகம் ஆக ஆக ஆணவம் வளர்கின்றது. ஆன்மீகக் கல்வி மென்மேலும் பணிவைத் தருகின்றது.

பிரச்சினை பற்றி நாம் எவ்வளவு கடுமையாக வருந்தினாலும் வருந்திய மனம் ஒரு தீர்வை அடையுமா?

**"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....**

# இலக்கிய நயம்

## "ஏதோ ஒரு மயக்கம்! அது எப்படி வந்தது எனக்கும்!!"

மாலை வேளை மிக இரம்மியமாக விருந்தது. கதிரவன் சிவந்த பெரும் பழமாகிக் கடலில் மூழ்கச் சமயம் பார்த்திருந்தான். அவனை விழுங்கக் காத்து வாய்விரித்து அகன்று படுத்திருப்பது போல தூரத்தில் தெரிந்தது மலைத்தொடர். சூரியனை வெளியே விடுவதும் உள்ளே அடைத்துப் போடுவதும் இந்த மலைகள்தானோ என்று தோன்றியது தாரிணிக்கு. அவை இன்னும் கொஞ்சம் வளர்ந்திருந்தால் வானத்தை முட்டித் தள்ளிவிட்டிருக்கும் என்றும் நினைத்துக் கொண்டாள்.

குருவிகள் படை படையாகப் பறந்து கடந்தன. காற்றின் கைங்கரியத்தில், பாதம் உணராப் புதுமையோடிருந்த செம்மண் பாதையில் கால்கள் பதித்து மெல்ல நடந்தாள் தாரிணி. நன்கு அரைக்கப்புட்ட அரிசி மாவில் கால் பதிந்தது போல மெத்தென்றுணர்ந்தது உள்ளங்கால்.

பாதையோரங்களில் நிறம் நிறமான சிறு பூக்கள். தோட்டத்தை அடைந்தாள். கண்களில் பசுமை வெள்ளமெனப் பொங்கியது. தொடு வானத்திற்கருகே கோடிழுத்தாற்போல் தென்னை மர வரிசை தெரிந்தது.

அருகே முல்லைக் கொடியின் மொட்டுக்கள் இச்சையின் பூடகமான சமிக்ஞைகள் போல் திறக்கத் தொடங்கியிருந்தன. மெல்லிய காற்றில் வாசனையாகத் தம் மகிழ்வைத் தூதனுப்பின,

தாரிணி ஆழமாக மூச்சிழுத்தாள். மகிழ்ச்சி வெள்ளம் உள்ளே புரண்டது. வெளியே தோன்றாத ஒரு புன்சிரிப்பு அவள் முகத்தைப் பிரகாசமடையச் செய்திருந்தது. ஒரு பாடலை முணுமுணுத்தபடி தோட்டத்தினுள் நுழைந்தாள். மாலை நேரக் குளிர் அவளுடன் சிநேகபூர்வமாக கைகோர்த்தபடி நடந்தது.

"அவனை மறுபடியும் நான் பார்ப்பேனா?" கள்ளத்தனமான ஏக்கம் ஒன்று மனதின் மேற்பரப்பிற்கு வந்ததைக் கடிந்துகொள்ள விரும்பினாள். ஆனால், அதையே தான் விரும்புவதாகவும் அறிந்து ஒருவித சலிப்புக் கொண்டாள். வேட்கையின் இரகசிய வேர்கள் ஆழத்தில் புதையுண்டிருந்து சூழலின் இதத்தில் மெல்லத் துளிர்களை நீட்டுவதை உணர்ந்தாள்.

தருவது
முழடில்யன்

'தோழிகள் எல்லோரும் தானே நின்றிருந்தார்கள்! எல்லோரும்தானே அவனைப் பார்த்தார்கள்...என்னிடம் மட்டும் ஏன் அவன் நினைவு வந்து வந்து துன்பப்படுத்துகிறது?......இது துன்பமா? இன்பமா?'

தாரிணி போய் ஒரு மரத்தில் சாய்ந்து நின்றுகொண்டாள். கண்களை மூடி, சுவாசத்தால் சூழலின் இதத்தை உள்ளிழுத்து நிரப்பினாள்.

முகம் மகிழ்வின் போதையில் நனைந்திருந்தது.

இமைகளை மூடியிருந்தபோதும், மனம் அவனது ஒவ்வொரு அணுவையும் துல்லிய படங்களாகக் காண்பித்துக்கொண்டிருந்தத.

ஒரு இசைப் பொழிவின் ஓய்வு போல நிசப்தத்தின் ஒலி தவிர வேறெதுவும் கேட்கவில்லை.

தாரிணிக்கு அவன் அன்று சிரித்த சத்தம் காதில் வந்து நிறைந்தது. சிரிப்பென்னவோ மகிழ்வின் - உற்சாகத்தின் அட்டகாசத்தைப் பிரகடனப்படுத்தினாலும், அந்தக் கண்களில் சொட்டிய விஷமம்!

அத்தனை தோழிகளும்தான் அவனைப் பார்த்தார்கள். அவன் கம்பீரம் பற்றி, மயக்கும் சிரிப்பு பற்றி, கிண்டல் பார்வை பற்றி என்னென்னவோ சொல்லிப் பரிமாறிக் கொண்டார்கள்.

ஆனால், அவர்களெல்லோரும் அடுத்த நாளே அவனை மறந்துவிட்டார்கள். நான் மட்டும் ஏன் இப்படி? அவன் என்னை மட்டும் ஏன் தொந்தரவு செய்கிறான்?



இத்தனைக்கும் அவன் என்னைப் பாராதது போலவே நடந்துகொண்டான். எதிர்ப்பாலினர் மீது இயல்பாக ஏற்படும் ஈர்ப்பில் வீழ்ந்து வெறிக்காதவன் போல நாகரிகமாகவே நடந்துகொண்டான்.

அவன் போகும் ஊரைச் சொல்லி, பாதை இதுதானா என்று பொதுவாக எங்கள் அனைவரிடமும் பேசுவது போல வினயமாகக் கேட்டான்.

எல்லோரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டோம். இதுபோல் அந்நிய ஆடவர்களுடன் சகஜமாகப் பேசுமளவுக்கு எங்கள் பழக்கம் இருக்கவில்லை.

அவன் போக வேண்டிய பாதை அதுவல்ல என்றும், சரியான வழியை விவரித்துச் சொல்ல வேண்டும் என்றும் விருப்பம் இருந்தது. பேச நினைத்த சொற்களைச் சொல்ல நா ஒத்துழைக்கவில்லை.

ஏதோ சொல்ல முற்பட்டு முடியாமல் மோகனப் புன்முறுவலுடன் முகம் தாழ்த்திக் கொண்ட எங்கள் எல்லோரையும் அவன் சங்கடத்துடன் பார்த்தான்.

எங்களிடையே பார்வைகளும் புன்னகைகளுமாக மௌனம்தான் கடந்தது.

பொறுக்க முடியாமல், "நான் இவ்வழியே போகலாமா?" என்று அவன் மீண்டும் கேட்டான்.

அவனது அப்பாவி முகத்துடனான கேள்வியின் காரணமாகவும், நா புரள மறுத்ததால் அதற்குப் பதில் சொல்லாமல் நின்றிருந்த சங்கடம் காரணமாகவும் எங்கள் கன்னங்களில் சிவப்பேறியதுதான் மிச்சம்.

"யாராவது இத்தனை சிலைகளைச் செய்து, இங்கே வைத்திருக்கிறார்களா!" என்று ஆச்சரியத்துடன் அவன் தனக்குத்தானே கேட்டுக்கொண்டது கூட எங்களை அசைக்கவில்லை.

"சரி, போகவாவது எனக்கு வழியை விடுவீர்களா?" என்று உரத்துக் கேட்டான்.

அவசரமாக விலகி வழிவிட்டோம்.

"அப்பாடா, உயிருள்ள பெண்கள்தான்!" என்று புன்முறுவல் செய்தான்.

"நன்றி, நான் வேறு யாரும் விபரம் தெரிந்தவர்கள் சந்தித்தால் வழியைக் கேட்டுக் கொள்கிறேன்" என்று மீண்டும் ஒரு மயக்கும் புன்முறுவல் வீசிச் சென்றுவிட்டான்.

நாங்கள் அந்தப் புன்முறுவலிலிருந்து மீள முடியாமல் பல நிமிடங்கள் தவித்து நின்றிருந்தோம்.

எனக்கு அவனை நிமிர்ந்து பார்க்கவும் முடியவில்லை. மெல்ல எங்களை விட்டகன்ற அவன் காலடிகளே என் பார்வையில் தெரிந்தன. அவன் எடுத்து வைத்த அடிகளில் உண்டான ஓசை மட்டும் பிரமாண்டமாகி இதயத்தில் 'தட் தட்' என்று தாக்குவது போலிருந்தது. வேறு ஓசைகள் அனைத்தையும் அழித்துவிட்ட மயக்க நிலையை சிருஷ்டித்துவிட்டு அவன் போனான்.

இப்போதும் அந்த 'தட் தட்' இதயத்தில் கேட்டது. இலேசாக ஒருமுறை நடுங்கிய உடலை தாரிணி கைகளால் இறுக்கிக் கொண்டாள்.

தூரத்தில் வானம் ஒரு கருநீலத் திரையாகத் தெரிந்ததைப் பார்த்தாள். அந்தத் திரையும் நடுங்கியது. அந்த வானக் கரு நீலத்திற்குள் சென்று தன்னைக் கரைத்துக்கொண்டுவிட முடியாதா என்றெண்ணினாள். அந்தப் பிரமாண்ட கருமைக்குள் கரைந்து ஒன்றுமில்லாமல் ஆகிவிட வேண்டும். இரக்கமில்லாமல் நெஞ்சைப் பிசையும் இந்த நினைவுகளிலிருந்து காணாமல் போய்விட வேண்டும். யார் என்றே தெரியாத ஒருவனை நினைத்து என் கண்கள் ஏன் நீர் சொரிந்து துன்புறுகின்றன. எத்தனை பேர் அவனைப் பார்த்தார்கள். எனக்கு மட்டும் ஏன் இப்படி? இது என்ன?

*மலர்தார் மார்பன் நின்றோற்*
*கண்டோர் பலர்தில், வாழிதோழி*
*அவருள், ஆர்இருட் கங்குல்*
*அணையொடு பொருந்தி ஓர்யான்*
*ஆகுவது எவன்கொல் நீர்வார்*
*கண்ணொடு நெகிழ் தோளேனே!*
*(அகம் - 82 : 14-18)*

# சிந்தியா பதில்கள்

**சிந்தியா, கடவுள் இருக்கிறாரா, இல்லையா?**

-தி.கண்ணன், எருவில்.

இருக்கிறாரா, இல்லையா என்பதல்ல பிரச்சினை; அவர் நமக்கு வேண்டுமா, வேண்டாமா என்பதுதான்!

**புலிகள் இயக்கப் பொறுப்பாளர்களும் கூட்டமைப்பாரும் முஸ்லிம்கள் மீது திடீர்க் கரிசனம் கொண்டு பேசிவருவதைக் கவனித்தீர்களா? இது நாள்வரை(இடைக்கால வரைவிலும்) அலட்சியமாக இருந்துவிட்டு, இப்போது உருகி வழிய ஏதாவது விசேட காரணம் உண்டா?**

-எ.அகமது முகம்மது, காத்தான்குடி.

வெளிநாடுகளுக்குப் போயிருக்கும் குழுவினருக்கு, அங்கு ஏதேனும் வில்லங்கமான நெருக்குதல்கள் உண்டாச்சோ என்னவோ!..... வெளிநாட்டுக்காரருக்கு விளங்கப்படுத்தி விசயத்தை ஒப்பேற்றலாம் எண்டு வெளிக்கிட்டால் இதுதான் பிரச்சினை. ஜனநாயகம், நியாயம், மனித உரிமை, சமூக சமத்துவம் எண்டெல்லாம் எங்களுக்கே திருப்பிப் போட்டுக் கழுத்தை நெரிப்பினம். நாங்கள் பாதிக்கப்பட்டனாங்கள், தற்பாதுகாப்புக்குக் கொலையள் செய்யலாம், வெளியேற்றலாம் எண்டதை ஒத்துக்கொள்ளாயினம்... ஜனநாயகத் திமிர் அவைக்கு!

**வாழ்க்கையில் தோல்விகள் வரலாம். ஆனால் தோல்விகளே வாழ்க்கையானால்?**

கோபி பிரியா, வெலிமடை.

இந்திய கிரிக்கெட் அணியில் சேரலாம்!

**உண்மையான அன்பு எப்படி இருக்க வேண்டும்?**

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

'நான் உன் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேன். அதுபோல் நீ என் மீது அன்பாய் இல்லையே' என்று வியாபாரம் பேசாததாக இருக்க வேண்டும்.

**மாற்றுக் கருத்துடையவர்களைத் தமிழ் மக்கள் ஏற்கப் போவதில்லை என்கிறார்களே கூட்டமைப்பினர்! ஒட்டுமொத்த மக்களும் ஒன்று போல்தான் நினைக்க வேண்டும் என்று சொல்வது, கடைகெட்ட பாசிஸத்தனம் என்பதைக் கூட அறியாதவர்களா இவர்கள்?**

-எம்.குமார், வவுனியா.

பாவம், அப்படி எதையும் விவரமாய்ச் சிந்தித்து அறிந்துகொள்ள அவர்கள் விரும்புவதில்லை. சமூக இயக்கம் பற்றிப் படித்தறிந்தவர்களும் கூட, பிழையைப் பிழை என்று சொல்லும் நேர்மையுடனோ துணிவுடனோ இன்றில்லை.

மாற்றுக் கருத்துடையவர்களைத் தமிழ் மக்கள் ஏற்கிறார்களா, இல்லையா என்பது ஒரு பக்கமிருக்கட்டும். அவர்கள் இருக்கலாம் என்று நினைக்கிறார்களா அல்லது அழிக்கப்பட்டுவிட வேண்டும் என்று விரும்புகிறார்களா என்பதைக் கேட்டுப் பார்த்தால்....நம் குரூர முகம் இன்னும் அசிங்கமாக வெளிப்படும்!

**'செல்லமே' எப்படி?**

-ஆர்.உமா, கினலன் - எல்ல.

பரத்துக்கு திரையில் எதிர்காலம் இருக்கிறது. சுஜாதா தன் நாவல் சிறுகதைகளில் எழுதிய வசனங்களையே படங்களிலும் திரும்பப் போட்டு ஒப்பேற்ற ஆரம்பித்திருக்கிறார். அதிக படங்கள் ஒப்புக்கொள்வதை அவர் தவிர்ப்பது நல்லது.

**அதென்னது கண்சாத்திரக் கிறக்கம்? (சென்ற வாரப் பதில்)**

-எஸ்.எம்.அஹமட், ஏறாவூர்.

"கிறங்கடிக்கும் கண்ணைக் கொடு, நான் மதுவைத் தேடிப் போகமாட்டேன்" என்று சொன்ன அந்தக் கவிஞனின் சாத்திரம்!

**தமிழ் மக்களின் இன்றைய நிலைமைக்குப் பொருத்தமாய் கவிதை ஒன்று தர முடியுமா?**

-சந்தனம் தனபாலன், அக்கரபத்தனை.

எல்சல்வடோர் நாட்டுப் பாடல் ஒன்று :

எல்சல்வடோர் நாட்டுச் சிறுமி ஒருத்தி
சிறுத்தை ஒன்றின் மீதேறி
சவாரி போனாள்
சிறுமியின் முகத்தில் புன்னகை இருந்தது.
சவாரி முடிந்து திரும்பினர் இருவரும்
சிறுமி இருந்தாள் சிறுத்தையின் வயிற்றினுள்
சிறுத்தையின் முகத்தில் புன்னகை இருந்தது.



'செல்லமே'
ரீமாசென்

**கையெழுத்து நன்றாக இருந்தால் தலையெழுத்து நன்றாக இருக்காது என்கிறார்களே உண்மையா?**

-எம்.ஜனனி, கொட்டாஞ்சேனை.

கையால் எழுதுவதை முயன்றால் நன்றாக ஆக்கிக்கொள்ளலாம், தலையால் எழுதுவது எப்படியும் நன்றாக இருக்காதுதான்!

**கோயில் என்பது சரியா, கோவில் என்பது சரியா?**

-முஹமட் நபில், மீராவோடை - 04.

இரண்டுமே சரிதான்.

**வறுமையின் நிறம் சிவப்பு : செல்வத்தின் நிறம் கறுப்பா?**

-மணிவேல் ருத்ரா, சின்ன செல்வகந்த.

இருக்கலாம். அப்போதானே எல்லாரும் "கறுப்புத்தான் எனக்குப் புடிச்ச கலரு" என்று பாடிக்கொண்டிருக்கலாம்.

**ராஜீவ் காந்தி கொலை துன்பியல் சம்பவம்; வடபகுதி முஸ்லிம்களை வெளியேற்றியது துரதிர்ஷ்ட நிகழ்வு....எப்படி?**

-பி.பிரதீபன், தெஹிவளை.

தமிழ் மக்கள் மாட்டுப்பட்டிருப்பது துன்பத்தின் சகதி!

**சமீபத்தில் என்ன புத்தகம் வாசித்தீர்கள்?**

-செ.சுமதி, கோணப்பிட்டிய எஸ்டேட்.

உளவியல் மருத்துவர் மாத்ருபூதம் (அதுதான், விவேக்கின் லாட் லபக்கு தாஸ்!) தொலைக்காட்சியில் நடத்திய 'புதிரா புனிதமா' நிகழ்ச்சிக் கருத்துக்களைத் தொகுத்துப் போடப்பட்டிருக்கும் புத்தகம்.

சிந்தியா
பதில்கள்

செக்ஸ் பற்றிய பல்வேறு மூட நம்பிக்கைகளையும் மனத் தடைகளையும் உடைத்து, எளிமையாகப் புரிந்துகொள்ளும்படியாகச் சொல்லியிருக்கிறார். புத்தகத்தில் ஒரு பகுதி:

வாசகர் கேள்வி : எனக்குத் திருமணமாகி 10 ஆண்டுகள் ஆகிவிட்டன. என் மனைவிக்கு சுத்தமாகவே உடலுறவில் நாட்டம் இல்லை. நானும் மிகவும் பொறுமையாக இருந்து பார்த்துவிட்டு வேறு வழியில்லாமல், பணம் செலவழித்து விலைமாதரிடம் சென்று ஒருநாள் முழுவதும் சுமார் 7 தடவை உறவு கொண்டு திருப்தி அடைகிறேன். இதனால் என் மனைவி மீது மிகவும் வெறுப்பாகவே வருகிறது. நான் பாடுபட்டுச் சம்பாதிக்கும் பணம் 600 ரூபாய் வரை விரயம் ஆகின்றது. தயவு செய்து என் பிரச்சினைக்கு ஒரு வழி சொல்லவும்.

டாக்டர் பதில் : இது ரொம்ப ஆபத்தான விஷயம். என்னன்னா, இவர் 7 முறை ஒரு நாளைக்கு உடலுறவுகொள்ள மொத்தம் 600 ரூபாய்தான் செலவழிக்கிறார். அப்ப எந்த மாதிரி விலைமாதர்கிட்டே போவார். நிச்சயமாக எயிட்ஸ் மாதிரி வியாதி இருக்கிற லேடீஸ்கிட்டதான் போவார்னு நினைக்கிறேன். முதல்ல அவருடைய உடல் பாதுகாப்புக் கருதி இதை முதலில் நிறுத்தணும். இரண்டாவது, மனைவியின் மனதில் இடம் பிடிக்காதவராக இவர் இருக்கலாம். ஆர்வம் இல்லாமல் இருக்கிறதுக்கு என்ன காரணம்னு முதலில் மனைவிகிட்டயே கேட்டுத் தெரிஞ்சுக்கணும்...

ஒரு நாளைக்கு மட்டும் 7 முறை, கணக்குப் போட்ட தலை சுத்துது. இவர் ஆபீஸ் கீபீஸ் போறாரா இல்லையான்னு தெரியலை. 7 முறைன்னா, ஒரு விலைமாதர் கிட்டேயிருந்து பஸ்ஸைப் பிடித்து மற்றொரு விலைமாதர்கிட்டே போயிட்டு வர்றதுக்கே 7x2 =14 மணி நேரம் ஆகிவிடும். 8 மணி நேரம் தூங்கிவிடுவார். மீதி 2 மணி நேரம் ஏதோ பல்லு கில்லு விளக்குவார்னு நினைக்கிறேன். சாப்பிடறாரா இல்லையான்னு ரொம்ப சந்தேகமா இருக்குது. அதனால் இவருக்கு இவ்வளவு Obsession கூடாது. நான் சொல்றது இதுதான். செக்ஸ் ஒரு விஞ்ஞானபூர்வ விஷயம். கடவுள் அளித்த வரப்பிரசாதம். அதில் ஆசை இருக்கலாம். பேராசை இருக்கக் கூடாது. விருப்பம் இருக்கலாம், வெறி இருக்கக் கூடாது.

**யாரோ சிலர் கொலைகள் செய்கிறார்கள் என்பதற்காக, தமிழர்களாகிய அனைவரும் அந்தப் பழியை ஏற்க வேண்டுமா?**

-வி.சில்வெஸ்டர், மூதூர்.

இலட்சம் பேர் கொண்ட சமூகத்தில் ஒருவன் கொலையாளியாக இருந்தால், அந்த சமூகத்தில் கொலைகாரன் என்பவன் தனிமனிதக் கூறு. ஆனால், ஒரு இலட்சம் மனிதர்கள் கொண்ட சமூகத்தில் ஐம்பதினாயிரம் பேருக்கு மேல், அந்தக் கொலை செய்பவனை ஆதரிக்கிறார்கள் என்றால்...அந்தச் சமூகம் கொலைத்தன்மையுடையது. ஏற்றுக் கொண்டுதானாக வேண்டும்.

**சாம்பிராணி என்பது நல்ல வாசனை தருவதாகவும் புனிதமாகவும் இருக்கிறது. அதைப் போய் மடத்தனத்துக்கு உவமையாக மடச் சாம்பிராணி என்று ஏன் சொல்கிறார்கள்?**

-க.கமால்தீன், ஏறாவூர் - 03.

பெருமைக்காக அவசரப்பட்டுத் தன்னைத் தானே அழித்துக்கொள்வதாலாக இருக்கும்!

**வானம் நம் கைக்கெட்டும் தூரத்தில் இருந்தால்?**

-கே.மேகசுதன், திருக்கோவில் - 02.

ஏரோப் பிளேன்கள் நம் இடுப்பைச் சுற்றிப் பறக்கும்!

**பாகிஸ்தானில் இலங்கை அணியின் இறுதியாட்டம் எப்படி?**

-சுதாஷ் சுதாகரன், பூண்டுலோயா.

முரளி இல்லாத இலங்கை அணியின் பந்துவீச்சில் எந்த ஓட்ட எண்ணிக்கையையும் துரத்திப் பிடித்துவிடலாம் என்ற இன்ஸமாமின் எண்ணத்திற்கு சனத்தும் சந்தனவும் கொடுத்த தோல்வி.



# கிரிக்கெட்டின் வரலாறு

18

இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான லென் ஹட்ன் 364 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டபோது அவரது வயது 22 ஆகும். இவருடன் இணைந்து துடுப்பாட்டத்தில் இறங்கிய டபிள்யூ.ஜே. எட்லிச்சின் வயதும் 22 ஆகும்.


லென் ஹட்னின் மேற்படி சாதனையுடன் இங்கிலாந்து அணி மேலுமொரு சாதனையை ஏற்படுத்தியிருந்தது. அதாவது, இங்கிலாந்து அணி தனது முதலாது இன்னிங்ஸை இடைநிறுத்தும்போது ஏழு விக்கெட்டுகளை இழந்து 903 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அதுவரை காலத்தில் ஓர் அணி பெற்ற அதி கூடிய ஓட்ட எண்ணிக்கை இது என்பது குறிப்பிடத் தக்கதாகும். இந்த சாதனையை 59 வருடங்களுக்கு பின்னர் இலங்கை அணி 1997ஆம் வருடம் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் வைத்து முறியடித்தது. ஆறு விக்கெட்டுகளை இழந்து 952 ஓட்டங்களை இலங்கைக் அணி அப்போது பெற்றது.

லென்ஹட்ன் 364 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஓரயர்லி வீசிய பந்தை அவர் ஸ்தானத்தில் இருந்து அடித்து ஏ.எல். அஸட்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். இவர் விக்கெட்டில் தரித்து நின்ற 13 மணித்தியாலமும் 20 நிமிடங்களும்தான் டெஸ்ட் போட்டியியொன்றின்போது ஒரு துடுப்பாட்டவீரர் தரித்து நின்ற அதி கூடிய கால வரையறையாகும்.

மேற்படி போட்டியின்போது இங்கிலாந்து அணி சார்பில் எம். லேலண்ட் 187 ஓட்டங்களையும், ஜே.ஹாட்ஸ்டாப் 169 ஓட்ட்ங்களையும் பெற்றன. அணியின் தலைவர் வொலி ஹேமன்ட் 59 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டார்.

போட்டியில் தோல்வியடைந்த அவுஸ்திரேலிய அணியின் எல்.ஓ.பி.பிலிட்வுட் இப் போட்டியின்போது ஒரு சாதனையைப் படைத்திருந்தார். அதாவது ஒரே ஒரு இன்னிங்ஸில் 87 ஓவர்கள் பந்துவீசி (522 பந்துவீச்சுக்கள்) 298 ஓட்டங்களைக் கொடுத்து ஒரே ஒரு விக்கெட்டை மாத்திரமே பெற்றுக்கொண்டார். டெஸ்ட் போட்டி ஒன்றின்போது ஒரே ஒரு விக்கெட்டைக் கைப்பற்று வதற்காக அதிகூடிய ஓட்டங்களைக் கொடுத்த பந்துவீச்சாளர் அவர்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

டபிள்யூ.ஜே.ஒரயர்லி 85 ஓவர்கள் பந்துவீசி (510 பந்துவீச்சுக்கள்) 178 ஓட்டங்களுக்கு மூன்று



லென் ஹட்ன் (மத்தியில்) எதிரணித் தலைவர் டொனல்ட் பிரட்மனின் வாழ்த்துக்களைப் பெறுகின்றார்.

விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பிரபல வீரர் டொனால்ட் பிரட்மன், கையில் ஏற்பட்ட உபாதை காரணமாகப் போட்டியில் கலந்துகொள்ளாமை அவுஸ்திரேலிய அணிக்குப் பெரும் பின்னடைவைக் கொடுத்தது. இதே நேரம் ஜே.எச். பின்ஸ்லெடனும் உபாதை காரணமாகப் போட்டியில் பங்குபற்றவில்லை.

இப் போட்டியின்போது அவுஸ்திரேலிய அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 201 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 123 ஓட்டங்களையும் மாத்திரமே பெற்றுக்கொண்டது.

போட்டிக்கு நடுவர்களாக எப்.வெஸ்டரும், எப். வோல்டனும் பணியாற்றினர். லென் ஹட்னின் திறமையான விளையாட்டு காரணமாக ஓவல் மைதானத்தில் அவரது சிலையொன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

30களில் நடைபெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் தற்போது இடம்பெறுவதைப் போல் 5 நாட்களுக்கு வரையறுக்கப்படவில்லை. போட்டி ஒரு முடிவுக்கு வரும் வரை எத்தனை நாட்களேனும் விளையடலாம் என்றொரு வழக்கு இருந்தது. இவ்வாறான போட்டிகள் கால வரையறையற்ற டெஸ்ட் போட்டிகள் என அழைக்கப்பட்டன. இவை உத்தியோகபூர்வ போட்டிகளாகவும் இருந்தன.

மேற்படி போட்டிகளில் கிரிக்கெட் வரலாற்றில் இங்கிலாந்து அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் இடையில் இடம் பெற்ற போட்டியே பிரபலமானதாகக் குறிப்பிடப்படுகின்றது.

1939 மார்ச் 3,4,6,7,8,9,10,11,13 மற்றும் 14ஆம் திகதிகளில் பத்து நாட்களாக நடைபெற்ற இப் போட்டி தென்னாபிரிக்காவில் உள்ள டர்பன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

தென்னாபிரிக்க அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 530 ஓட்டங்களைப் பெற்றது. வெண்டார் பீஜி 125 ஓட்டங்களையும் ஏ.டீ. நேரர்ஸ் 103 ஓட்டங்களையும் பெற்றனர்.

இரண்டாவது இன்னிங்ஸின்போது 481 ஓட்டங்களை தென்னாபிரிக்க அணி பெற்றுக் கொண்டது. ஏ.மெல்வீல் 103 ஓட்டங்களையும், வென்டர் பீஜீ மீண்டும் 97 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 316 ஓட்டங்களைப் பெற்றது. எல்.ஈ.ஜி.ஏம்ஸ் 84 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார் போட்டியின் 10ஆவது நாளாகும் போது இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக 5 விக்கெட்டுகளை இழந்து 645 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன், மேலும் 40 ஓட்டங்களைப் பெற்றிருந்ததால் இங்கிலாந்து அணி இப் போட்டியில் வெற்றி பெற்றிருக்கக் கூடும். ஆகவே போட்டியை 11ஆவது நாளன்றும் நடாத்த வேண்டி இருந்ததுடன் துரதிர்ஷ்டவசமாக இங்கிலாந்து அணியினர் தமது நாட்டுக்குச் செல்ல வேண்டியிருந்த கப்பல் எக் காரணம் கொண்டும் தாமதிக்க இயலாத நிலையினால், அன்றைய தினமே புறப்பட்டுவிட்டனர். 10 நாட்களாக விளையாடப்பட்டு இங்கிலாந்து அணியின் வெற்றி அண்மித்து காணப்பட்டபோதிலும் இறுதியில் வெற்றி - தோல்வியின்றி இப்போட்டி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இங்கிலாந்து அணியின் இரண்டாவது இன்னிங்ஸின்போது டபிள்யூ. ஜே. எட்லிச் 219 ஓட்டங்களையும், வொலி ஹேமண்ட் 140 ஓட்டங்களையும் ஜீ.ஏ. கிப் 120 ஓட்டங்களையும் பெற்றனர்.

**-மைந்தன்**

---

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமீ J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

## ஆதிக்கம் - 5 பிறந்த கிழமை : சனி

பிறப்பெண் 5இலும் சனிக்கிழமையிலும் பிறந்துள்ள நீங்கள் எப்பொழுதும் திறந்த மனம் உடையவர்களாக இருப்பீர்கள். எதையும் வெளிப்படையாகப் பேசக்கூடியவர் நீங்கள். மனதில் எதையுமே வைத்திருக்க மாட்டீர்கள். பொய், பித்தலாட்டம், ஊழல், ஏமாற்றுதல், களவு, வஞ்சகம், துரோகம் இதுபோன்ற தீய பண்புகளை அறியாதவர், தெரியாதவர் நீங்கள்.

கபடு, சூதுவாது என்பவற்றை அறியாத நீங்கள் பிறரை இலகுவில் நம்பிவிடுவீர்கள். உங்களைப் போன்றுதான் மற்றவர்களும் இருப்பார்கள் என்ற எண்ணத்தின் காரணமாக இந்த உலகத்தைப் பற்றிப் புரியாது இருப்பீர்கள். இரகசியம், பரகசியம் என்பவற்றுக்கு வேறுபாடு உங்களுக்குத் தெரியாது. ஒரு இரகசியத்தைப் பிறரிடம் கூறினால் என்ன நடக்கும் என்பதைக் கொஞ்சம்கூட யோசிக்க மாட்டீர்கள். பிறரின் மனதை ஒருபோதும் நோகடிக்க மாட்டீர்கள். பிறர் மீது அதிக அன்பும் அக்கறையும் உடையவர் நீங்கள். தெளிந்த நீரோடை போன்றவர்தான் நீங்கள். உங்கள் மனதில் அசிங்கம் கிடையாது. ஒரு குழந்தையின் மனதுக்கு உங்களை ஒப்பிடலாம்.

இரக்க குணம் உங்களிடம் மிகுதியாகக் காணப்படும் பண விடயத்தில் எச்சரிக்கையுடன் இருப்பீர்கள். பிறரை நம்பிக் கடன் கொடுக்க மாட்டீர்கள். அப்படிக் கொடுத்தால் அதைக் கேட்டுக் கேட்டுத் தொந்தரவும் தொல்லையும் பிறருக்குக் கொடுக்க மாட்டீர்கள்.

செலவு விடயத்தில் அனாவசிய வீண் செலவுகளை ஒரு நாளும் செய்ய மாட்டீர்கள். யோசித்து முடிவு செய்த பிறகுதான் செலவு செய்வீர்கள். அதுவும் பிரயோசனமான செலவுகளைத்தான் செய்வீர்கள். பிறரை எளிதில் நம்பிவிடும் கள்ளங்கபடமில்லாத நீங்கள் ஏமாறுவீர்கள். உங்களை எளிதாகப் பிறர் ஏமாற்றிவிடுவார்கள்.

ஒரேயொரு தொழில் செய்து உழைத்துப் பணம்பெறமாட்டீர்கள். பல தொழில்களில் ஈடுபட்டு நிறையப் பணம் சம்பாதிப்பீர்கள். பல இடங்களில் மாறி மாறி வசிப்பதும் வெளியூருக்குச் சென்று திரும்பக் கூடியவர்களாகவும் இருப்பீர்கள். நீங்கள் பிறர் மீது அன்பு, இரக்கம் உடையவராக இருந்தாலும், பிறரிடம் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள மாட்டீர்கள். இதனால் அதிக நண்பர்கள் உங்களுக்கு இருக்கமாட்டார்கள்.

பொதுவிடயங்கள், கேளிக்கைகள்,விழாக்கள் போன்றவற்றில் ஈடுபாடு இல்லாதவர் நீங்கள். 32 வயது வரைக்கும் அடிக்கடி தொழில் மாறிக் கொண்டிருப்பீர்கள். 32 வயதுக்குப் பின்னர்தான் ஒரு நிலையான தொழிலைச் செய்வீர்கள். தொழிலைப் பொறுத்தவரையில் இலகுவான தொழில் செய்து இலகுவாகப் பணந்தேடக் கூடிய நிலை உங்களுக்கு இல்லை. கஷ்டப்பட்டுத்தான் உழைக்க வேண்டியிருக்கும்.

36, 39, 42, 45 வயதுவரை வருமானம் படிப்படியாக உயர்ந்த வண்ணமிருக்கும். வசதியாக வாழக் கூடிய பலனைப் பெற்றுள்ளீர்கள் நீங்கள். 86 வயதில் கூடிய பணத்தொகை உங்களுக்குக் கிடைக்கும். இந்தப் பணத்தினைக் கொண்டு சந்ததியினர் பழம், காய்கறி வியாபாரம் செய்வார்கள். சொத்து சுகம் பெற்று ஆயுள் வரை அழகாகவும் சந்தோஷமாகவும் வாழ்வீர்கள்.

வாழ்க்கையில் உங்களுக்கு எந்த ஆபத்துக்களும் இல்லை. 21 வயதில் உடற்சூடு சம்பந்தமான நோய்கள் ஏற்பட்டு 41 வயது வரை சிரமம் கொடுக்கும். சில மாதம் நன்றாக இருப்பீர்கள். சில மாதங்கள் மலச்சிக்கல், வயிற்றுவலி, காய்ச்சலால் துன்பப்படுவீர்கள். பின்னர் குணமடைந்து விடுவீர்கள்.

உடற்சூட்டைத் தணிக்கும் உணவு வகைகளை நீங்கள் சாப்பிட வேண்டும். சிறு பசளைக்கீரை, உளுந்து, கோதுமை, பருப்பு, வாழைப்பழம், பசுப்பால், நெய், மோர், தயிர், மிளகு, முந்திரிப்பழம், முருங்கைக்காய், வெங்காயம் போன்றவை.

உங்களுடைய அதிர்ஷ்ட எண் 6. இதனால் மாதத்தில் வருகின்ற 4, 13, 22, 31 ஆகிய திகதிகளில் முக்கியமான காரியங்களைச் செய்யுங்கள். வெற்றி கிடைக்கும். இந்தத் திகதிகள் சனிக்கிழமையில் அமையுமாக இருந்தால் விசேட பலன் கிடைக்கும். வெளிறிய நீல நிற சார்ட் அணியுங்கள். வெளிர் நிறமான நீலக்கல் பதித்த வெள்ளி மோதிரம் நீங்கள் அணிந்தால் அதிர்ஷ்டமாகும். நீங்கள் எந்த எண் உள்ள வீட்டில் வசித்தாலும் நன்மை கிடைக்கும்.

ஆகவே, எண் 5ஐயும் சனிக்கிழமையினையும் உடைய நீங்கள் வாழ்வில் பல செல்வங்களையும் பெற என் ஆசீர்வாதங்கள்.

சனியும் எண் ஐந்தும் உடைய மனிதன் கனி போன்ற மனமுடையவன். புனிதன் போல் உயர்ச்சியுண்டு. புன்னகை வாழ்வு நன்குண்டு.

**அடுத்து ஆதிக்கம் 5 ஞாயிற்றுக்கிழமை பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்!**

---

# கல்வி நடவடிக்கைகளில் அரசியல் சாயம் பூசாதீர்கள்


பதுளை சரஸ்வதி தேசியக் கல்லூரி மாணவர்கள் சிலர் அதிபரை உடனடியாக இடம் மாற்றக் கோரி வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

திங்கட்கிழமை மாணவர்கள் சிலர் கல்லூரியின் முன் ஒன்றுகூடி அதிபருக்கு எதிராக வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளைத் தாங்கியவண்ணம் கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அதிபரை இடமாற்றம் செய்யும் வரை போராட்டம் ஓயாது என்றும், நேர்மையில்லாத அதிபர் எமக்கு வேண்டாம், கணினி பயிற்சி நிலையத்தை சொந்தப் பாவனைக்குப் பயன்படுத்த வேண்டாம், அதிபரால் மாணவிகள் மற்றும் ஆசிரியைகளுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கும் விரும்பத் தகாத செயற்பாடுகளைக் கண்டிக்கிறோம் என்று பல போலிக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் சில மாணவர்களுடன் வெளியிலுள்ள குறுகிய நோக்குடைய அரசியல் சக்திகளும், பாடசாலையின் பெற்றோர் அல்லாத வெளிநபர்களும் சேர்ந்து பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த மாணவர்களின் வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தின் பின்னணியை ஆராய்ந்தபோது கணினி பயிற்சிக்கு ஆசிரியை ஒருவரை அனுப்ப அதிபர் மறுத்தமை மற்றும் பதுளையைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவருக்கும் அதிபருக்கும் இடையிலான சில அதிருப்தி, கல்லூரிக் களஞ்சிய அறையின் கதவு உடைக்கப்பட்டது தொடர்பாக சில மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டமை என்பவற்றை மையமாக வைத்து வகுப்புப் பகிஷ்கரிப்பும் பின்னர் வெளி சக்திகளால் போலிக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு அதிபரை இடம் மாற்ற முயற்சியும் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளில் இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு முழு அர்ப்பணத்துடன் செயலாற்றிய முன்னாள் அதிபர்கள் மூவர் மீதும் இவ்வாறான போலிக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு, வகுப்புப்




பகிஷ்கரிப்பு நடாத்தப்பட்டு அதிபர்கள் மாற்றப்பட்டது இப் பாடசாலையின் சிறப்பம்சமாகும்.

தற்போது அதிபரை இடம் மாற்றக் கோரும் பதுளை சரஸ்வதி தேசியக் கல்லூரி மாணவர்களின் வகுப்புப் பகிஷ்கரிப்புப் பிரச்சினையில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் தலையிட்டு 16.10.2004 ஆம் திகதி பெற்றோர்கள் கூட்டம் மாகாணக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது. இதற்குள் பெற்றோர் அல்லாத ஒரு அரசியல் பின்னணியில் ஒரு கும்பல் நுழைந்து கூட்டத்தைத் திசைதிருப்பி அதிபரை மாற்ற வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இது பெற்றோரின் தீர்மானம் இல்லை. ஒரு சிலரால் திட்டமிட்டு நடத்திய நாடகம். இக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளிக்கப்படவில்லை. உண்மை நிலையை எடுத்துக் கூற முற்பட்ட பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அங்கிருந்த தீய சக்திகளால் கொலை மிரட்டல் விடப்பட்டிருக்கிறது.

கூட்டத்தில் அதிபருக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை. உண்மை நிலையை அறிய சரியான பெற்றோர் கூட்டம் நடைபெற வேண்டும்.


இதற்குள் சில தீய சக்திகளால் குறுகிய நோக்குடன் பிரதேசவாதம் அதாவது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் மலையைகப் பாடசாலையில் அதிபராக இருக்கக் கூடாது. மலையகத்தைச் சேர்ந்தவர்தான் அதிபராக இருக்க வேண்டும் என்று பிரசாரம் செய்யப்படுகின்றது.

இது சம்பந்தமாகப் பதுளையில் வசிக்கும் தொழிற்சங்கவாதிகள், கல்விமான்களிடம் கேட்டபோது, சந்திரராஜா அதிபராகப் பொறுப்பேற்ற பின்னர் கல்வி நடவடிக்கைகள் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு 18 மாணவர்கள் பல்கலைக்கழகக் கற்கை நெறிக்குத் தெரிவாகி உள்ளனர். இந்தக் கல்லூரியில் சிறந்த ஆசிரியர் குழாம் கடமையாற்றி வருகிறது. அன்று முதல் இன்று வரை நூற்றுக்கணக்கான கல்விமான்களை உருவாக்கி பொறியியலாளராகவும், மருத்துவராகவும், சட்டத்தரணிகளாகவும்,

**— ஜெய் —**

கணக்காளராகவும், நிருவாக சேவையாளராகவும் பல துறைக்கும் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்த பெருமைக்குரிய கல்லூரியாக விளங்கி வருகின்றது.

இந்தப் பாடசாலையின் நிர்வாகத்தைச் சீரழித்துக் குழப்பங்களை ஏற்படுத்த ஒரு சில சக்திகளின் சதிதான் இந்தப் போலிக் குற்றச்சாட்டுக்கள். இந்த விடயத்தில் தேசிய பாடசாலை கல்வி அமைச்சு தலையிட்டு நியாயமான முறையில் பெற்றோர் கூட்டத்தை நடத்தி நீதியான விசாரணை நடத்த வேண்டும். போலிப் பிரசாரங்களில் ஈடுபடுபவர்கள், போலித் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் பதுளை வாழ் மக்களின் விருப்பம்.




> "மாஜிக் தந்திரங்கள்" குறித்த பயிற்சியும் அதனோடு ஒட்டிய சுவைமிகு தகவல்களும் தொடர்ந்து வெளிவரும். மாஜிக் பிரியமுடைய நீங்களும் மாஜிக் நிபுணராகத் திகழ எமது வாழ்த்துக்கள்.

# மாஜிக் தந்திரங்கள்

இரண்டு செ.மீ. வெள்ளை வர்ணம், இரண்டு செ.மீ. கறுப்பு வர்ணம் வீதம் அடிக்க வேண்டும். இந்த வகையில் ஒரு வளையம் தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

மேடை அமைப்பதற்கு முன் இந்த வேலைகளைச் செய்யவேண்டி இருப்பதால் மேசையின் நடுவில் இரண்டு கட்டைகள் நட்டு குத்தலாக வேண்டியிருக்கும். எனவே, இதை மறைப்பதற்கு மேடை நிறுத்த மேல் போடப்படும் மேசையை இந்த இரண்டு கட்டைகளுக்கு முன்னால் போட்டு விட்டால் இந்தக் கட்டைகளை மேஜை மறைத்துக்கொள்ளும். ஆளை அந்தரத்தில் படுக்க வைக்கும் காட்சி ஆரம்பிக்கும்பொழுது இந்த மேசையை அப்புறப்படுத்திக்கொள்ளலாம். இனிமேல் இந்தக் காட்சியை எப்படி நடத்துவது என்பதைக் கூறுவோம்.

இந்தக் காட்சியை ஆரம்பிக்கும் முன் மேடைக்கு முன் உள்ள திரையை விட்டு மேடையை மூடிவிட வேண்டும்.

மேடையின் நடுவிலுள்ள மேசையை அப்புறப்படுத்திவிட வேண்டும். மேடைக்கு நடுவிலுள்ள கட்டப்பட்டுள்ள திரையை அவிழ்த்து விட்டு, மேடையின் பின் பகுதியையும், பூமியில் நாட்டப்பட்டுள்ள இரண்டு மரக்கட்டைகளையும் மறைத்துவிட வேண்டும். "ட" போல் வளைக்கப்பட்ட இரண்டு இரும்புக் கம்பிகளையும் திரையின் பின்னே வைத்துக்கொள்ள வேண்டும்.

காட்சியாளர் உள்ளே சென்று ஒரு பெரிய கறுப்புத் திரையைக் கையில் எடுத்து வந்து, வைத்திருக்கும் பலகையின் மேல் விரிப்பது போல பாவனை செய்ய வேண்டும். கறுப்புத் திரை கால்வரை தொங்க வேண்டும். இந்த சமயம் உதவியாள் திரைக்குப் பின்னே இருந்து இரண்டு கம்பிகளையும், ஒவ்வொரு கட்டையிலுள்ள கொண்டிகளில் சரிவரச் சொருகி, நீண்ட பகுதியை பலகையின் பக்கம் வெளியே வரும்படி செய்து பலகையின் அடிப் பாகத்தில் பலகையைத் தாங்கும் அளவிற்குச் சரியாக வைத்துவிட வேண்டும். வைத்துவிட்டு மேடைக்கு வரவேண்டும். கம்பியை பலகைக்குக் கீழாக வரும்படி செய்யும்போது அதை மறைப்பதற்குத்தான் இந்தக் கறுப்புத் திரை நாடகம். கம்பியை ஒழுங்காக வைத்தவுடன் காட்சியாளர் கறுப்புத் திரையை பலகையின் மேல் ஒழுங்காகப் போட்டுவிட்டு மேடைக்கு நடுவில் நிற்க வேண்டும்.

உதவியாளை பலகைக்கு முன் ஒரு ஸ்ரூலைப் போடச் சொல்லி அதில் ஏறி பலகையின் மேல் படுக்கும்படி சொல்ல வேண்டும். உதவியாளர் பலகையில் படுத்தவுடன், தொங்கும் கறுப்புத் துணியை எடுத்து, அவரை மூடி, கைகள் இரண்டையும் மேலே உயர்த்தி, மந்திரம் போடுவது போல பாவனை செய்துவிட்டு, கறுப்புத் திரையைத் தொங்க விடாமல் அதைச் சுருக்கி, படுத்திருப்பவரின் உடலுக்குக் கீழாக சிறிதளவு சொருகி, பலகையிலிருந்து சுமார் 6 செ.மீ நீளம் கீழே தொங்கும்படி வைத்துவிட வேண்டும். பலகையில் படுத்திருப்பவர் உடல் சபையோருக்குத் தெரியும்படி செய்துவிட்டு, இலேசாக பலகையைத் தூக்கி மேல் பெட்டியை எடுத்துவிட்டு மறுபக்கம் போய், இடது பக்கத்துப் பெட்டியை எடுத்துவிட்டு; மறுபடி வலது பக்க இரண்டாவது பெட்டியை எடுத்துவிட்டு, இடது பக்க இரண்டாவது பெட்டியையும் எடுத்து விட்டால் ஆள் படுத்திருக்கும் பலகை அந்தரத்தில் நிற்பது போலத் தெரியும்.

காட்சியாளர் மேடையில் நின்று, ஒரு பெயரைச் சொல்லி "உங்கள் இரண்டு கைகளையும் உயர்த்துங்கள்" என்றால் உதவியாள் இரண்டு கைகளையும் உயர்த்த வேண்டும். "கையைக் கீழே போடுங்கள்" என்றால் உடனே கீழே போட வேண்டும். இதுபோல ஒன்றிரண்டு கேள்விகளைக் கேட்டு பதில் சொல்லும்படி செய்ய வேண்டும்.

பிறகு, கம்பி வளையத்தை எடுத்து அதன் வாய் இணைப்பை இடது கையில் பிடித்து, இணைப்பு இருப்பதை சபையோர் அறியாவண்ணம் சபையோரிடம் காண்பித்து, உதவியாள் படுத்திருக்கும் பலகை அருகே செல்லும்பொழுது, வளையத்தின் இணைப்பை முன்பக்கம் வரும்படி செய்து - அதாவது இணைப்பை திரைப்பக்கம் வரும்படி செய்து இந்த வளையத்தை படுத்திருப்பவரின் கால் பக்கமிருந்து கோத்து, படுத்திருப்பவர் தலைப்பக்கம் கொண்டுவர வேண்டும். இந்தச் சமயம் திரைக்கும், பலகைக்கும் இடையே பலகையைத் தாங்கிப் பிடிக்கும் இரண்டு கம்பிகள் குறுக்கிடும். இந்தச் சமயம் காட்சியாளர் கம்பி வளையத்தை இடது கையைக்கொண்டு கீழ்ப்பக்கமும், வலது கையை வளையத்தின் மேல் பக்கமுமாகப் பிடித்து வளையத்தை இலேசாக நிமிர்த்தினால், வளையம் வாயைத் திறக்கும். இந்த சமயம் குறுக்கிடும் இரண்டு கம்பிகளை கம்பி வளையத்தின் வாய் வழியே கடத்திக் கொண்டு போய், வளையத்தைத் தலைப் பக்கத்திற்குக் கொண்டுபோய் வெளியே எடுத்து முன் போல கம்பி வளையத்தின் வாயைக் கையில் பிடித்து மறைத்து வளையத்தை சபையோரிடம் காண்பித்துவிட்டு மறுபடி பலகை அருகே சென்று வளையத்தை படுத்திருப்பவரின் கால் பக்கமிருந்து தலைப்பக்கத்திற்குக் கொண்டு வந்து வெளியே எடுத்துவிட வேண்டும். இந்த சமயம் கால் பக்கமிருந்து தலைப்பக்கம் வரும் பொழுது, பலகைக்கும் திரைக்கும் இடையே பலகையைத் தாங்கும் இரண்டு கம்பிகளும் குறுக்கிடும் அல்லவா? தலைப் பக்க மிருந்து கால் பக்கத்திற்கு வரும் பொழுது, தடைக் கம்பியின் வாயைத் திறந்து கம்பியைக் கடந்தது போலவே, இந்த முறையும் வளையத்தை கம்பியின் வாயைத் திறந்து கடந்து வந்து தலைப் பக்கமாக வளையத்தை வெளியே எடுத்து மறுபடி முன்போல சபையோரிடம் காண்பித்துவிட்டு, வளையத்தைக் கீழே போட்டுவிட வேண்டும்.

பிறகு, கள்ளியம் பெட்டிகளை எடுத்து, பலகைக்குக் கீழே முட்டுக் கொடுத்து பலகையை அது தாங்கிப் பிடித்துக்கொள்ளும்படி படிமானமாக வைத்துவிட்டு, உதவியாளரை எழுந்திருக்கச் சொல்லி ஒரு ஸ்ரூலைப் போட்டு அவரைக் கீழே இறங்கும்படி செய்ய வேண்டும். அவர் சபையோருக்கு வணக்கம் சொல்லிவிட்டு, உள்ளே போய் திரைக்குப்பின் வெளியே நீண்டு பலகையை தாங்கிப் பிடித் திருக்கும் கம்பிகளைக் கட்டையிலிருந்து கழற்றி எடுத்துவிட வேண்டும். இந்த சமயம் காட்சியாளர் பலகையின் மேல் போடப்பட்ட கறுப்புத் திரையை எடுத்து விரித்து தனக்கு முன் ஒரு விநாடி பிடித்திருக்க வேண்டும். இதற்குள் உதவியாளர் இந்த வேலையை முடித்துவிட வேண்டும். பிறகு காட்சி யாளர் கறுப்புத் திரையைச் சுருட்டி ஒரு ஸ்ரூலின் மேல் வைத்து விட வேண்டும்.

அதன்பின் பலகையை எடுத்து சபையோரிடம் காண்பித்துவிட்டு மேடைக்கு முன்னே உள்ள திரையை விட்டுவிட வேண்டும். அடுத்த காட்சிக்குத் தயாராக வேண்டும்.

(தொடர்ந்து வரும்...........)

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



> நான் சொல்வ தெல்லாம் பொய்.
> பொய்யைத் தவிர
> வேறொன்றுமில்லை.
> *-காதில பூ கந்தசாமி-*

அண்ணை! கந்தசாமியண்ணை! ஓடி வாருங்கோ, ஓடி வாருங்கோ. எனக்கிங்க தாங்க ஏலாமலிருக்குது. ஓடி வாருங்கோ...

யாரது உப்பிடிக் கடும் அவசரத்தில கூப்பிடிறதெண்டு எட்டிப் பாத்தன். எங்கட கனகு. கனகுசுந்தரம். பக்கத்து வீட்டுக்காறன்.

**கா.பூ:** என்ன கனகு இந்த அவதிப்படுறாய்? என்ன பிரச்சினை?

**கனகு:** அண்ண! எனக்குத் திடீரெண்டு ஒரு வயித்து வலி வந்து குடலை முறுக்கிக்கொண்டு நிக்குது. அம்மா! என்ன பிரச்சினையெண்டே தெரியேல்லை. என்னை யாரேனும் நல்ல டாக்குத்தரிட்டக் கூட்டிக்கொண்டு போய்க் காட்டிறியளே...

**கா.பூ:** எனக்குத் தெரிஞ்சது ஒரு அரசியல் வாதியத்தான். அவர் ஏதோ சனத்தின்ர பிரச்சினைக்கு அரசியல் வைத்தியம் பாக்கிறதாச் சொல்லித் திரியிறார். அவரிட்டக் கூட்டிக்கொண்டு போய் விடுகிறன். நோயத் தீர்த்துக்கொள்ளுறது உம்மட பாடு.

**கனகு:** சரி, ஆபத்துக்குப் பாவமில்லை. எங்கயெண்டாலும் கூட்டிக்கொண்டு போய் என்ர வயித்துவலியைத் தீர்த்துத் தாருங்கோ.

கனகு படுகிற கஷ்டத்தைக் காணச் சகிக்காமல் உடன ஒரு ஓட்டோ பிடிச்சு எங்கட சம்பந்தரையாவிட்டக் கூட்டிக்கொண்டு போனன்.

**கா.பூ:** ஐயா! சம்பந்தர்! ஐயா! இங்க ஒருத்தன் வயித்து வலியெண்டு வந்து துடிச்சுக்கொண்டிருக்கிறான். ஆளுக்கு ஒரு வைத்தியம் பாத்துக் குணப்படுத்தி விடுகிறியளே?

**சம்:** வாரும் தம்பி, வாரும். சனத்துக்காகத்தானே நாங்களிருக்கிறம். மக்களுக்கு நோயிருந்தால்தானே வைத்தியருக்குப் பிழைப்பு. சனங்களுக்குப் பிரச்சினையிருந்தாத்தானே எங்களப் போல அரசியல் வாதிகளுக்குப் பிழைப்பு. தம்பி உம்மட பெயரென்ன சொன்னீர்?

**கனகு:** நான் இன்னும் சொல்லேல்லை.

**கா.பூ:** கனகு ஐயா.

**சம்:** சரி மிஸ்டர் கனகு! ஒருக்கால் முனகும்.

**கனகு:** ஏன்?

**சம்:** இப்ப எங்கட சனமெல்லாம் எங்களப் பற்றி முனகிக்கொண்டிருக்கிறதாக் கேள்வி. அதுதான் எப்பிடி முனகிறீரெண்டு அறியக் கேட்டனான். அது சரி, உம்மட வருத்தம் என்னெண்டு சொன்னனீர்?

**கனகு:** அதையேன் கேக்கிறியள். ஒரு வயித்துக் குத்து பிடிச்சு உயிரை வாங்கினபடியிருக்குது. உயிரும் போகுதில்லை. வருத்தமும் மாறுதில்லை.

**சம்:** முதலாவது சிம்பிள் தம்பி. அதுக்கு ஒருவித ட்ரீட்மென்ட். ரெண்டாவதுதான் கொஞ்சம் கஷ்டம். அதுக்கு வேற ட்ரீட்மெண்ட். எது வேணும் உமக்கு?

**கா.பூ:** சிம்பிளா முடியுமெண்டால் சிம்பிளானதையே செய்துவிடுங்களன்.

**கனகு:** யோவ், காதில பூ! கதை விளங்காமல் கதையாதையும். அவர் உயிரப் போக்கிறதுதான் சிம்பிளெண்டிறார். வருத்தம் மாறுறதுதான் கஷ்டமாம்.

**சம்:** முதலாவது தீர்வு வேணுமெண்டால், நீர் கொஞ்சம் மனம்விட்டுக் கதைச்சுத் திரிஞ்சாலே போதும்.

**கனகு:** ஐயையையோ.., நான் வாயே திறக்க மாட்டன். இத்தன வருஷமா வாய் திறவாமலே வாழப் பழகிவிட்டன். மூக்கால்தான் சாப்பாடும்கூட. எனக்கு ரெண்டாவது ட்ரீட்மெண்டச் செய்தியளெண்டால் போதும்.

**சம்:** சரி, வாயத் திறவும்.

**கனகு:** வயித்து வலிக்கு ஏனையா வாயத் திறக்கச் சொல்லுறியள். வாயத் திறந்தால் எக்கணம் வம்பாப் போயிடும்.

**சம்:** வெறுமன வாயத் திறவும். பேச வேண்டாம். வாயத் திறந்து நாக்க நீட்டும்.

**கனகு:** ஆ...

**சம்:** ம்... உம்மட நாக்குக் கொஞ்சம் நீளம்தான். நீர் ஆருக்கு வாக்குப் போட்டனீர்?

**கனகு:** வாக்குப் போட்டதுக்காக வயித்து வலி வருமோ ஐயா?

**சம்:** தம்பீ, உமக்கு வந்திருக்கிற வயித்து வலி சாதாரண வலியில்லை. இது தமிழனுக்கு வந்திருக்கிற வலி. தமிழ் மக்கள் நசுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறதால, அடக்கப்பட்டுக்கொண்டிருக்கிறதால ஏற்பட்டிருக்கிற வலி. இதுக்கு கொஞ்ச மருந்தெழுதித் தாறன், போடும்.

**கனகு:** என்ன மருந்தெண்டு சொல்லுங்கோ. என்ன விலை குடுத்தும் வாங்கிப் போட்டுடுறன்.

**சம்:** முதலாவது பில்ஸ் வாக்கு.

**கனகு:** அது என்னட்ட இருக்குத்தானே?

**சம்:** அது போதாது. நான் சொல்லுற பார்மஸியில போய்க் கேட்டால் ஒரு கட்டுக் கள்ள வாக்குத் தருவாங்கள். அதத் தேர்தல் காலத்தில நாலைஞ்சு பூத்துகளுக்குப் போய், மாறி மாறிப் போட்டுக்கொண்டு வாரும். அதோட மற்ற ஒரு பில்ஸ் தாறன், கோஷம் எண்டு பெயர்.

**கனகு:** அதை..?

**சம்:** அதை அடிக்கடி நாங்கள் நடத்திற ஊர்வலங்கள், நிகழ்ச்சிகளில வந்து நிண்டு போட்டுக்கொள்ளும். அதோட முக்கியமா ஒரு ஊசி மருந்து தாறன். ஒவ்வொரு நாளும் காலையில எழும்பிச் சாப்பாட்டுக்கு முன்னம் ஏத்திக்கொள்ள வேணும்.

**கனகு:** என்ன ஊசியையா?

**சம்:** உணர்ச்சி ஊசி. அதை எங்கட பேப்பர்க்காறர் டெய்லி சப்ளை பண்ணுவாங்கள். தவறாமல் வாங்கி ஏத்திக்கொள்ளும். இதுக்கு மேலால ஒரு டொனிக் எழுதித் தாறன்.

**கனகு:** சொல்லுங்கோ ஐயா.

**சம்:** இது மாற்றுக் கட்சிக்காறர், மற்றது உந்த சர்வதேச மனித உரிமைக்காறர், சில வெளிநாட்டுக்காறர் உண்மைத் தகவல்கள் எண்ட பெயரில பரப்பிற விசக் கிருமிகளத் தடுக்கும்.

**கனகு:** என்ன பெயரையா அதுக்கு?

**சம்:** அதுக்கு ரசாயனப் பெயர், அதீத நம்பிக்கை. ஊர் வழக்கப் பெயர், நம்படா மடையா.

**கனகு:** இவ்வளவத்தையும் எடுத்தால் என்ர வயித்து வலி தீர்ந்திடுமோ ஐயா?

**சம்:** அதைத் தீர்த்திட்டு நாங்கள் என்ன பண்ணிறது யாபாரத்துக்கு? அதை அப்பிடியே மெயின்டெய்ன் பண்ணத்தான் மருந்து. வருத்தம் இருந்துகொண்டே இருக்கும், வலி மட்டும் தெரியாது. வருத்தம் தீர்க்க வேணுமெண்டால் நான் சொன்ன முதலாவது ட்ரீட்மெண்ட்தான் இருக்கு.

**கனகு:** ஐயோ, அது வேண்டாம். நோயிருந்தால் பரவாயில்லை, வலியில்லாட்டாப் போதும்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(21.10.2004 தொடங்கி 27.10.2004 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

துலாம்- சூரியன், கேது, செவ்வாய், வெள்ளி, விருச்சிகம் - புதன்,
மேடம் - இராகு, கர்க்கடகம் - சனி, கன்னி - வியாழன்.
சந்திரன் இடபம், மிதுனம், கர்க்கடகம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.)
தொழில் நன்மை, காரியானுகூலம், குடும்ப நன்மை, உயர்ந்த நிலை, பலவிதப்பேறு, இனசன மகிழ்ச்சி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் கலக்கம், வீண் பிரயாசம், காரியசித்தி, பெரியோர் சகாயம், நண்பர்கள் தொல்லை, உத்தியோகக் கலக்கம், மாணவர் கல்வி உயர்சசி, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் சிறப்பு, காரியானுகூலம், வெளியிட பிரயாணம், அன்னியரால் தொல்லை, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகளின் கெடுபிடி, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் மந்தம், காரியத் தடை, வீண் முயற்சி, இனசன விரோதம், குடும்பச் சிறப்பு, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் கலக்கம், மந்தநிலை, செலவு மிகுதி, பிரயாணக் கஷ்டம், உறவினர் உதவி, உத்தியோக முயற்சி, மாணவர் கல்விக் குழப்பம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் மேன்மை, காரியானுகூலம், மனக் குறை நீங்கும், உயர்ந்த நட்பு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் நன்மை, கௌரவம், அன்னியர் உதவி, குடும்ப நன்மை, இனசன மகிழ்ச்சி, உத்தியோக மேன்மை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை.)
தொழில் உயர்ச்சி, மனக் குறை நீங்கும், பணவரவு, பிரயாண மிகுதி, தேகசுகம், பாதிப்பு, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 05.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்.)
தொழில் நன்மை, காரியக் கேடு, பலவித கஷ்டம், மனக் கலக்கம், குடும்ப மேன்மை, உத்தியோக சிரமம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)
தொழில் சிறப்பு, பலவித நன்மை, வெளியிட வாழ்க்கை, அன்னியர் சகவாசம், உத்தியோக முயற்சி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் கஷ்டம், செலவு மிகுதி, பிரயாணத் தொல்லை, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் பலிதம், உயர்ந்த நிலை, பலவிதப் பேறு, அன்னியர் நட்பு, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**



## சூப்பர் ஐடியா

இன்றைய நிலையில் தமிழ் ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் உள்ளதை உள்ளவாறு சொல்ல முடியாமல் வாயடைத்துப் போயுள்ளனர். இது ஊடகங்களைச் சார்ந்தவர்களுக்கும், மக்களுக்கும் நன்றாகவே தெரியும். மறுபுறத்தில் சாதாரண மக்கள் கூட தங்கள் கருத்துக்களை சுதந்திரமாகச் சொல்ல முடியாத நிலையில் வாழ்கின்றனர். இத் துர்ப்பாக்கிய நிலையை முரசு விவரிக்காத வாரங்களே இல்லை எனலாம். ஆனாலும், ஏதோ ஒரு வடிவில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மக்களின் உதடுகள் திறக்கத் தயங்குகின்றபோது மனங்கள் தம் உணர்வுகளை வெளிப்படுத்தியேயாகும் என்பதற்கு நல்ல உதாரணம் இது. யாழ்ப்பாணம் கோண்டாவில் ஞான வீர சனசமூக நிலையத்தில் 60ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்திய விளையாட்டுப் போட்டியின் முடிவில் நடைபெற்ற வினோத உடை நிகழ்வில் பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் என்பவற்றின் சமகால நிலையை சித்திரித்துக் காட்டி முதலாவது பரிசினைப் பெற்ற மாணவர் செல்வன் வேலழகன் பிரவீனையே படத்தில் காண்கிறீர்கள். துணிச்சலுக்கு ஒரு சபாஷ்.



# உழைப்பால் உயர்ந்தவர்....

"உழைத்து வாழ வேண்டும்; பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே" என்று அந்தக் காலப் பாடல் ஒன்று உள்ளது. எப்படி வாழ வேண்டும் என்பதை விடுத்து எப்படி வாழக் கூடாது என்கிறோமோ, அதில்தானே அனைவருக்கும் அக்கறை. எங்கள் அரசியல்வாதிகளும் இப்படித்தான். மக்களில் உழைப்பில் வாழ்வது இனிப்புச் சாப்பிடுவது போல் அவர்களுக்கு. ஆயுதம் ஏந்தி மக்களைச் சுரண்டுவதும் மற்றொரு ரகம். எவ்வளவு உழைத்தும் என்ன பயன்? ஒரு பக்கம் இவர்கள். மறுபக்கம் விலையேற்றம். மக்கள் படும் துயரத்துக்கு ஆறுதல் கிடையாது.

உழைப்பால் உயர்ந்த சுவீடன் பெண்மணி அன்னிகா ஹொரன்ஸ்டெம் அதிகூடிய வருமானத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். ஐக்கிய அமெரிக்க எல்.பி.ஜி.ஏ. சுற்றுலாத்துறையைச் சேர்ந்த இவர், 11,217, 687 அமெரிக்க டொலரை அதாவது, 7,124, 884 பவுணை 1993க்கும் 2002 இறுதிக்குமிடையில் வருமானமாகப் பெற்றுள்ளார். உழைப்புக்கு ஒரு உதாரணமாகத் திகழும் இந்த அம்மணியைப் பாராட்டத்தான் வேண்டும்.

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து



### சில்வியா/23.10.2004

பிரான்ஸில் வசிக்கும் சுதன் - கிருஸ்ணா தம்பதிகளின் செல்வப் புதல்வி சில்வியா தனது முதலாவது பிறந்தநாளை 23.10.2004 அன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். சில்வியாவை அன்பு அப்பா - அம்மா, அப்பப்பா - அப்பம்மா, அம்மப்பா - அம்மம்மா. மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், அன்ராமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நல்லூர் கந்தன் அருள் பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: ஏ. நாகராஜா (அம்மப்பா), 246/11 அளுத்மாவத்தை.
கொழும்பு -15

தொலைபேசி: 011 2527576.

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து

பிரான்ஸில் வசிக்கும் கிழக்கில் அக்கரைப்பற்றைச் சேர்ந்த விஜயரெட்ணம் - சுரேஜினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் விதுஜன் தனது முதலாவது பிறந்த தினத்தை Paris இல் உள்ள அவரது இல்லத்தில் 20.10.2004 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார். அவரை அன்பு அப்பா - அம்மா, பாட்டி, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார். சித்தப்பாமார், சித்தி, பிரான்ஸில் வசிக்கும் சித்தப்பாமார், மாமாமார், நண்பன் பிரகெவீன் அனைவரும் அக்கரைப்பற்று ஸ்ரீ பத்திரகாளியம்மன் அருள் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகிறார்கள்.



### செல்வன் வி. விதுஜன் / 20.10.2004



## 1 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

### செல்வன் ரா. அனுசன் / 20.10.2004

பருத்தித்துறை போயிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களும் நோர்வேயில் வசிப்பவர்களுமான ராசன் - வதனா தம்பதிகளின் செல்வப் புதல்வன் அனுசன் 20.10.2004 தனது முதலாவது பிறந்த நன்னாளை 24.10.2004 ஞாயிறு அன்று ஒஸ்லோவில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா - அம்மா, தொட்டப்பா - தொட்டம்மா (நோர்வே), அப்பப்பா - அப்பம்மா (பருத்தித்துறை), அம்மப்பா - அம்மம்மா (நோர்வே), அன்பு மாமிமார் - மாமாமார் (பருத்தித்துறை), பெரியமாமி, கட்சன் அத்தான், றிக்காட் அத்தான் (நோர்வே), எர்வின் அத்தான், றெவின் அத்தான் (நோர்வே), பெரியப்பா - பெரியம்மா, கெவின் அண்ணா, அன்பு அக்காமார் ஜெனிபர், ஜெசித்தா (நோர்வே), குட்டிமாமா - குட்டிமாமி (நோர்வே), பூட்டன்மார் - பூட்டிமார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் லூர்து அன்னையின் அருள் பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் சீருடன் வாழ மனதார வாழ்த்துகிறார்கள்.

தகவல்: அப்பா - அம்மா (நோர்வே)

## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து




### செல்வி திரிஷிகா

புத்தூர் மேற்கைச் சேர்ந்த குணசிங்கம் - மீரா தம்பதிகளின் செல்வப் புதல்வி திரிஷிகா தனது முதலாவது பிறந்தநாளை சுவிஸில் தனது இல்லத்தில் 26.10.2004 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். திரிஷி குட்டியை அன்பு அப்பா - அம்மா, சுவிஸில் வசிக்கும் குமார் மாமா குடும்பம், லண்டனில் வசிக்கும் சித்தப்பா, மாமாமார், இலங்கை புத்தூரில் வசிக்கும் அப்பப்பா - அப்பம்மா, மாமாமார், அத்தைமார், மச்சாள்மார், கொற்றாவத்தை வாரிசீமாவில் வசிக்கும் அம்மப்பா - அம்மம்மா, மாமா, அன்ராமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் செல்வச்சந்நிதி முருகன் திருவருள் பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: அங்கிள் அ. ரகுபதி, புத்தூர்.